0.4:136

# கட்டுரைத் திரட்டு

## பகுதி—1

**நான்காம் பதிப்பு**

SCANNED
SL No: 338

ஆசிரியர் :

காலஞ்சென்ற

நாவலர், பண்டித

ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

**1948**

[*Copy Right Reserved*]

# உள்ளுறை


| எண் | பெயர் | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | v |
| 1. | கல்வி | 1 |
| 2. | வள்ளுவர் வாய்மொழி | 26 |
| 3. | சுந்தரர் செந்தமிழ் | 38 |
| 4. | அறிவுடை நம்பி | 59 |
| 5. | உக்கிரப் பெருவழுதி | 65 |
| 6. | பசிப்பிணி மருந்துவன் | 73 |
| 7. | தமிழிலக்கியங்களிற் காணப்படும் இசைப் பகுதிகள் | 78 |
| 8. | முடங்கல் | 96 |
| 9. | வீரச் சுவை | 107 |
| 10. | அவலச் சுவை | 1.7 |
| 11. | இன்பச் சுவை | 12 |

# முகவுரை

பாரறியு மறிவினுமிப் பார்மே லின்ற
  பசுஞானத் தானுமெட்டிப் பார்க்கொ ணாத
பேரறிவே சிற்றறிவேற் கிருளை நீக்கும்
  பேரொளியே அங்கயற்கண் பிரியா தானே
ஆரறிவார் தமிழருமை யெண்கின் றேனென்
  அறியாமை யன்றேவுன் மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும் அறிவுண் டாக்கி
  நீயறிவித் தாலறியும் நிலமுந் தானே.

**ப**ல் யாண்டுகளாகத் தமிழன்னைக்கு யான் செய்து போதரும் எளிய பணிகளுள், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி முதலிய வெளியீடுகட்குக் கட்டுரை யெழுதுவதும் ஒன்றாகும். அங்ஙனம் எழுதிய பலவற்றையும் தொகுத்துப் புத்தக வுருவில் வெளியிடுதல் பயனுடைத்தாகும் என்னுங் கருத்தால், முதற்கண், பன்னிரண்டு கட்டுரைகளைத் தொகுத்து, கட்டுரைத் திரட்டு என்னும் பெயருடன், முதற் பகுதியாக வெளியிடலாயினன்.

கட்டுரை என்னும் பெயர் வழக்கு, மிக்க தொன்மையுடைய தென்பது, தொல்காப்பியத்துள் அப் பெயர் வருதல்கொண்டு அறியப்படும். முத் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில், ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரை என்னும் பெயருடன் உரைப் பகுதிகள் அமைந்துள்ளன; மற்றும், அதன் செய்யுட்

களிற் பலவிடத்து, கட்டுரை யென்னும் பெயர் பயின் றுள்ளது. அதன் பதிகத்தில் தந்துள்ள, கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்' என்பதற்குப் பொரு ளெழுதுமிடத்து, 'கட்டுரை—பொருள் பொதிந்த சொல்; உறுதியை யுடைய சொல்லுமாம்' என் றுரைத்தனர் அடியார்க்கு நல்லார். திரட்டு என்பதும் புறத் திரட்டு, பன்னூற் றிரட்டு, தனிப் பாடற் றிரட்டு என் றிங்ஙனம் பயின் றுள்ளது. இவ்வாற்றால், கட்டுரைத் திரட்டு என்னும் இப் பெயர் வழக்கிற்கு ஒத்த தென்பது பெறப்படும்.

இலக்கியம், வரலாறு, கலை, சுவை என்னும் பல பொருட் பெற்றியுடைய கட்டுரைகள் இதன்கண் அமைந் திருத்தலின், இதனைப் பயிலும் மாணக்கர்கட்குத் தமிழ் மொழியில் ஆர்வமும், மனவெழுச்சியும், ஆராய்ச்சி யறிவும் உண்டாகுமென்னும் கருத்துடையேன்.

இதிலுள்ள 7, 10, 11, 12 என்னும் எண்களுடைய கட்டுரைகள் திருச்சிராப்பள்ளி, அகில இந்திய வான் ஒலியில் என்னாற் பேசப் பெற்றவை; அந் நிலையத்தாரது அன்புடைய உடன்பாடு பெற்றுச் சேர்த்துக்கொள்ளப் பெற்றன.

முன் பேசியனவும், எழுதியனவுமாகிய இக் கட்டுரை களில், ஒரோவழி, சிறு திருத்தங்கள் செய்யப்பட் டுள்ளன.

பல்கலைக் கழகங்களின் பாட புத்தக நியமனக் குழு வினராகிய அறிஞர்கள் இதனை ஆதரிப்பார்கள் என்னும் நம்பிக்கை யுடையேன்.

ந. மு. வே.

# கட்டுரைத் திரட்டு

## பகுதி - 1

### க. கல்வி

பண்டை நாளி லிருந்த பெரியோர்கள், உயிர்களை ஓரறி வுயிர், ஈரறி வுயிர், மூவறி வுயிர், நாலறி வுயிர், ஐயறி வுயிர், ஆறறி வுயிர் என அறிவு வகையாற் பாகுபாடு செய்து வைத்திருக்கின்றனர். அவற்றுள், ஏனையவெல்லாம் பொறிகளான் அறியும் அறிவே உடையனவாக, மக்க ளுயிர் ஒன்றும், மனத்தான் எண்ணி யறியும் அறிவினையும் உடைய தாகின்றது. 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க. அதனாற்றான், எல்லாப் பிறப்பினும் மக்கட் பிறப்பு உயர்ந்ததாகக் கொள்ளப்படுகின்றது. மக்க ளுள்ளும், உயர்வு தாழ்வுகள், அறிவு விளக்கத்திற் கேற்பவே அமைகின்றன. குணம் செயல்களும், உயர்வு தாழ்வுகட்குக் காரண மாயினும், அவை, அறிவைச் சார்ந்தே நிகழ்தலின், அதனுள் அடங்கற் பாலன வாகும். அறிவு விளக்கம், பொருள்களை ஆராய்ந்து அறிதலால் உண்டாவது. நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐம் பூதங்கள், அவற்றா லாய உலகங்கள், உலகி லுள்ள பொறிகளா

னறியும் பருப் பொருளும் அவற்ரு னறிய லாகா நுண் பொருளு மாகிய எண் ணிறந்த உயிர்ப் பொருள் உயி ரல் பொருள்கள், அவற்றின் குணம் செயல்கள், தோற்ற நிலை யொடுக்கங்கள், அவற்றை ஒழுங்குபடுத் தமைத்து மக்கள் பயன் கொள்ளும் நெறிகள், மக்களின் இன்ப துன்ப விளைவுகள், அவற்றின் காரணங்கள் என் றிவற்ருேரன்ன பலவும் ஆராய்ந் தறியற் பால வாய பொருள் களாம். அவற்றை ஆராய்ந் தறிதல் என்பது, அறிவு முதிர்ச்சி யுடைய ஆன்ருேர்களாலே தொன்று தொட்டு அவ் வத் துறையில் இயற்றப்பெற் றுள்ள நூல்களைக் கற்ற லானே கைவரப் பெறுவது. அங்ஙனம் கற்ற லாகிய தொழிலும், கற்கப்படுவன வாகிய நூல்களும், கற்றலா னெய்தும் அறிவும் கல்வி யென்னும் பெயரால் வழங்கப் படுவன வாகும். கல்வி என்பது: நூல், நூலறிவு என்னும் பொருள்களிலேயே பயின்று வழங்குகின்றது. 'கல்வி கரையில' என்புழி, நூலும், 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி' என்புழி, நூலறிவும் பொருளாதல் காண்க. மக்கள், நூல்களைப் பயிலும் அளவிற் கேற்பவே, அவர்க ளறிவு, நுட்பமும் பெருக்கமும் எய்துகின்றது:

> 'தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு'
>
> 'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு'

என்னும் முதுமொழிகள் இவ் வுண்மையை அறிவுறுத்து நிற்கின்றன.

இனி, மக்கள் நூல்களைக் கற்ற லின்றியே பொருள் களை நேரிற் கண்டு, அவற்றி னியல்புகளைத் தம் இயற்கை யறிவால் ஆராய்ந் தறிந்து அறிவு விளக்க மெய்துதல்

சாலாதோ எனின், சாலாது; என்னை? மக்கள் யாவரும் பிறந்த பொழுது எதனையும் தாமாக அறியும் அறி வின்றி யிருந்து, பின் ஒரோ வொன்றாகப் பிற ருதவியால் அறிந்து வருதல் கண்கூ டாகலின், அங்ஙனம் அறிந்து, ஓரளவு அறிவும், ஊனும் பெற்றவழி யன்றி, இயற்கை யறிவால் ஆராய்ந் தறிதல் என்பதற்கு இடனே யின்று; பின்னரும், எட்டுதற் கரிய கால இடங்களிற் பட்டவற்றை அறிதற்கு இயற்கை யறிவு கருவி யாதல் இல்லை; நிகழ் காலத்தே அணிமைக்கண் உள்ள தொன்றும், பொறிகளான் அறிய லாகாத நுண் பொரு ளாயின், அஃது அவ் வறிவிற்குப் புல னாகாது; நேரி லுள்ள பருப் பொருளை ஆராயப் புகுந்த வழியும், அத னியல்புகளை ஒருதலையாக அறியலா மென் னும் உறுதிப்பா டின்று; அறியலா மெனினும், மக்களின் சிறிய வாழ் நாளில், யாதானும் ஒன் றிரண்டு அறியக்கூடு மன்றிப் பல பொருள்களை ஆராய்ந் தறிந்து நிறைந்த அறி வைப் பெறுதல் அமையாது; அங்ஙனம் அறியும்வழி நேரும் இடர்ப்பாடுகளும், இன்னல்களும் பலவாம். ஞாயிற்று மண்டிலத்தின் அளவு, அதிற் கலந் துள்ள பொருள்கள், அதன் ஒளியும், வெம்மையும் சென்று பொருந்தும் இடங்கள் என்பவற்றை வேறு கருவி யின்றித் தன் இயற்கை யறிவால் ஆராயப் புகுந்தா னொருவன், அவற் றைப் பற்றி எத் துணை யறிவு கைவரப் பெற்றவ னவன்? பல் வேறு வகையான பூடுகள், அவற்றின் வித்து வேர் தோல் தழை பூ காய் கனிகள், இரும்பு முதலிய தாதுப் பொருள்கள் என்னும் இவை முதலானவற்றின் தனித் தனியான பண்புகளையும், அவற்றின் கலப்பா லுண்டாகும் தன்மைகளையும் ஆராய்ந் தறிந்து, 'இவ் வேதுவா லுண் டாய, இந் நோய்க்கு இதனால் இன்னவாறு மருந் தமைத்து

உண்க' என மருத்துவ நூலோர் கூறியிருப்பவற்றைக் கொள்ளாது விடுத்து, ஒருவன் தன் இயற்கை யறிவால் 'அவை யனைத்தையும் ஆராய்ந்து காண்பல்' எனப் புகுவனேல், அவன் பெறும் அறிவும், எய்தும் இன்னலும் எத் துணைய வாகும் என்பதனை ஓர்மின்கள். ஒவ்வொரு துறையிலும் தொல்லோர் கண் டறிந்தவற்றை விடுத்துப் புதுவதாக ஆராய்ச்சியைத் தொடங்குவார் நிலைமை இப் பெற்றியதே. இப்பொழு துள்ள மக்களின் அறிவுகளும், செய்கைத் திறங்களும் உலகிலே தோன்று தொட்டுத் தொடர்ச்சியாய் வந்துகொண் டிருக்கிற அறிவின் விளைவே யன்றி வேறில்லை. இப்பொழுது மக்க ளனைவரும் தொல் லோரின் அறி வனைத்தையும் கையகன்று, இயற்கை யறி வொன்றுகொண்டு நிற்பரேல், அவர் நிலைமை பேரிருளில் விடப்பட்ட கண்ணிலாக் குழவிகளின் நிலைமையையே ஒக்கும்.

'இருளே யுலகத் தியற்கை இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை'

என்னும் முதுமொழி, இவ் வுண்மையை அறிவுறுத்தல் காண்க. கற்ற அறிவுடைமை என்பது, பல்வேறு கால தேயங்களி லிருந்த எண் ணிறந்த பெரியார்களின் அறி வனைத்தையும் ஒருங்கே பெற்று அறிவுடைய ராதல் என் பதே யாகும். இங்ஙனம் பல் லாயிரவர் அரிதில் உழந்து தேடிய பேரறிவுப் பொருட் குவை யனைத்தும் பெற்று நுகரும் பேறு, கற் றறி வுடையார்க்கே வாய்ப்ப தாகவும், மக்களாய்ப் பிறந்தாருள்ளே பலர் கல்வி கல்லாது கண்ணிலிகளாய் முகத்திற் புண்கொண்டு, 'தனக்குப் பாழ் கற்றறி வில்லா வுடம்பு' என்றபடி பாழான உடலைச் சுமந்து திரிந் துழல்வது தகுதி யாமோ?

இனி, மக்களாய்ப் பிறந்தா ரனைவரும் கல்வி கற்க வேண்டு மென்பதும், அங்ஙனம் கற்றலின் பயனாவது அறிவு பல்குத லென்பதும் மேற் கூறியவற்றால் விளக்க மாம். சுருங்கக் கூறின், கல்விக்குப் பயன் அறிவு எனல் அமையும். எனவே, கற்பாரின் நோக்கமும் அறிவுப் பெருக்க மெய்துதலே யாகல்வேண்டு மென்பது போதரும். இக்காலத்திலோ, மிகவும் புல்லியதொரு நோக்கங்கொண்டு, பெரும்பாலும் கற்குந் தொழில் நடைபெறுகின்றது. இஃதொழிந்து, முற் கூறிய பெருநோக்குடன் கல்வி பயிலப் பெறுங் காலத்திற்றான், உண்மையான கல்வி இந் நாட்டில் நிலவுவ தாகும். கல்விக்குப் பயன் அறிவுடைமை யெனவே, அறிவால் எய்தலாகாத தொன் றின்மையின், கல்வி யுடையார், எல்லா நலங்களும் எய்துதற் குரிய ராவ ரென்பது பெறப்படும். கல்வியின் பயனைக் குறித்து,

'கைப்பொருள் கொடுத்துங் கற்றல், கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளைக்கு நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகன் பொன்னும் புகழுமாந் துணைவி யாக்கும்
இப்பொரு ளெய்தி நின்றீ ரிரங்குவ தென்னை யென்றான்'

என்று திருத்தக்க தேவரும்,

'அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை'

என்று குமரகுருபர வடிகளும் கூறியன தெளிந்த உண்மை யாகும்.

இனி, கல்வியானது பொருள் பயக்குமா றெங்ஙனம் எனின், பொருளொன்றே கருதிப் பெரிதும் கல்வி பயிலப் பெற்று வரும் இற்றை நாளில், அஃதிவ்வாறு பயக்கு

யென எடுத் துரைத்தல் மிகை. அன்றியும், கல்வியானது 'கேடில் விழுச்செல்வம்' என்பதனையும், ஏனையது பொய்ப் பொருள் என்பதனையும் சிந்திப்பின், அது பொரு ளும் பயக்கு மென் றுரைத்தல், கல்வியின் சிறப்பைக் குறைத்தலே யாகும்.

கல்வி ஒளியையும், புகழையும் நல்குதல் குன்றின் மேல் விளக்குப்போலும். கற்றாரை விரும்பிப் பேணுதா ரிலர். மக்களிடத்து இயற்கை யன்புடைய தாயும், சிறப்பின் பாலால் மனந் திரிந்து கற்ற மகன்பாலே கழி யன் புடைய ளாகின்றாள். வீட்டில் இங்ஙனமாக, நாட்டிலோ எனில், விறகிற் பற்றி யெரியும் அழல் பெரிய தாயினும், அதனை யெள்ளித் திரியிற் பற்றி யெரியும் சிறிய அழலை வணங்கு தல் போலக் கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்ற இளையானையே யாவரும் போற்றுகின்றனர். நாட்டினை யாளும் வேந்தனும், ஆண்டில் முதியனை வருக வென் றழையாது, இளைய னாயினும் கல்வி யறி வுடையோனை அழைத்துச் சிறப்புச் செய்து அவன் வழியிற் செல்லு தலும் உடைய னாகின்றான். கற்றார்க்குத் தம் மூர் என்ப தொன் றில்லை; அவர்க்கு யாதும் ஊரே; யாவருங் கேளிர். ஒரு நிலத்தினை ஆளும் அரசனுக்கும் அவனது நாட் டிலேதான் சிறப்பு; அங்கும் அன்புடன் சிறப்புப் பெறு வது மிக்க அருமை. கற்றார்க்கோ, சென்ற இட மெல் லாம் சிறப்பு. புவி யாளும் வேந்தர்களும், கவி யரசர்கட் குச் சிவிகை சுமந்தது முதலிய செய்திகள் கேட்கப் படு கின்றன. ஒப் புயர் வற்ற கல்வியாளரின் புகழுக்கு எல்லை யேது? **திருவள்ளுவர், கம்பர்** முதலாயினாரின் புகழ், உலகம் அழியினும் அழிவ தாமோ? புலவ ராயினார், தம் புகழை நிலை நிறுத்துவதுடன், செங்கோன்மை, கொடை,

வீரம் முதலியவற்ருற் சிறப் பெய்திய பிறருடைய புகழை யும், தாம் இயற்றும் நூல்களால் நிலைபெறச் செய்கின்ற னர்.' புலவ ரென்பார் இல்லை யாயின், முற் காலத்திற்கும், பிற் காலத்திற்கும் என்ன தொடர்ச்சி யுண்டு? அப் பொழுது உலக மென்பது இருள் செறிந்த தொரு வனமே யன்றே?

இனி, கல்வியால் விளையும் இன்பத்தைச் சிறிது நோக்குவோம்: உலகினர் பலராலும் நன்கு மதிக்கப் படுதலே இன்பம் விளைப்ப தொன்று. ஆயின், உண்மைக் கல்வி யுடையார்க்கு, அங்ஙனம், தம்மைப் பிறர் மதித்தல் முதலியவற்ருன் உண்டாகும் இன்பம், அத் துணைப் பெரி தன்று. பிற்றை நாளில், உல கெலாம் போற்றும் பெரும் புலமை யெய்தினர் சிலர், தாம் உயிர் வாழு நாளில் யாரா னும் மதிக்கப்படா திருத்தலும், அவர், அம் மதிப்பை யொன்ருகக் கொள்ளாது புலமை நடாத்திச் சேறலும் கண் டும், கேட்டும் அறியற் பாலனவே. கல்வி யுடையார், முன் அறியாத நுண்பொருள் பலவற்றைத் தமது கலை யுணர் வால் அறியுந்தோ றெய்தும் இன்பமே சாலவும் பெரிது. மற்று, நல் லிசைப் புலவரின் சுவை கனிந்த செய்யுட் களில் உள்ளம் அழுந்தி நின்று, அவற்றின் சொற் பொருள் விழுப்பங் கண்டு, தம்மையு மறந்து நுகரும் இன்பத்திற்கு ஓர் எல்லை யுண்டோ? 'கூடலி னுய்ந்த ஒண்டீந் தமிழின் றுறைவாய் நுழைந்தனையோ' என மாணிக்க வாசகப் பெருமானும் கண்டு கூறிய கற்றலின் வருத்தத்திற்கு, அதனுல் விளையும் இன்ப மன்றே பரிசிலாக நின்று, அவனை மேலும் அத் துறையில் ஊக்கா நிற்பது?

'எண்ணெயு நானமு மிவைமுழ்கி யிருடிருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி யொதிர்ந்துறை கழித்தனபோற்

கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வாளைத் தகையவே'

என்னும் சிந்தாமணிச் செய்யுளையாதல்,

'ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்'

என்னும் கம்ப ராமாயண விருத்தத்தையாதல்,

'யாழு மெழுதி யெழின்முத் தெழுதி யிருளின் மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டியென் சொற்பிறவி
வழு மெழுதா வகைசிதைத் தோன்புலி யூரினமாம்
போழு மெழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே'

என்னும் திருக்கோவை மணியையாதல்,

'எழுந்தலகை நலிந்தழலு மவுணர்கடம் புரமூன்று மெழிற்கண்ணுடி
உழுந்துருளு மளவையினொன் ளெரிகொளவெஞ் சிலைவளைத்தோ
[னுறையுங் கோயில்
கொழுந்தளகைகாட்டக் கோகநத முகங்காட்டக்குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டு மிழலை யாமே'

என்னும் தேவாரத் திருப் பாட்டையாதல்,

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ வறியேனென் றதிசயித்தார்'

என்னும் பெரிய புராணத் திருச் செய்யுளையாதல் படிக்கும்பொழுது, செந் தமிழ்ப் புலவர் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்பம் இனைத் தென்பது அன்னார்க்கே தெரியும். பெரிதும் உவகைச் சுவை பற்றியனவே இங்கே காட்டப் பெற்றன. வீரம், வியப்பு முதலிய ஏனைச் சுவை

பற்றியனவும் இங்ஙனமே கொள்க. இத் தகைய இன்பங் கருதியே,

'ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கல்வி'

என்று தணிகைப் புராண முடையாரும்,

'தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்று'

என்று தஞ்சைவாணன் கோவை யுடையாரும் கூறிப் போந்தனர். தெய்வப் புலமைத் திருவள்ளுவனரோ,

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்றதன்றியும், நற்குண முடையாரது நட்புப் பழகுந் தோறும் இனி தாகு மென்பதற்கு உவமையாக,

'நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

எனக் கூறியருளினர். கம்பநாடர் தாம் நுகர்ந்த செய்யு ளின்பத்தைப் பல விடத்துங் காட்டிச் செல்கின்றவர், சீதா பிராட்டியையே,

'செஞ்சொற் கவியின்பம்'

என்று பாராட்டுகின்றார். இங்கே காட்டியவற்றி லிருந்து கல்வியால் விளையும் இன்பம் எத் தகைய தென ஒருவாறு புலனுதல் கூடும்.

இனி, 'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்' என்ற படி, இவ் வுலகிலே அடைந்தாரைப் பிரிதலினாலும், பொறுத்தற் கரிய பிணியாலும், பொருட் கேட்டினாலும், பிறவாற்றாலும் மக்களுக்குத் துன்ப முண்டாதல் இயல்பே. கல்வி யில்லாதார், ஊழாலே தமக்குத் துன்பம் நேர்ந்த விடத்து, அதனுள் அமிழ்ந்து கரை காணாது வருந்துவர்;

முன் னறிந்து காக்கத் தகும் துன்பங்களையும் அவர்கள் காக்க வல்லுந ரல்லர்; அன்றி,

> 'அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
> செறுவார்க்குஞ் செய்த லரிது'

என்றபடி, பகைவர் பலர் கூடிச் செய்ய வொண்ணாத இன்னல்களைத் தாமேயும் தமக்கு ஆக்கிக்கொள்வர். கல்வியுடையாரோ என்றால், துன்பங்களின் காரணங்களை நன்கு அறிந்திருத்தலின், அவை வாராமற் பெரிதும் காக்க வல்லுநர்; ஊழான் ஒரு துன்பம் உற்ற விடத்தும், கடவுட் பணி முதலியவற்றால், அதன் வலியைக் குன்றுவிப்பர்; பண்டு, இராமன், அறன்மகன் முதலாயினோர்க்கும் கொடிய துன்பங்கள் நேர்ந்தமையும், அவர்கள் அவற்றான் மாழ்குத லின்றி, நோன்று, இன்ப துன்பங்களை ஒரு பெற்றியே நோக்கி, அவற்றை வென்று திகழ்ந்தமையும் முதலிய வரலாறுகளைச் சிந்தித்தும் அதனைப் பொறுப்பர்; இரு வினைப் பயன்களுள், நல்வினையின் பயனாகிய இன்பம் வந்தபொழுது அதற் கமைந்திருந்த யாம், தீ வினைப் பயனாகிய துன்பம் வந்தபொழுது, அதனைப் பொறாது அல்லற் படுவது தகுதி யன் றென்பது உன்னியும், ஊழான் எய்தற் பால தாய துன்பத்தை, ஒருதலையாக நுகர்ந்தே யாகல் வேண்டு மென்பதும, அது குறித்து அல்ல லுற் றழுங்குதல் அதற்குத் தீர் வாகா தென்பதும் கருதியும், அதனான் வருந்தா திருப்பர்; துன்ப மாவது, அறிவின் ஒரு திரிபே என்பதும், அதனை மாறி நினைக்க, அஃ தொழியு மென் பதும் ஓர்ந்தும், அவ்வாறு அதனை மாற்றுவர்; துன்ப மானது உள்ளத்திற் புகுந்து வருத்துதற்கு அற்றம் பெறு வாறு, இடையறாது நூற்பொருளை ஆராய்தலினாலும் அதனை யொழிப்பர்; தனக் குவமை யில்லாதான் திருவடி

களைச் சிந்தித்தலினாலும் அதனைப் போக்குவர். நெஞ்சு ஒன்கு பாத் துற்றோ ராகிய அன்னோர், உடற்கு வரும் இடர் முதலியன அடுக்கும் ஒரு கோடி யாயினும் நடுக்க முறுத லிலர். இவை யெல்லாம் கருதியே, ஆன்றோர்கள்,

'நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும்' எனவும்,
'மம்ம ரறுக்கு மருந்து' எனவும்,
'உறுங்கலனொன் றுற்றுழியுங் கைகொடுக்கும்' எனவும்,
'உற்றுழி யுதவுங் கல்வி' எனவும்

கூறிப் போந்தன ரென்க.

இனி, கல்வி யானது அறத்திற்குக் கருவி யாதல் யாங்ஙன மெனின், இடையறாது நூற் பொருளை ஆராய்தலினாலே தவஞ் செய்வார்போன்று மனம் ஒடுங்கி நிற்றலானும், நல்லம் யா மென்னும் நடுவுநிலை யுடையராய் வாய்மை பேசுதலானும், அன்பும் அருளு முடையராய் எவ் வுயிர்க்கும் இன்னா செய்யாமையானும், கல்வியுடையார் அறம் வளரும் செழு நிலனாதல் தேற்றம். மற்று, அவர் யாதொரு பழி பாவத்திற்கும் இட னின்றி, வாழ் நாள் முழுவதும் இரவு பகல் உழந்து தேடியதும், எல்லா நலங்கட்கும் காரண மாயதும், நிலைபே றுடையதும் ஆகிய கல்விப் பொருளை, ஏனையர்க்கு வரைவின்றி வழங்கும் பேரறமானது பெரும்பாலும் தீவினையால் எய்தப் பெறுவதும், இன்பமே யன்றித் துன்பமும் விளைப்பதும், நிலையற்றதும் ஆகிய ஏனைப் பொருளை வழங்கும் அறத்தினும், எத்துணையோ மடங்கு பெரிதா மென்பதற்கு ஐய மின்று. பொருளால் அறஞ் செய்யுமிடத்தும், கல்வி யில்லாதார் இக் காலத்து இவ் விடத்து, இவ் வறம் செய்யற்பால தென்றும், அது செய்யும் முறைமை யிது வென்றும், அதனுல்

எய்தும் பயன் இன்ன தென்றும் ஓர்ந் துணராது செய் தலின், அவ் வறம் திட்ப முடைய தாகாது.

> 'பன்னும் உணுவற் பயன்றே ரறிவிலார்
> மன்னு மறங்கள் வலியிலவே'

என்று சிவப்பிரகாச வடிகள் கூறுதலுங் காண்க. அறத் தின் பய னளவு, பொரு ளளவிற்று அன்றென்பது,

> 'இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
> றுணைத்துணை வேள்விப் பயன்'

என்னும் திருக்குறளாலும்,

> 'அறப்பயனும்,
> தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
> வான்சிறிதாப் போர்த்து விடும்'

என்னும் நாலடியார்ச் செய்யுளாலும் ஓர்ந் துணரப்படும். எனவே, கல்வி யில்லாதார் பெரும் பொருள் செல விட்டும் எய்த லாகாத அறத்தினைக் கற்றவர் சிறிது பொருள் கொண்டும் எய்துதற் குரிய ராவர் என்பது பெறப்படும்.

இனி, வீடுபேற்றுக்குக் காரணமாவது, மெய் யுணர் வாகலானும், கல்வி, வீடும் பயக்கு மெனல் அமை வுடைத்தே. இதனை,

> 'கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
> புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தால்
> தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
> இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்
> உயர்ந்த வுலகம் புகும்'

என்னும் நான்மணிக் கடிகைச் செய்யுள் நன்கு விளக்கு தல் காண்க. இக் கருத்தானே,

'எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே'

என்று திருமந்திரமும்,

'கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை'

என்று திருவிசைப்பாவும் கூறுவ வாயின. இங்ஙனம் எல்லாப் பேற்றுக்கும் அடிப்பட்ட கருவியா யிருப்பது கல்வி யென்னும் இவ் வுண்மை, கல்வியிற் பெரியராய கம்பரால் அயோத்தி மா நகரைச் சிறப்பித் துரைக்கும் ஒரு செய்யுளில் வைத்து நன்கு விளக்கப் பெற்றுளது. அது,

'ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே'

என்பது. 'கல்வி யென்னும் ஒரு முளை முதலில் முளைத்து, கேள்வியாகிய கிளைகளை விடுத்து, அரிய தவ மென்னும் தழை தழைத்து, அன்பாகிய அரும் பரும்பி, அற மென்னும் மலர் மலர்ந்து, போக மாகிய பழ மொன்று பழுத்தது போலும் அந் நகர், என்னும் இதனால், மக்க ளெய்தும் முடிந்த பயனாக வுள்ளது இன்பப் பேறு என்பதும், அதற்குப் பரம்பரையிற் காரணமாக விருப்பது கல்வி யென்பதும் பெறப்படுதல் காண்க. போகம் என்பது இம்மை யின்பம், மறுமை யின்பம், வீட் டின்பம் என்னும் மூன்றையுங் குறிப்பதாகக் கொண்டு, அவற்றிற்குத் தக, அறம் முதலியவற்றிற்கும் பொருள் கொள்ளுதல்வேண்டும்.

இனி, இதுகாறும் கல்வியின் பேறுகளை விரித்துரைத்தன கொண்டு, கல்லாதார்க்கு எவ்வாற்றானும் உய்தி யில்லை; அவர் எப் பேறும் அற்றவரே யென்றுதல், கற்றவ ரென்போர் அனைவரும் எல்லாப் பேறும் ஒருங்கு பெற்றவ ரென்றுதல் கோட லமையாது. கல்லா ராயினும் கற்றாரைச் சேர்ந் தொழுகுதலானும், கேள்வியானும், நல் லறிவு தலைப்படுதலும், அதனால், அறம் பொரு ளின் பங்கள் எய்துதலும், துன்பத்தினீங்குதலும் கூடும்.

'கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை'

என்பது **பொய்யா மொழி** யன்றோ? கற்றா ருள்ளும் முற் கூறிய பேறுகள் அற்றாரும், எவ்வ முழப்பாரு முளர். எனினும், அவ் விழப்பிற்கும், உழப்பிற்கும் காரணம், அவரது கல்வி யன் றென்பது கடைப் பிடிக்க. மக்கள் இம்மையில் எய்துந் துன்பத்திற்குக் காரணம், முன்னரே செய்துகொண்ட வினையும், பல பிறப்பினும் பயின்று வந்த வாதனை வலியால் எளிதிலே தவிர்க்க வொண்ணாத, இப் பொழுது செய்யும் வினையு மாம். கல்வி, எவ் வகையினும் அத் துன்பத்தை யொழிப்பதற்கே கருவி யாகின்றது.

கல்வியால், அறம் பொரு ளின்பமாகிய பயன்கள் இம்மையில் மிக விளையா தொழியினும்,

'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

என்று **செந்நாப்போதார்** கூறியவாறு, அது, வரும் பிறவிகளிலும் தொடர்ந்து, அப் பயன்களை விளைத்து, உயிர்க்கு அரணாதல் ஒருதலை.

இனி, கற்க வேண்டுவன யாவென நோக்குவோம்: வடமொழி வாணர், கலைகள் அறுபத்து நான்கு என வகுத்துள்ளனர். அவற்றுள், ஆகருடணம் முதலிய அட்டகன்மங்கள், பல் வகைச் சாலங்கள், நவ மணிப் பரீட்சைகள், யானை, குதிரை முதலியவற்றின் பரீட்சைகள் என்றிவை முதலிய வெல்லாம் தனித்தனி ஒவ்வொரு கலையாக எண்ணப்பட்டுள்ளன. அவற்றுட் சேராத வித்தைகளும், தொழிற் றிறங்களும் மற்றும் எத்தனையோ உள்ளன. மேல் நாட்டினரின் ஆராய்ச்சியால் உண்டாகிய புதிய கலை வகைகளும் பல. இவை யாவும் எல்லாராலும் கற்றற்பாலன வல்ல; கற்க வேண்டுவனவும் அல்ல. இவற்றிற் பெரும்பாலன, தொழிற் பயிற்சி என்னும் பெயரால் வேறு பிரித் தெண்ணத் தகுவன. மாந்தரனைவரும் ஒருதலையாகக் கற்கவேண்டும் கல்வி யாவது, அறிவை வளர்த்து, மக்கட் பண்பை நெறிப்படுத்தி, உண்மையை உணர்த்தி, இம்மை மறுமை வீட் டின்பங்களை நல்க வல்லனவாய்ப், புலத் துறை முற்றிய சான்றோர்களால் அவ் வம்மொழிக்கண் இயற்றப்பட்டுள்ள இலக்கியங்களையும், விதி நூல்களையும், உண்மை நூல்களையும் கற் றுணர்தலாம். அவற்றின் பொருள்களை ஐயந் திரிபற உணர்தற்கு இலக்கண நூற் பயிற்சியும் அளவை நூற் பயிற்சியும் இன்றியமையாதன வாகலின், அவையும் ஒருதலையாகக் கற்க வேண்டுவன வாகும். அவற்றின் இன்றியமையாச் சிறப்பு நோக்கியே,

> **'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்**
> **கண்ணென்ப வாழு முயிர்க்கு'**

எனத் தெய்வப் புலவரும் அருளிச் செய்வா ராயினர். தமிழைப் பொறுத்த வளவில், எட்டுத் தொகை, பத்துப்

பாட்டு, சிலப் பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் என்னும் இலக்கியங்களும், திருக் குறள், நாலடி நானூறு, பழமொழி நானூறு, முதலிய விதி நூல் களும், சமய குரவர் முதலாயினோர் அருளிச்செய்த சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், வைணவ சமயப் பெரி யார்கள் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தமும் ஆகிய உண்மை நூல்களும், தொல்காப்பியம் என்னும் கருவி நூலும் கற்கவேண்டிய தலைசிறந்த நூல்களாகும். துறை தோறும், மற்றும் சிறப்புடைய நூல்கள் பல வுள்ளன. தொல்காப்பிய உரைகள், களவியல் உரை, திருக்குறட் பரிமேலழகர் உரை முதலிய உரைகளும் படித்தறியற் பாலன. இவை யனைத்தும், நன்கு கற்றோரே தமிழிற் புலமை யுடையோ ராவர். உண்மை நூல் ஆராய்ச்சி செய் வோர், சிவ ஞான போதம், சிவ ஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த நூல்களையும், அவற்றிற்குச் சிவஞான யோகிகள் இயற்றிய உரைகளையும் கற்றுணர்தல் வேண் டும். முற்குறித்த நூல்க ளுள்ளே, திருக் குற ளானது உறுதிப் பொரு ளெய்துதற் குரிய மக்கள் ஒழுகலாறுகளை வரையறுத் துணர்த்தும் சீரிய விதி நூலாக இருப்ப தன்றி, ஒப் புயர் வற்ற திப்பிய இலக்கிய மாகவும், உண்மை நூலாகவும் திகழ்கின்றது.

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து — முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா'

என ஆன்றோர் கூறியது எட்டுணையும் புனைந்துரை யன்று. தமக்கு எய்ப்பில் வைப்பாகக் கிடைத்திருக்கும் அம் மெய்ப் பொருட் களஞ்சியத்தில் நுழைந்து, தம் அறிவால்

முகந்த அரும் பொருள்களை நுகர்ந்து மிடி தீர்ந் தின்புற் றிருத்தல் தமிழ் மக்கள் எல்லாருக்கு முரிய கட னாகும். தமிழரே யல்லர்; பிற மொழியாளரில் அம் மொழிகளைக் கற்றுத் துறைபோயினாரும், தம் உணர்வு ஐயந் திரி பில்லா தும், தம் புலமை குறைபா டில்லதும் ஆதலை விரும்பின், முடி வாகக் கற் றுணரற் பாலது **திருக்குறள்** என்னும் தெய்வச் செந் தமிழ்த் திரு மறை யென்பது தேற்றம்.

இனி, கற்கத் தகுந்தன வாகிய இத் தகைய நூல்களை எங்ஙனம் கற்றல் வேண்டு மென்று பார்ப்போம்: 'கற்க கசடறக் கற்பவை' என்றார் **திரு வள்ளுவர்.** கச டறக் கற்ற லாவது ஐயம், திரிபு அறக் கற்ற லாகும். ஐய மாவது: குற்றியோ மகனோ, கயிறோ அரவோ, இப்பியோ வெள்ளியோ என்றாற்போல ஒன்றிலே துணிவு பிறவாது நிற்கும் பல தலை யாய உணர்வு. திரி பாவது: குற்றியை மக னென்றும், கயிற்றை அர வென்றும், இப்பியை வெள்ளி யென்றும் உணர்தல்போல், ஒன்றனைப் பிறி தொன் றாகத் துணியும் மயக்க வுணர்வு. ஒருவன் எத்தனை நூல்களைப் பரிந்து தேடிப் படித்து, அவற்றைத் தன் நெஞ்சி னிட மெல்லாம் நிறைத்து வைப்பினும், அவற்றின் பொருளை உள்ளவா றுணரா னாயின், அவன் எய்தும் பயன் என்னை? பல நூல்களையும் பயின்று, அவற்றின் பொருளை நுண்ணி தின் ஆராய்ந் துணர்ந்த அறி வுடையோரே கற்றார் எனப் பெறுவர். நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப பல நூல் களினுஞ் சென்ற அறி வில்லாதவன் யாவன், அவன் கல் லாதவன் என்பது தோன்ற, **வள்ளுவனாரும்,** கல்லாமை என்னும் அதிகாரத்தில்,

**'நுண்மா ணுழைபுல மில்லா னெழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று'**

என்றமை காண்க. அத் தகைய நுண் ணறிவு இயல்பிலே வாய்க்கப் பெறுதாரும், நூல்களை இடையறுது பயின்று ஆராய்தலினுல் அதனைப் பெறுதல் கூடும். நூ லாராய்ச்சி யும் நுண் ணறிவும் ஒன்றற் கொன்று துணையாக நிற்றல் கண்கூடு. எனவே, கல்வி என்பது தொல்லோர் இயற்றிய நூல்களை அப்படியே பாடஞ் செய்த லென்ப தன்று; அவற்றை நன்கு ஆராய்ந்து, பொரு ளுண்மை காண்டலே கல்வி யாகும். இன்னும் பார்க்கின், அவற்றின் பொருள், அல்லது கருத்தை அறிதல் மட்டும் போதாது; அவை ஒன் றற் கொன் று மறுதலை யாயவழி, அவற் றுள் மெய் யிது, பொய் யிது வெனத் துணிதலும் வேண்டும்.

"பத்தோ டொன்பது பாடை நூல்களும்
மாறு படுதல் வழக்கே யன்றியும்
ஒவ்வொரு பாடையி னுள்ளே யோரின்
பலநூன் மாறு படுமே யன்றியும்
ஒவ்வொரு நூற்கட னுள்ளே யோரின்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தனுள்
ஒன்றனை யொன்றே யொழிக்கு மன்றியும்
ஓரதி காரத் துள்ளே யோரின்
ஓரியல் விதியினை யோரிய லொழிக்கும்
ஓரிய லதனி னுள்ளே யோரின்
ஒருசூத் திரவிதி பொருசூத் திரவிதி
தன்னைத் தடுத்துத் தள்ளு மன்றியும்
ஒருசூத் திரத்தி னுள்ளே யோரின்
ஒருவிதி யதனை யொருவிதி யொழிக்கும்
நூலா சிரியர் கருத்தினை நோக்காது
ஒருசூத் திரத்திற் கொவ்வொரா சிரியர்
ஒவ்வொரு மதமா யுரையுரைக் குவரே
அவ்வுரை யதனு ளெழுத்தவர் சகங்கட்கு

> அவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
> கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரோ'

என **இலக்கணக் கொத் துடையார்** எடுத்துக் காட்டிய வாறு, தொல்லை நூல் உரைகளின் அமைப்பு முறையை யும், அவை ஒன்றை யொன்று மறுத்தும், ஒன்றோ டொன்று முரணியும் செல்லு மாற்றையும் ஓரின், உண் மைப் பொருள் காண்டற்கு ஆராய்ச்சி எத் துணை இன்றி யமையாத தென்பது புலப்படும். இக் கருத்தா னன்றே,

> 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு'

எனப் **பொய்யில் புலவரும்** கூறிவைத்தனர். ஆராய்ச்சி யின்றேல், மக்களின் அறிவு வளர்ச்சி யடைதற்கு வழி யில்லை. ஒரு மொழியானது துறைதோறும் எண் ணிறந்த நூல் உரைகளைக் கொண்டு மிளிர்வது, அம் மொழியினை யுடைய மக்களின் ஆராய்ச்சித் திறத்திறைல் ஆயதே யாம். மே ஞட்டின ரிடத்தில்போல நம்மவ ரிடையே ஆராய்ச்சி காணப்படாமையாற்றான், இற்றை நாளிலே நம் நாட்டு மொழிகள் வளர்ச்சி யற் றிருக்கின்றன. ஆனால், நம் முன்னோர் ஆராய்ச்சி இன்ன தென அறியாதா ரல்லர். முப்பது நாற்பது நூற்றாண்டுகளின் முன்பே தமிழ் மக்கள் ஆராய்ச்சி செய்யு முறைமையையும், அதன் பெருமையை யும் நன் கறிந் திருந்தனர். மிக்க தொன்மை யுடைய தாகிய **தொல் காப்பியம்** என்னும் நூலே தமிழின் வழக் கினும் செய்யுளினும் உள்ள எழுத்துச் சொற் பொருள்களை முற்ற ஆராய்ந்து முறைப்படுத் தியற்றப் பெற்ற தன்றோ? **தொல் காப்பியர்** கூறியிருக்கும் நூ லிலக்கணம், உரை யிலக்கண மெல்லாம் ஆராய்ச்சியை அடிப்படை யாகக் கொண்டனவே யாகும். அவர், உரையைக்

காண்டிகை யென்றும், உரை (விருத்தி) யென்றும் இரு வகைப்படுத்து வைத்து,

'சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே'

என்றும்,

'மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கை யும் செவ்விதின் நீக்கித்
தெற்றென வொருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்'

என்றும் உரை யிலக்கணங் கூறியிருப்பதனை உய்த்துணர வல்லார்க்கு, இவ் வுண்மை புலனாகாநிற்கும். அவர், 'என்மனார் புலவர்' என்று கூறியிருப்பது அவருக்கு முன்னும் அது தலைசிறந்து நின்றமையைக் காட்டுகிறது. ஒரு நூல் கற்றற்கண் மன வெழுச்சி யுண்டாதற்கே அந் நூலின் முகத்தே ஆராய்ச்சி யுரை யொன்று அமையப் பெற வேண்டுமென முன்னையோர் கருதி யிருந்தன ரென்பது, ஆக்கியோன் பெயர் முதலிய எட்டனையும், காலம் முதலிய மூன்றனையும் வாய்ப்பக் காட்டும் சிறப்புப் பாயிரத்தினை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருக்க வேண்டுமென அன்னார் வலியுறுத்தமையாற் போதருகின்றது. இங்கே காட்டியவற்றிலிருந்து, பழைய நூல் உரைகளின் பொருளை யுணர்தற்கும், அவை ஒன்றோ டொன்று மாறணியவழி அவற்றின் மெய்ம்மை பொய்ம்மை தெளிதற்குமே யன்றி, புதிய நூல் உரைகள் வகுத்தற்கும் ஆராய்ச்சி இன்றியமையாத தென்பது பெறப்படுதல் காண்க. இங்ஙன மாகவும், தமிழ் கற்று

ருள்ளே சிலர், முன்னோர் கூறிய அனைத்தையும் முழு உண்மைகளாகக் கொள்ளவேண்டு மென்றும், அவற்றை ஆராய்ந்து அவற்றி லுள்ள வழுக்களை யெடுத்துக் காட்டிக் களைய லுறின், அது பெரியோரை இகழ்த லாகிய குற்ற மாம் என்றும் கூறித் தமிழ் வளர்ச்சிக்கு இடர் விளைப் பா ராகின்றனர். அன்றியும், அவர் அங்ஙனம் கூறுதலால் தொல் காப்பியம், திருக் குறள் போன்ற நூல்கட்கு உரை வகுத்த முன்னோர் பலர், தமக்கு முற்பட்ட உரைகளை மறுத்துப் பெரியோரை யிகழ்ந்த குற்றத்திற் காளாயின ரெனத் தாமே அப் பெரியோரை இகழ்ந்து, குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்வா ராகின்றனர். இவர்கள் தம்மீது வைத்திருக்கும் அறிவுடன் கூடாத பற்றினை அப் பேரியோர்கள் அறிவரேல், மிக அருவருப்பரென் பது ஒருதலை.

இனி, ஆராய்ச்சி இன்றியமையாத தென்றது கொண்டு, யாவருமே அது செய்தற் குரிய ரெனக் கொள் ளுதல் கூடாது. முறையான கல்வி சிறிதேனும் உடை யா ரன்றி, ஏனையோர் ஆராய்ச்சிக் குரிய ரல்லர். அடிப் பட்ட கல்வி சிறிது மின்மையால், பழைய நூல் உரை களின் பொரு ளுணரும் அறி வில்லாதுவைத்துத் தம் மைப் பிறர் ஆராய்ச்சி வல்லுந ரென மதித்தல் கருதி, அவையிற்றை ஆக்கியோர் மீது குற்றங் கூறித் திரிவாரும், அவரது கூற்றினைப் போற்றுவாரும் ஒரு நாட்டில் இருப்பின், அஃது அந் நாட்டின் இழிந்த நிலைமைக்கு அடையாள மாகும். கல்வி யுடையாரும் தாம் கற்று வல்ல துறையிலே ஆராய்ச்சியை நடாத்துதலே தகுதி யாகும். அவர் அங்ஙனம் ஆராயுங்காலும், விருப்பு வெறுப் பின்றி, உண்மைப் பொருள் காணவேண்டு மென

னும் நோக்கத்துடன் தொடங்கினு லன்றி, அது பய னுடைய தாகாது. இப் பண்புடன் ஆராய்ச்சியை மேற் கொண்டு பொருளுண்மை காண்போரே அறிவுடையோ ரென மதிக்கத் தக்கா ராவர்.

'காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்ரு தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்ரு கெடும்'

என்னும் ஆன்ரூர் செய்யுள், ஆராய்ச்சி செய்வார்க்கு இருக்கவேண்டும் இன்றியமையாத பண்பினையும், அஃ தில்வழிப் படும் இழுக்கினையும் நன்கு அறிவுறுத்துதல் காண்க. நூ லாராய்ச்சி செய்வார், தாம் ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு, அதற்கு முரணுயவழி யெல்லாம் அந் நூற் பொருள்களைத் திரித்துக் கூறுதல் அடாத செய லாகும். கல்வி கேள்விகளாற் றிருந்திய மன முடையா ரொருவர் தம் நுண் ணறிவாற் பல காலும் ஆராய்ந்து நலம் பயப்ப தெனக் கொண்ட கொள்கையுடன் ஏனைச் சான்ரூர் இயற்றிய நூற் பொருள் முரண்படு மாயின், அவர் அந் நூற் பகுதியையோ, அன்றி, அந் நூல் முழுதை யுமோ தமக்கு உடன்பாடாகக் கொள்ளாது விடுத்தல் குற்ற மாகாது. ஆனல், அந் நூலாசிரியர் கருத்துக்கு மாருகத் தமது கொள்கையுடன் பொருந்த அதற்குப் பொருள் செய்தலே ஏத மாம். வாழ்க்கையின் நோக்கமே மெய் யுணர்வு கைவரப் பெறுதலா யிருக்க, அதற்கு நெறி யான நூ லாராய்தற்கண் பொய்யினைப் பயின்று வருவது எத் துணை அறியாமை யாகும்!

'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன் றும்
வாய்மையின் நல்ல பிற'

என்னும் **பொய்யில் புலவரின்** மெய்யுரையைக் கற்றறிந்தாரொருவர் அவர் வாய்மொழிகட்கே பொய்ப் பொருள் கூறி வரின், அவரது பேதைமையை என்னென்றுரைப்பது! முதற்கண் பொய் யென அறிந்து வைத்தே ஒன்றனைக் கூறுவார், அதனை நிலை நிறுத்தலே கருத்தாகச் சான்றுகள் தேடி முயலும் பொழுது, நாளடைவில் அவ்வெண்ணம் உறைத்தலால் அதுவே மெய்யாக மாறித் தோன்றுதலும் உண்டு. அவர் நல் லூழ் இருந்து திருந்தினன்றி, அவர்க்குப் பிறர் உண்மை புணர்த்துவதென்பது இயல்வதொன்றன்று. எத் தகைய அறிவுடையார்க்கும் ஒரோவழி உண்மை தோன்றாது, ஒன்று மற்றொன்றாகத் திரிந்து தோன்றுதல் நிகழக் கூடுவதே. அத் திரிபுணர்ச்சியின் பயனாக, அவர் தவறான கொள்கையொன்றை வெளிப்படுத்தலுங் கூடுவதே. எனினும், அவர் தாமாகவோ, அன்றிப் பிறரால் உணர்த்தப்பட்டோ தம் கொள்கை தவறென அறிந்த வழி, அதனை விடுத்து உண்மையைக் கடைப்பிடித்தலே நெறியாகும். அவ்வாறன்றித் தாம் முதலிற் கொண்ட கொள்கையை மாற்றுதல் இழிவென்னும் மாண் பிறந்த மானமுடையராய், அதனையே நிறுத்துதற்கு முயல்வோர் தமக்கும், பிறர்க்கும் கேடு சூழும் தறுகணாளராவர். இத் தகைய தீமைகட்கெல்லாம் காரணம்,

> 'வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை
> யுடையம்யா மென்னுஞ் செருக்கு'

என **வள்ளுவனார்** கூறியாங்கு, யாவரினும் தம்மையே அறிவுடையாரென மதித்துத் தருக்கும் புல்லறிவாண்மையாகும்.

இனி, நூலாராய்ச்சி செய்வார்க்கு, ஒவ்வொன்றிலு முள்ள நலங்களைக் கண்டறியவேண்டு மென்னும் ஆர்வமே மிகுந்திருக்கவேண்டும். கடலின் ஆழத்தே யுள்ள விலை யுயர்ந்த மணிகள் போன்று, நூலி னுள்ளே அமைந்திருக் கும் அறிய கருத்துக்களும், உண்மைகளும்—அவற்றை அறியவேண்டு மென்னும் அவாவும், உழைப்பு முடை யார்க்கே விளங்கித் தோன்றுவன; அல்லாதார்க்கு வெறுங் கூழாங் கல்லும், கிளிஞ்சிலும் போல்வனவே தோன்றாநிற்கும். அவர் அவற்றையே பொருளெனக் கொண்டு அமைதலோ, அன்றி அந் நூலினை எள்ளி நகை யாடலோ செய்வர். ஆராய்ச்சி முறை குறித்து மற்றும் கூற வேண்டுவன பல வுள்ளன. எனினும், இவ் வுரை விரிந்து செல்லாமை கருதி இன்னும் ஒன்று மட்டும் குறிப்பிட்டு நிறுத்துதும்: முற் சொன்ன குற்றமொன்று மின்றி ஒருவர் நூலினை ஆராயும் வழியும், அந் நூல் தோன்றிய காலம் முதலியவற்றின் உணர்ச்சி யில்வழி, அவர் அந் நூற் பொருளை உள்ளவா றுணரும் வலி யில ரா கின்றனர். இக் காலத்தே நம்மவரிற் சிலர், ஒரு நூலின் பொருளை நோக்க வேண்டுமே யன்றி, அது தோன்றிய காலத்தை நோக்க வேண்டுவ தின் றென்கின்றனர். வேறு சிலர், நூல் தோன்றிய காலத்தை அதன் பெருமைக்கோ, சிறுமைக்கோ காரணமாகக் கொண்டுவிடுகின்றனர். இருவர் கொள்கையிலும் ஓ ரளவு உண்மை யிருப்பினும், ஆழ்ந்து நோக்கின், பெருமை சிறுமைக்காக வன்றி, நூலின் பொருளை உள்ளவா றுணர்தற் பொருட்டே அதன் காலத்தை வரையறுத் துணர்தல்வேண்டு மென் பதும், காலத்தை நோக்கவேண்டுவ தின் றென்பது அறி யாமையா மென்பதும் புலப்படும்.

இனி, இங்ஙனம் பன்னூல்களையும் ஆராய்ந் தறிந்த புலமை யுடையார் தமக்கும், உலகிற்கும் பயனுண்டாக வாழு நெறியைப் பின் வருமாறு சுருக்கிக் கூறுதல் சாலும் :

I. தாம் அறிந்த பொருள்கள் தம் வாழ்விலே அல்லது அழுந்திய உணர்விலே ஒன்றுபட வொழுகுதல்.

II. தாம் அறிவின் உணர்ந்த பொருள்களை, ஏனையர் எளிதின் அறிந்து பயனெய்துமாறு உணர்த்தலோ, எழுதலோ செய்து போதல்.

III. உலகத்தோடு பொருந்த வொழுகுதலாகிய மக்கட் பண்பினை யுடையராதல்.

IV. வாலறி வுடைய இறைவன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குதல்.

# ௨. வள்ளுவர் வாய்மொழி

வள்ளுவர் வாய்மொழி என்னும் தொடர், திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் என்னும் பொருளதாகும். திருவள்ளுவமாலையில் 'வள்ளுவர் வாய்மொழி மாண்பு', 'வள்ளுவர் வாய்மொழி மாட்டு' என வருதலுங் காண்க. வாய்மொழி என்பது மெய்யுரை என்னும் பொருளது மாம். திருவள்ளுவரைப் பொய்யில் புலவர் என்றும், அவரியற்றிய திருக்குறளைப் பொய்யாமொழி என்றும் சான்றோர்கள் போற்றிவந்திருக்கின்றனர். 'திருவள்ளுவர் மொழிந்த பொய்யாமொழி' என்னுந் தொடர் திருவள்ளுவமாலையில் உள்ளது. நல்லிசைப் புலவராகிய கூல வாணிகன் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்'

எனத் திருவள்ளுவரைப் பொய்யில் புலவன் என்றும், திருக்குறளைப் பொருளுரை யென்றும் கூறியிருத்தலுங் காண்க. பொருள் என்பது மெய்ம்மை என்னும் பொருளதாதலை, 'பொருள்சேர் புகழ்' என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையா லறிக. இத்தகைய மெய்ந்நூலை இயற்றிய ஆசிரியரது வரலாறாக இப்பொழுது நாம் அறியக் கிடப்பது ஒன்றுமில்லை யென்றே சொல்லலாகும். இவரைப் பற்றி வழங்கும் கதைகள் பலரும் அறிந்தனவாகலின் அவற்றை இங்கெடுத்துக் கூறுகின்றிலேம். அவையெல்லாம் வள்ளுவனார் காலத்துடன்

தொடர்புற்றெழுந்த சான்றுகளுடன் கூடியன வல்ல. அவை எங்ஙனமாயினும், அவரது நெய்தற்றொழில், மனையறமாண்பு என்பவற்றைக் குறிக்கும் கதைகள் சிறந்த நீதியை அறிவுறுத்துவன வாகலின், அவற்றைப் போற்றிக் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை.

இனி, ஆராய்ச்சி முறையிலே, அவருடைய காலம், இடம், பிறப்பு, மதம் என்பன குறித்து, எமக்குத் தோன்றுவனவற்றைச் சுருக்கமாக் கூறுதும்: சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோட்டஞ் சமைத்து வழிபட்ட நாளில், அங்கு வந்திருந்த மன்னர்களில், 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்த'னும் ஒருவனாதல் கொண்டு, சிலப்பதிகார மணிமேகலைகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்று துணியப் படுகின்றது. மணிமேகலை ஆசிரியர் திருக்குறளை மேற் கோளாக எடுத்தாண்டது முன்பே காட்டப் பெற்றது. இவ்வாற்றால் வள்ளுவனார் கி. பி. முதல் நூற்றாண்டில் விளங்கினவராவரெனக் கருதுதல் பொருந்தும். வேறு தடையில் வழி, இன்னும் ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் முன்னாகக் கூறுதலும் இழுக்கின்றாம்.

இவர் பிறந்த இடம் திருமயிலாப்பூர் என்பது வழக்கு. 'செந்நாப் போதார் புனற் கூடற் கச்சு' என்பது கொண்டு, இவர் மதுரையிற் பிறந்தாராவர் எனக் கருது வாரு முளர். இவர் மதுரையிற் பிறந்தமையாலோ, அன்றி அங்குச் சில காலம் வதிந்தமையாலோ, அங்கிருந்து திருக்குறளை அரங்கேற்றினமையாலோ கூடற்கு அச்சு என்று கூறப்பெற்றாராதல் வேண்டும்.

இனி, இவர் பிறப்புப் பற்றிப் பலர் பல்வாறு கூறு வர். வள்ளுவர் என்பது தமிழ் நாட்டு மக்களுள்ளே

ஒரு குடியினரைக் குறிக்கும் பெயராதலே இருவகை வழக்கினும் அறியலாகும். பழைய தமிழ்ப் பெரியார் பலர், குடிப்பெயரால் வழங்கப் பெறுதலும் பலரும் அறிந்ததே. இவ் வாற்றால் இவர் வள்ளுவக் குடியிற் பிறந்தா ரென்று கொள்ளுதல் பொருந்தும். வள்ளுவர் என்ற பெயர்க்கு வண்மை யுடையோர் என்று சிலர் பொருள் கூறுகின்றனர். அது, வள்ளுவக் குடியிற் பிறந்தவர் அத்துணை மேன்மை யுடைய ராதல் சாலாது என்னும் கருத்துடன் கூறப்படுவதே யாகும். பழைய இலக்கியங்களில், வண்மை யுடையோன் என்ற பொருளில் வள்ளல், வள்ளியோன் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. வள்ளுவன் என்பது குடிப் பெயராகவே வழங்குகின்றது. வள்ளுவக் குடி என்பது, தமிழ் நாட்டி லுள்ள பழங்குடிகளில் ஒன்றாகும். பழம் பெருங் காப்பிய மாகிய மணிமேகலை முதலியவற்றில் முதுகுடி என்று கூறப்படுவது அதன் பழமைக்கு உறு சான்றாகும். வள்ளுவர் என்பார் அரச காரியங்களை நகர மாந்தர்க்கு அறிவிக்கும் கருமத் தலைமை யுடையார் என்றும், அன்னோர் தானைகள் சூழ யானைமீ திவர்ந்து சென்று முரசறைந்து தெரிவிப்பர் என்றும் தொன் னூல்களால் அறியப் படுகின்றன. பெருங் கதை என்ற பழங் காப்பியத்தில், தமிழ் வழக்கை யொட்டி, வள்ளுவரைப் பற்றிய செய்திகள் பலவிடத்துக் கூறப்பட்டுள்ளன:

'அரசு கொற்றத் தருங்கடம் பூண்ட
முரசெறி வள்ளுவ முதியனைத் தரீஇ' என்றும்,

'திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்' என்றும்

அதிற் கூறப்படுதல் காண்க. அரசருடைய பிறந்த நாள்,

படை யெழுச்சி நாள், மண நாள் என்னும் இப் பெரு நாட்களிலேயே அச் செய்திகளை வள்ளுவர் முரசறைந்து தெரிவிப்பர் என்று கூறியிருப்பது: பொதுவாகப் பறையறையும் ஏனோரின் இவருக் குள்ள வேறுபாட்டையும், இவர்தம் மதிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. இக் குடியினர் பண்டு தொட்டே நிமித்தம், அல்லது சோதிடம் எனப்படும் குறி நூலில் வல்லுநராக இருந்து வருகின்றனர். இவ் வாற்றால் வள்ளுவக் குடி என்பது அறிவு முதலிய தகுதி யமைந்த ஒரு முது குடி என்பது பெறப்படும்.

திரு வள்ளுவ மாலை என்னும் பெயரால் வழங்குகின்ற வெண்பாக்களின் தொகுதி திருக் குறளுக்குச் சிறப்புப் பாயிரம் போல்வ தொன்றாகும். சிறப்புப் பாயிர இலக்கணங்கள் யாவும் அதில் நன் கமைந்துள்ளன. திருக் குறள் அரங் கேறிய பொழுது, அதனைச் செவிமடுத் தின்புற்ற சங்கப் புலவர் ஒவ்வொருவரும் தனித்தனியாக அதனைப் புகழ்ந்து பாடிய பாக்களின் தொகுதியே திரு வள்ளுவ மாலை என்பதில், இற்றை நாள் ஆராய்ச்சியாளர் சிலர்க்குக் கருத் தொருப்பாடு இன் றெனினும், அத் தொகுதி ஓர் ஆயிரம் ஆண்டுகளின் முன்பே நிலைபெற்றிருந்த தென்பதனை யாரும் மறுக்க வியலாது.

> 'வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
> முதற்கவி பாடிய மூக்கட பெருமான்'

என்னும் கல்லாடச் செய்யு ளடிகள் அப் பாக்களின் பழமையைப் புலப்படுத்துதலோடு, இறையனார் பாடியதை முதற்கவி என்று கூறுதலின் அப்பொழுதே அப் பாக்கள் ஒரு முறைப்படத் தொகுக்கப்பட் டிருந்தன என்பதையும் தெரிவிக்கின்றன. நாமகள் பாடிய தென்பது:

பின்பு முன்னர்ச் சேர்க்கப்பட் டிருத்தல்வேண்டும். இறையனார் முதலாக ஐம்பத் தொருவர் பாடிய திரு வள்ளுவ மாலைச் செய்யுட்களுள் நாற்பத்து நான்கில் ஆக்கியோர் பெயராக 'வள்ளுவர்' என்னும் பெயர் வந்துளது. அவற்றுள், மாமூலனார் பாடிய செய்யுளி னுள்ள 'வள்ளுவ னென்பானோர் பேதை யவன் வாய்ச் சொற், கொள்ளா ரறிவுடையார்' என்பது அவர் வள்ளுவக் குடியிற் பிறந்தவர் என்பதனைக் குறிப்பால் வலியுறுத்தலுஞ் செய்கின்றது. மற்று, முதற் பாவலர் செந்நாப் போதார், பெரு நாவலர் என்னும் பெயர்கள் ஒவ் வொரு பாவில் வந்துள்ளன. எனவே, திருவள்ளுவர் என்னும் பெயரே ஆசிரியர்க்குப் பயில வழங்கிய தென்பது போதரும். இவ் வாற்றால் வள்ளுவக் குடியிற் பிறந்த காரணத்தாலேயே தெய்வப் புலவர் வள்ளுவர் என வழங்கப் பெற்றார் என்பதில் எத்துணையும் ஐய மில்லை. அது குடி பற்றிய பெய ராயினும், அதுவே அவர்க்கு இயற்பெயர்போல் ஆகி விட்டமையின்,

> 'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
> இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'

என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரையில், சேனாவரையர், கல்வி பற்றிய சிறப்புப் பெயர் முன்னும், இயற்பெயர் பின்னும் வருவதற்கு, 'தெய்வப் புலவன் திரு வள்ளுவன்' என்று உதாரணங் காட்டினார்.

இவரது சமயங் குறித்தும் பல்வேறு கொள்கைகள் உண்டு. கடவுள் வாழ்த்திலே, 'மலர்மிசை யேகினான்' 'அறவாழி யந்தணன்' என்று கூறியிருக்கும் கடவுட் பெயர்களும், வேறு சில ஏதுக்களும் திரு வள்ளுவர் சமண ரென்பதனைக் காட்டு மென்றும், பௌத்த ரென்

பதனைக் காட்டு மென்றும் ஒவ்வொரு சாரார் கூறுவர். வள்ளுவனார் உலகிற்கு முதலாகக் கடவு ளுண்டென்பது, வேள்வியை ஒத்துக்கொள்வது முதலிய காரணங்களால் அக் கொள்கைகள் மறுக்கப்படுகின்றன. இவர் இப் பொழுது இந்து மதம் என்னும் பெயரால் வழங்கும் சமயத் தொகுதியுட் பட்டவ ரென்பதே ஒருதலையாகத் துணியற் பாலதாகின்றது. இச் சமயங் களுள்ளும், இவ ரைச் சைவ ரென்று கூறுதற்கு அடிப்பட்ட ஆட்சி வலியுடைத்தாய் நிற்கின்றது. இவ ரியற்றிய நூ லொன்று கொண்டே இவரை வைணவ ரல்ல ரென்று மறுத்தற் கிட னில்லை யென்பது உண்மையே. சைவ சமய நெறித் தலைவர் சிலர், திருக் குறளைத் தங்கள் சமய நூற் பொருண் மைக்கும் மேற்கோளாக எடுத்துக் காட்டுதலும், சைவ தவ வடிவமாகத் திரு வுரு நிறுவி இவர் வழிபடப் பெறு தலும், நாயனார் என்று பெயர் தந்து தமிழ் மக்களால் வழங்கப் பெறுதலும் போல்வன சைவ ரென்னும் ஆட்சி யின் பால வாம். எனினும், இவ ரியற்றிய நூலானது உலகத்தா ரனைவர்க்கும் பொதுவாகிய தொன் றென்பது பலரும் இதனைப் **பொது மறை** எனப் போற்றுதலானே அறிய லாகும்.

'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார்—நன் றென
எப்பா லவரு மியையவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி'

எனத் **திருவள்ளுவ மாலையிலும்,**

'சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்'

எனக் கல்லாடத்திலும் கூறியிருப்பன சிந்திக்கற் பாலன.

இனி, ஆசிரியர் வரலாற்றை இவ் வளவில் நிறுத்தித் திருக் குறளின் மாண்புகளில் ஈண்டைக்கு இயலு மளவு கூறுதும்: திருக் குறளின் மாண் பெல்லாம் ஆசிரியர் மாண்பா மென்பதும் கடைப்பிடிக்க. திருவள்ளுவர்க்குப் பின் றோன்றிய ஆசிரியர்களில், இந் நூலைப் போற்றுதார் யாரு மிலர். பெருங் காப்பியங்க ளியற்றிய புலவர் பெரு மக்களும், இறைவன் அருட் கடலிற் றிளைத்து நின்று பதிகங்கள் பாடிய பேரருளாளர்களும், கடவுள், உயிர், உலகம் என்பவற்றின் இயல்பினைத் தெரிவிக்கும் உண்மை நூல்க ளியற்றிய ஆசிரியர்களும், மற்று முள்ள புலவர்களும் திருக் குறட் பாக்களையும், தொடர்களையும் தங்கள் செய்யுட்களில் எடுத் தமைத்து அழகுபடுத்தி யிருக்கின்றனர்; அதன் ஆணை வழியில் நின்று, அதனை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர்; திரு வள்ளுவரையும், திருக் குறளையும் எல்லை யின்றிப் புகழ்ந்து பாராட்டி யிருக்கின்றனர். ஒப் புயர் வற்ற பெருங் காப்பிய மியற்றிய கவிச் சக்கரவர்த்தி யாகிய கம்ப நாடர் தமது இராமா யணத்தில் எத்தனை யிடத்தில், எத்தனை திருக் குறட் பாக்களை, எத்தனை முறையாக அமைத்திருக்கின்றனர் என்பதனை நோக்குவார்க்குத் திருக் குற ளானது கவி யுலகத்தை எங்ஙனம் ஆட்கொண் டிருக்கிற தென்பது புல னாகும். இற்றை நாளிலோ, ஆங்கிலம் முதலிய மே னாட்டு மொழிகள் பலவற்றிலும், வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலியவற்றிலும் திருக் குறளை மொழி பெயர்த்துப் படித்துப் பய னெய்தி வருகின்றனர். பண்டை நாளிலே யிருந்த தண் டமிழ்ப் புலவர் பலரும் இதனை ஒப் புயர் வற்ற நூலாகப் பாராட்டியதே யன்றி, இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மே னாட்டுப்

புலவ ரொருவரும் 'திருக்குறள் போன்ற தொரு, நூல் வேறெந் நாட்டு மக்க ளிடத்தும் காணப்படுவ தின்று' என்று மன மூவந்து கூறும்படி, இதன் புகழ் யாண்டும் விஞ்சிப் பறப்ப தாயிற்று. இவ்வா றெல்லாம் பலரும் ஒரு படித்தாய் இந்நூலைப் பாராட்டுதற்கு இதன்கட் காணப் படும் சிறப் பியல்கள் என்ன? இவ் வினாவிற்குச் சில மொழிகளில் விடை யிறுத்து விடுவ தென்பது எளிய தொன் றன்று. பன் னூற் பயிற்சி யுடையாராய் இந் நூலைப் பல் காலும் பயின்றுவரும் மதி நல முடையார்க்கு, இதன் ஈடு மெடுப்பு மில்லாத சிறப் பியல்புகள் விளங்காதிற்கும். ஈண்டு எம் சிற்றறிவிற் கியைந்தவாறு ஒன் றிரண்டு காட்டுதும். 'எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி' என் றோதப்படும் வெண்பா யாப்பி னுள்ளும், அளவிற் சிறிய தொரு குறட் பாவைக் கருவி யாகக்கொண்டு, கூறக் கருதிய பொருட் பரப்பை யெல்லாம் எவ் வகைக் குற்றமு மின்றி, சுருங்குதல், விளங்குதல், இனி தாதல் முதலிய அழகெல்லாம் பொருந்தக் கூறி வைத்திருப்ப தொன்றே ஆசிரியரது தெய்வப் புலமையின் பெற்றியைத் தெரி விக்கப் போதிய தாகும். மற்று, இந் நூலின்கண், ஒன்றற் கொன்று சேய்மைய வாகிய உலகியற் றுறைகளனைத்தை யும் உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெள்ளத் தெளிய வுணர்த்தும் உலகிய லுணர்வின் நிறைவு காணப்படு கின்றது. இதற்குப் பின் வருவன எடுத்துக் காட் டாகும்:

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்'

என்பது உழவின் நுணுக்க மான செய்தி யொன்றை உணர்த்துவது.

"நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பது மருத்துவம் புரியும் திறப்பாட்டை விளக்குவது. இத் துறைகளில் இவ் வகை யுணர்வு பெற்ற ஆசிரியர் அர சியல் கூறுவதைக் கேண்மின்கள்:

"அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்"

"வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்"

இவ் விரண்டு செய்யுட்களும், அர சியலில் எவ்வளவு விரிந்தனவும், இன்றியமையாதனவு மான செய்திகளை அகப்படுத் துள்ளன! இங்ஙனமாக, இருநூற் றைம்பது பாக்களால் அரசியலும், நூறு பாக்களால் அமைச்சியலும் கூற லுறுகின்ற ஆசிரியர் எவ்வளவு பொருட்களை ஆராய்ந்து முடிவு கட்டி யிருப்ப ரென்பதனைச் சிந்தித் துணர்மின்.

"சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்க மழிப்ப தரண்"

என்பது அரணின் மாட்சியையும்,

"ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்"

என்பது ஒற்றரை ஆளும் முறைமையையும் உணர்த்துவன.

இனி, நீதியை வற்புறுத் துரைக்கும் அழகிற்குப் பின்வரும் மூன்று பாக்கள் ஊன்றி யுணர்தற்பாலன:

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து"

"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

இனி, இந் நூலட் கூறப்பட்டிருக்கும் உவமைகளை யாரால் விலை மதிக்க லாகும்? 'நவி றொறு நூ னயம் போலும்', 'அறிதோ றறியாமை கண்டற்றால்', 'தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்', 'எழுதுங்காற் கோல்காணக் கண்ணேபோல்' என்னும் உவமைகள் பல முறை சிந்தித்து இன்புறற் குரியவை.

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து.
உள்ளத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"

என்பன காதலின் சிறப்பை எவ்வளவு அருமையாக விளக்குகின்றன!

இனி, மக்கள் யாவரும் உயர் நிலை யெய்துதற் குரிய பொதுவான நெறிகளை இவ் வாசிரியர்போற் கூறினார் யாவர்?

"பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.
எனைத்தானு மெஞ்ஞான்று மியார்க்கு மனத்தானும்
மாணாசெய் யாமை தலை.
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்பன, மக்களுள்ளத்தே எஞ்ஞான்றும் நிலைபெறற்பால வாய தலை சிறந்த குண நலத்தினைத் தெளிவித்தல் காண்க. உயிர்களைப் பற்றி யுள்ள எவ் வகை அழுக்கை யுங் கழுவித் தூய்மை செய்தற்கு, இவர் கண்டு கூறிய கருவி வாய்மை என்பதாகும். இவ் வாய்மையின் கண்

இவர் கொண்டுள்ள உறுதிப்பாடு,

> "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற"

என்பதனால் விளங்கும்.

இனி, வீடடையும் நெறியினை இவ் வாசிரியர் கூறி யிருக்கும் முறை போற்றற் பாலதாகும். கல்வி யறிவும், குண நலங்களும் சான்ற கணவனும் மனைவியும் தலைசிறந்த அன்பினை யுடையராய், கடியற் பாலவாய குற்றங்களைக் கடிந்து, விருந் தோம்பல், ஈகை, ஒப்புரவு முதலிய அறங்களைப் புரிந்து வாழ வேண்டு மென்பதும், இல் லறம் முற்றுப் பெற்ற வழி அன்பின் முதிர்ச்சி யாகிய அருளினை யுடையாராய்த் தவஞ் செய்ய வேண்டு மென்பதும் இவர் கருத் தாகின்றன. துறவின் முதற் படி யாகிய தவ வொழுக்கம் அல்லது நோன்புகளில் உறைத்து நிற்றலால் உளத்தூய்மை யுண்டாகி, பின்னர் நித்த அநித்தப் பொருள்களின் வேறுபாட் டுணர்வு தோன்றும் என்பதும், வீடடைதற் குரியார் இரு வகைப் பற்றுக்களையும் அறவே துறக்க வேண்டும் என்பதும், பற்றுக்களை விடுத்து மனம் அடங்கிய வழியும், மெய்யுணர் வில்லாவிடின் அதனால் பய னின் றென்பதும், மெய்ந் நூற் பொருள்களைக் கற்றும் ஆராய்ந்தும், உண்மையை யுணர்ந்து மெய்ப் பொருளை இடை யறாது சிந்திக்கவேண்டு மென்பதும், அச் சிந்தனை யுள் அழுந்தி நிற்றலால், பிறவிக்குக் காரணமாய வினைப் பகுதிகள் ஒழிய, பேரா வியற்கைத் தாகிய பே ரின்ப வாழ்வு கிடைக்கு மென்பதும் தெய்வப் புலவரின் திருவுள்ளக் கிடைக ளாகின்றன.

> "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய்",

என்னும் இக் குறட் பா வானது தியானம், சமாதி என்னும் இரு நிலைகளையும் உணர்த்துவதாகத் திருக் களிற்றுப் படியாரி லுள்ள ஓர் அழகிய செய்யுள் கூறுகின்றது அதனை யெடுத்துக் காட்டி இச் சிற் றுரையை முடிக்குதும்.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னன்றமையாற்
சார்புணர்த லானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுக னல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று"

# 3. சுந்தரர் செந்தமிழ்

—:o:—

'சுந்தரர் செந்தமிழ்' என்னும் இத் தொடரில் உள்ள சுந்தரர் என்பது சைவ சமய குரவர் நால்வருள் ஒருவ ராகிய ஆலால சுந்தரரையும், செந் தமிழ் என்பது அவர் பாடிய தேவாரத் திருப் பதிகங்களையும் குறிக்கும். இஃது ஆறும் வேற்றுமைச் செய்யுட் கிழமை.

திருக் கயிலையில், வெள்ள நீர்ச் சடை மெய்ப் பொரு ளாகிய சிவ பெருமானுக்கு மலர் மாலையும்; திரு நீறும் எடுத் தணையும் அணுக்கத் தொண்ட ராகிய ஆலால சுந் தரரும், அவ் விறைவன் பங்கி லுறையும் உமைப் பிராட்டி யார்க்குப் பொதுக் கடிந் துரிமை செய்யும் பூங் குழற் சேடிமார் ஆகிய கமலினி, அனிந்திதை என்பவர்களும் மாதேவன் கட்டளையால், தென் றமிழ் நாட்டிலே, வன் றொண்டராகவும், பரவையார், சங்கிலியா ராகவும் தோற் றஞ் செய்தன ரெனத் திருத் தொண்டர் புராணம் கூறு கிற்கும். சுந்தரர்க்கு அவர் நில வுலகிலே தோன்றிய ஞான்று இடப் பெற்ற நம்பி யாரூரர் என்னும் பெயரும், இறைவன் அவரைத் தடுத் தாட் கொண்ட பொழுது, எதிர்த்து வன்மை பேசினமையின் எய்திய வன் றொண் டர் என்னும் பெயரும், அவர், திரு வாரூரில் புற் றிடங் கொண்ட பிரானை வணங்கி, நன்புலன் ஒன்றி, இன்ப வெள்ளத்தில் மூழ்கி, இன் னிசைத் தமிழ் பாலை பாடிய காலை 'தோழமை யாக உனக்கு நம்மைத் தந்தனம்' என்று இறைவன் அருளினமையாற் போந்த தம்பிரான் றோழர் என்னும் பெயரும், நாவலர் கோன் என்பது முதலிய பெயர்களும் புராணத்திற் பயில வழங்கு

மேனும், வழக்கிலே மக்கள் பலரானும் நன்கறியப் படுவ தாதல் கருதிச் சுந்தரர் என்னும் பெயர் ஈண்டுக் கொள்ளப் பெற்றது. இஃது ஆலால சுந்தரர் என்பதன் பகுதிப் பெயர்க் கோளே. திருக் கயிலையிற் சிவத் தொண்டர்க்கு வழங்கிய அப் பெயர் அவரது தோற்ற மாகிய நம்பி யாரூரர்க்கும் உரிய தாயிற்று. அருண் மொழித் தேவரும்; திருக் கூட்டச் சிறப்பின் இறுதிச் செய்யுளில்,

"இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்த மில்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம்"

என, இப் பெயரை ஆண்டுள்ளமை காண்க. இனி, சுந்தரர் வரலாற்றை எடுத் துரைப்பது இவ் வுரையின் நோக்க மன்று; அவர் பாடிய தேவாரத் திருப் பாட்டுக் களினால் அறிய லாகும் அவருடைய வாழ்க்கைப் பண்புக ளிலும், நவை யறு நன் பொருள்களிலும் சிலவற்றை எடுத்துக் காட்டுவதே இதன் நோக்க மாம். எனினும், அவர் வரலாற்றின் குறிப்புக்கள் சிலவற்றை முதற்கட் கருத்தில் இருத்துதல் நன்றாகும்.

ஆலால சுந்தரர் இவ் வுலகிலே திரு நாவலூர் என்னும் திருப் பதியில் ஆதி சைவ ராகிய சடையனார்க்கு இசை ஞானியார்பால் தீ தகன் றுலக முய்யத் திரு வவதாரஞ் செய்தார்; நரசிங்க முனையர் என்னும் பல்லவ வேந்தரால் மகன்மை முறையுடன் சீரும் சிறப்பு மாக வளர்க்கப் பெற்றார்; மாலயன் காணா ஆலமர் செல்வனால் வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங் காட்டி ஆட் கொள்ளப் பெற்றார்; அவ் விறைவன் அருள்வழி நின்று

57272

பரவையாரையும், சங்கிலியாரையும் திருமணம் புரிந்தார்; தம்பிரான் தோழராய் என்றும் மணக் கோலந் தாங்கி இன்ப விளையாட்டுக்கள் நிகழ்த்தினார்; சேரமான் பெருமாளைத் தோழமை கொண்டார்; மூவேந்தரும் உடனிருந்து பரவத் திருப்பதிகம் பாடினார்; மாதொரு பாகனைத் தூதெனக் கொண்டார்; அவ் விறைவனாற் பொன்னும் பொதி சோறும் பெற்றார்; மற்றும் பற்பல அற்புதம் நிகழ்த்தினார். இறுதியில் இறைவன் அருளிப் பாட்டால் களையா உடலோடு வெள்ளானை மேற்கொண்டு சேரமானுடனாகத் திருக் கயிலை யுற்றார்.

இவை பலவற்றையும் அறுதி யிடும் உறுதி யுள்ள சான்றுகள் அவர் பாட்டுக்களிலிருந்தே காட்டுதல் சாலும்; அவற்றுட் சில பின் வருவன :

"நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு மூர் அணி நாவலூர்"

"என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்"

"வெண்ணெய் நல்லூரில், அற்புதப் பழ ஆவணங்காட்டி
அடியனா என்னை ஆளது கொண்ட, நற்பதத்தை"

"மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானை"

"சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனை"

"அடியேற்கு எளிவந்த. தூதனைத் தன்னைத்
தோழமை அருளித் தொண்டனேன்
செய்த துரிசுகள் பொறுக்கும், நாதனை"

"பொன்னைத்தந்து என்னைப் போகம் புணர்த்த நன்மை
[யினார்"

"முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த"

இவ்வாற்றால் இவரது இன்பம் நிறைந்த பெருமித வாழ்க்கையின் இயல்பு புலனாகாநிற்கும். இத் துணைப் பெருமையில் எத் துணை எளிமை பொருந்தி யுள்ள தென்பதனைப் பின்னர் நோக்குதும்.

முதற்கண், இவரது ஆழ்ந் தகன்ற கல்வியின் திறத்தை ஆய்ந்து காண்டல் கடனாம். கல்வி கற்பார்க்கு அதில் ஓர் இன்பம் தோன்றுதல் வேண்டும். அஃதின்றேல், கல்வியில் உண்மையான ஈடுபாடும், அதனாற் கல்வி நிரம்புமாறும் உள வாகா.

‘ தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் ” என்றும்,

‘ நவில்தொறும் நூல்நயம் போலும் ’ என்றும்

தெய்வப் புலவரும் கூறுவர்.

நம் சுந்தரர்க்குக் கல்வி எங்ஙனம் இனித்தது என்பது, இன்பமே யுரு வாகிய இறைவனைக் குறித்து, அவர்,

‘ கற்ற கல்வியினும் இனியானை ’

எனக் கூறுவதனால் இனிது விளங்கும். இங்ஙனம் பொதுப்படக் கல்வியை உவமங் கூறிய தன்றி,

‘ பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் ’ என்றும்

‘ பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே ’ என்றும்

சிறப்பு வகையால் தமிழின் இனிமையை இறைவன் இன்பொடு சார்த்தி யுரைத்தலின் தமிழ்க் கல்வியானது அவர்க்கு எல்லை யில்லா இன்பினை அளித்த தாகல் வேண்டும்.

விழுப்ப முடைய நுண் பொருட் கல்வியை யன்றி, பருப் பொருட்டாய உலகியற் கல்வியையும் அவர் புறக் கணியாது கற்றனர் என்பது, திரு நாட்டுத் தொகைக்

பதிகத்தில் பற் பல திருப்பதிகளைக் கூறி வருமிடத்து, அவற்றுட் சில பதிகள் அமைந்துள்ள உள் நாடுகளை (சோணாடு முதலியவற்றின் உட் பிரிவுகளை)யும் குறிப்பிட்டு, 'மருகல் நாட்டு மருகல், கொண்டல் நாட்டுக் கொண்டல், குறுக்கை நாட்டுக் குறுக்கை, வெண்ணிக் கூற்றத்து வெண்ணி, நாங்கூர் நாட்டு நாங்கூர், நறையூர் நாட்டு நறையூர், மிழலை நாட்டு மிழலை, வெண்ணி நாட்டு மிழலை, பொன்னூர் நாட்டுப் பொன்னூர், புரிசை நாட்டுப் புரிசை, வேளூர் நாட்டு வேளூர், விளத்தூர் நாட்டு விளத்தூர்' என்று உரைத்தலினின்று அறிய லாகும்.

திருக்குறள், நாலடியார் முதலிய பழந்தமிழ் நூல்களில் நம்பியாரூரர்க் கிருந்த பயிற்சியும், மதிப்பும், அவர் திருநெல்வாயில்-அரத்துறைப் பதிகத்தில்,

'அகர முதலி னெழுத்தாகி நின்றாய்'

'பொறிவாயிலிவை யைந்தினையும் அவியப்பொருது
உன்னடியே புகுஞ் சூழல் சொல்லே'

'பிறவிக்கடல் நீந்தியேறி அடியேன் உய்யப்
போவதோர் சூழல் சொல்லே'

'உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி'

எனத் திருக் குறளில் ஒரு நான்கு பாக்களின் கருத்தையும்,

'மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி'

என நாலடிச் செய்யுள் ஒன்றின் கருத்தையும் தழுவிப் போற்றுதலான் அறியப்படும்.

மற்றும், திருத் தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம் ஒன்றே தம்பிரான் றோழரின் பே ராராய்ச்சியைப் புலப்படுக்கும் கருவியாதல் அமையும். பற் பல நிலங்

களில் பல்வேறு காலத் திருந்த நாயன்மார் பலரையும் ஒருங்கே முதற்கண் அறிவிப்பது இப் பதிகமே யன்றோ? திருத் தொண்டர் பலருடைய வரலாறுகளையும் முதன் முதல் அறிந்து கொள்ளுதற்கு எவ்வளவு சிறந்த ஆராய்ச்சி நிகழ்ந்திருத்தல் வேண்டும்? அடியார்களின் வரலாறுகளைச் செவ்வன் அறிந் திருப்பி னன்றி, அவர்கள் பால் அன்பும், அவர்களைப் பரவுதற்கண் ஆர்வமும், மன வெழுச்சியும் நிகழா வன்றே? எனவே, திருத் தொண்டத் தொகையானது அடியார்களின் வரலாற்றை விளங்க உரைத்திலதேனும், வன்றொண்டப் பெருந்தகை நன்கனம் அறிந்திருந்தா ராதல் தேற்றம். அப் பதிகத்தில்,

'ஏனாதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்'

'முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்'

எனச் சிலரைப் பெய ரளவிலும்,

'கடவூரிற் கலயன்றன் அடியார்க்கு மடியேன்'

'அலைமலிந்த புனன்மங்கை ஆனாயற் கடியேன்'

எனச் சிலரை அவர்கள் நிலவிய ஊரொடு சார்த்தியும்,

'இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்'

'அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்'

எனச் சிலரை அவர்கள் கொண்ட படைக் கலம் முதலிய வற்றால் விசேடித்தும்,

'மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்'

'வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்'

எனச் சிலரை அவர்கள் புரிந்த திருத்தொண்டு, செயல்

என்பவற்றோடு கூட்டியும், மற்றும் சிற் சிலரை வேறு சிற் சில வகையாற் குறிப்பிட்டும் அவர் பாவியுள்ளார். மற்றும்,

'இல்லையே என்னாத இயற்பகைக்கு மடியேன்'
'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்'
'நாட்டமிகு தண்டிக்கும்............அடியேன்'

என்பவற்றில் கொடுக்கப்பெற் றுள்ள அடை மொழிகள், அவ் வடியார்கள் வரலாற்றின் உயிர் நிலையாய உண்மைகளைத் தெரிவித்தல் கண்கூடு. உல கியலில் வழங்குதற் கேற்ற தல்லாத தொன் றினையும் வழங்கினாராதல் தோன்ற 'இல்லையே என்னாத' என்றும், மாற்றானது வாளுக் கிலக்காகி நிறைந்த செங்குருதி சோர வீழ்கின்ற நிலையிலும், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனத் தாம்கொண்ட கொள்கை பிழைபாது, அவனைச் சிவனடியா ரெனவே பேணிய தவ வென்றி யுடையா ரென்பது தோன்ற, 'வெல்லுமா மிகவல்ல' என்றும், பிறவியிலே கண் காணா ரிருந்தும், அக நாட்ட முடையராய்த் திருக் குளம் தோண்டுத லாகிய திருப் பணியை அரிதிற் புரிந்து, அதற் கிடர்செய்து தம்மைக் குருட ரென எள்ளிய அமணர் கண் ணிழக்க, வாவியில் மூழ்கி மலர்க்கண் பெற் றெழுந்த சீ ரடியார் என்பது புலப்பட, 'நாட்டமிகு' என்றும் அடை புணர்த் தோதிய மாண்பினை எங்ஙனம் அறிந் தேத்த வல்லேம்! இன்னும், வேடர் குலத்திலே தோன்றி, நன் னூற் கல்வி நவின் றறியாத கண்ணப்பரைக் குறித்து,

'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்'

என்று கூறியது, அவர் பழம் பிறப்பிலேயே கலை களெல்லாம் நிறைந்தா ராதல் கருதியோ, கலைகளின் பயனாய்

அன்பின் மேம்பாடு துணிந்தோ, அவரது சீர் கலைகள் பலவற்றுள்ளும் நிலவுமாறு நினைந்தோ ஆதல் வேண்டும்.

திருத் தொண்டர்களின் வரலாறுகள் சுந்தரரால் நுண்ணிதின் ஆராயப் பெற்றவை என்பதற்கு அவர் திருப் பாட்டுக்களில் மற்றும் பல சான்றுகள் உள்ளன. அவர், திரு ஞான சம்பந்தர், திரு நாவுக் கரசர் என்னும் இரு பெரு மக்களின் தேவாரங்களைப் பன் முறை ஓதி, நன் காராய்ந்து, செம் பொருள் கண்டவர் என்பதனையும், அதனாலும் பிறவாற்றாலும் அவ் விருவர் வரலாற்றினை யும், ஏனைய அடியார்கள் வரலாறுகளையும் நன்கு தெளிந் தவர் என்பதனையும், அவர் பாட்டுக்கள் காட்டா நிற் கின்றன. நாவுக் கரசர் பாடிய பாவின் தொகையை,

'திணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநாவினுக் கரையன்'

என்று முதற்கண் வெளிப்படுத்தவர் நம் தம்பிரான் றோழரே.

'வானமில் காழிதன்னுள் உயர்ஞானசம் பந்தர்க்கன்று
ஞானம் அருள்புரிந்தான் நண்ணுமூர்நனி பள்ளியதே'

என்பதனால், சம்பந்தர் காழியுள் ஞானம் பெற்ற தனையும்

'திருமிழலை, இருந்துநீர் தமிழோடிசை கேட்கு
மிச்சையாற் காசு நித்தல் நல்கினீர்'

என்பதனால், அரசரும் ஞானக் கன்றும் வீழிமிழலை இறையவர்பால் படிக்காசு பெற்றதனையும் அவர் வெளிப் படுத்துள்ளார். பல கூறுதல் வேண்டா;

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்

கற்ற குருந்தொடு சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினும் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூருளானே.

என்னும் திரு பாட்டொன்றே அடியார்களின் வரலாற்று நுட்பங்கள் அவரால் எங்ஙனம் அறியப்பட்டுள்ளன என்பதற்கு உறு சான்றாகும். இவை யனைத்தும் ஓர்ந் தன்றோ, 'நுணங்கிய கேள்வி மேலோன்' என்று சேக்கிழார் பெருமான் இவரைப் போற்றுவ ராயினர். மற்றும் இவர், 'நான்மறை யங்கம் ஓதிய நாவன்' என்று தம்மைக் கூறிக் கொள்வதனாலும், பிறவாற்றானும் இவரது வடமொழிப் புலமை போதரும். எனினும், தமிழின் சுவையே இவருள்ளத்தைக் கொள்ளை கொண்ட தென்பதும், தமிழிலேதான் இவருக்கு எல்லை யிகந்த பற்றிருந்தது என்பதும் மேல் எடுத்துக் காட்டிய,

'பண்ணார் இன்றமிழாய்'
'பண்ணிடைத் தமிழொப்பாய்'

என்பவற்றானும், மற்றும் இறைவனைக் குறித்து,

'தமிழோடிசை கேட்கு மிச்சையாற் காசுநித்தல் நல்கினீர்'

'கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம்
இடர்தீர்க்குங் கருப்பறியலூர்'

'தண்டமிழ்நூற் புலவாணர்க்கோ ரம்மானே'

'செந்தமிழ்த் திறம் வல்லிரோ'

என் றிங்ஙனம் பாராட்டுவதனாலும், ஆளுடைய பிள்ளை

யார் வேதம் முதலிய அனைத்தையும் ஓதா துணர்ந்த பெருந் தகையாயினும், அவரை,

'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்'

'நாளும் இன்னிசையாற் றமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'

என்று கூறிப் பரவுதலாலும், தாமும் இன்னிசையாற் றமிழே பரப்பினமையாலும் நன்கு துணியப்படும்.

'செந்தமிழ்த் திறம் வல்லிரோ செங்கணரவ முன்கையி லாடவே வந்துநிற்குமி தென்கொலோ'

என்பது, செந் தமிழானது அரவின் நஞ்சினைத் தடுக்கும் மந்திரமாம் என்னும் குறிப்பிற்றோ, நச்சுந் தன்மையுடைய அரவும் தமிழிசையைக் கேட்டு மெய்ம் மறந்திருக்கும் என்னும் குறிப்பிற்றோ ஆதல்வேண்டும். சுந்தரரது செந்தமிழ்க் கல்வியின் பெருமைக்கு வேறு கூறுதல் என்? கல்வி யென்னும் கற்புடை நங்கைபெற்ற செல்வ நன் மக்களாகிய அவருடைய அமிழ்த வெள்ளம் போலும் இன்னிசைத் தீந்தமிழ்ப் பாட்டுக்களே சான்றுதல் அமையாவோ?

இனி, சுந்தரர் வாழ்க்கை எவ்வளவு பெருமிதமும் இன்பமும் நிறைந்தது என்பதனைத் தொடக்கத்தில் எடுத்துக் காட்டினும். ஆயினும், அப் பெருமையிலோ, இனிமையிலோ அவர் நெஞ்சம் தாழ்ந்திலதென்பதனை அவர் வாய்மொழிகள் நன்கு புலப்படுத்துகின்றன. அவர் கூறுவன கேண்மின்!

'சொற்கவிடில் எல்லை யில்லை சுவையிலாப் பேதை வாழ்வு
நல்லதோர் கூரைபுக்கு நலமிக அறிந்தே னல்லேன்'

ஆ! நல்லதோர் கூரையி (உடம்பி)லே புகுந்தும் இன்பமொன்றும் கண்டிலராம்! இவ் வாழ்விலே சுவையொன்

றும் இல்லையாம்! இவ்வாறு தம் அநுபவத்தை எடுத்தியம்பும் பெருமான்,

'தோற்ற முண்டேல் மரண முண்டு துயர மனை வாழ்க்கை'

'இன்ப முண்டேல் துன்பமுண்டு ஏழை மனை வாழ்க்கை'

'மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்'

என்று பொதுவாகவும், உல கியலில் வைத்தும் பிறப்பின் பொல்லாங்கினை எடுத்துக் காட்டி, ஆதலாற் பிறவியை வேண்டேன் என்று அறுதியிட் டுரைக்கின்றார். பிறவி வெம்மையானது அவரது அக மலரை எத்துணை வாட்டியுள்ளது என்பது காட்டுதற்கு,

'மானுடவாழ்க்கை ஒன்றாகக் கருதிடிற் கண்கள் நீர்மல்கும்'

என்னும் பொருண் மொழி ஒன்றே சாலாதோ? என்னே! 'தூஉய்மை என்பது அவாவின்மை' என்றபடி, அவா வறுத்த அவரது தூய உள்ளத்தின் உணர்ச்சியை எம் மனோர் உய்யுமாறு எழுதிக் காட்டிய இவ் வோவியத்தின் அருமையை எங்ஙனம் வியக்க வல்லேம்! இவ் வுலக வாழ்க்கையின் பெற்றிமை இஃதென வுணர்ந்த நாவலர் பெருமான், ஏனோரும் உய்தி பெறுமாறு கூறிய வாயுறை வாழ்த்தாவது,

'மத்தயானை யேறி மன்னர் சூழ வருவீர்காள்
செத்த போதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்'

என்பது. அரசர்க் கரசர் நிலை இதுவாயின், மற்றையோர் நிலை இற்றென வேறு இயம்பலும் வேண்டுமோ?

இவ் வண்ணம் இவ் வுலக வாழ்க்கையிற் சிக்கி ஆசையுட்பட்டு அவஞ் செய்ய ஒருப்பட்டா ராகிய நம்பி யாரூரர், 'தவஞ் செய்வார் தங்கமருஞ் செய்வார்' என்று

அதனை நாடுதல் இயல்பே யன்றோ? திருத் துறையூர் என்னுந் திருப்பதியில் அவர் வேண்டுவதனைக் காண்டல் தகும்:

'துறையூர்த் தலைவா உனை வேண்டிக் கொள்வேன்
[றவநெறியே'
'அத்தா உனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே'
'ஐயா உனை வேண்டிக் கொள்வேன் றவநெறியே'

என்றிவ்வாறு பதிகம் முழுவதிலும் அவர் வேண்டுகின்றனர். இங்ஙனம் தவ நெறியை வேண்டிப் பெற்று, அதன்கண் சலியாது நிற்கும் பீடுடைமை தெளிந்தன்றோ, தொண்டர் சீர் பரவுவாராகிய அருண் மொழித் தேவர், அவரைச் 'செய்தவப் பெரியோன்' என்பதன்றி, 'தவத்தினால் மிக்கார் போற்றும் நம்பி யாரூரர்' என்றும், 'நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார்' என்றும் கூறிப் போற்றுகின்றார்? இன்னும் சங்கிலியார்க்கு நம்பி யாரூரரைத் தெரிவித்து, அன்னார் மண வினை முடிக்கும் துணைவாக் கடன் பூண்ட சிவபெருமான் கூறிற்றாகவுள்ள,

'சாருந் தவத்துச் சங்கிலிகேள் சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரு மறிய யானாள உரியான் உன்னை யனையிரந்தான்
வார்கொள் முலையாய் நீ அவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்
[தென்றார்'

என்னும் பெரிய புராணச் செய்யுள் ஈண்டு அறிந்து இன்புறற் பாலது. இங்கே, ஒரு நங்கையைத் தம்முடன் சேர்த்தருளுமாறு குறை யிரந்து நிற்கின்றார் ஒருவர். குறை யிரக்கப்பட்ட இறைவனோ, அவரை, 'மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்' என்று அம் மங்கை முன்னே நன் குரைக்கின்றான். இத் தவம் எத் தகைத்தோ?

இதன் பெற்றிமை எம்மனோரால் எளிதின் அறிய லாவதொன்றன்று. ஆயின், சைவ சித்தாந்தச் செம்பொருணூல்கள் இக் கடாவிற்கு ஏற்ற விடை தருகின்றன. 'அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல் சுடாதவாறுபோல, இறைவனோடு ஒற்றுமை யுற்று, அவ் விறை பணி நிற்கும் மெய்யுணர்வினோரை மல மாயை கன்மங்கள் தாக்க மாட்டா; அவர், பிராரத்த வினைப் பயன் துய்ப்புழி, எக் கருவி கொண்டு எத் தொழில் செய்தா ராயினும், அது பற்றி அவர்மாட்டு விருப்பு, வெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லா; அவரால் நுகரப்படும் பிராரத்த வினையும் தற்பணி நீத்த அவரைத் தலைக்கூட மாட்டாது, வெந்த ஆடைபோல் வலியற்று, வாதனை மாத்திரையாய்ச் சிறிது நின்றொழியா நிற்கும்' எனச் சிவஞான போதத்தின் பயனியல் முதற் பாத மாகிய பத்தாஞ் சூத்திரம் அறிவுறுத்துகின்றது.

> "நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
> நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
> நீடுபல காலங்கள் நித்திரா யிருந்தும்
> நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்
> ஏடுதரு மலர்க்குழலார் (தோளிணைக்கே) இடைக்கே
> எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
> கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
> குஞ்சித்த சேவடியும் கும்பிட்டேயிருப்பர்" (சித்தி.சூ.10)

என்பதுங் காண்க. ஆயின், ஐம் புலக் களிற்றை அடக்கும் உரனில்லா உலக மாந்தர், இதனைத் தமக்கே கூறியது போற் கொண்டு, மனப் பால் குடித்து மகிழ்வரேல், பெரியதோர் ஏதமே விளையாநிற்கும். எத்தனையோ பல படிகளைக் கடந்து சென்று, பாச நீக்க முற்றுச் சிவப்

பேற்றுக்கு அணியராய் நிற்கும் மெய்ஞ் ஞானியரை நோக்கியது இஃது என உணர்தல் வேண்டும். இவ் வுண்மைக்கு எடுத்துக்காட்டாகவே ஆரூரர் வாழ்க்கை அமைந்தது போலும்! அவர் பரவையாருடன் இன்பந் துய்ப்பதனைக் கூறும்வழி,

'பன்னாளும் பயில்யோக பரம்பரையின் இனிதமர்ந்தார்'

என்று சேக்கிழார் அருளிச் செய்தலும் உளங் கொளற்பாலது. மற்றும், சகமார்க்கம் எனப்படும் தோழமை நெறிக் கேற்ற ஆரூரர் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், அவர் தம் வாய்மொழி யாகிய,

'நாலுவன் நாலுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்'

என்பது முதலியவும் அவரது ஞானயோக நிலையினை வெளிப்படுத்தும் சான்றுகளாக உள்ளன.

இனி, மூவேந்தரும் முன் னின்று பணி கேட்கும் பா வேந்தராகிய தம்பிரான் றோழர், தாழ்வு எனுந் தன்மையை எவ்வளவு உயர்ந்ததாக மதித்துள்ளார் என்பது,

'தாழ்வெனுந் தன்மை விட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து
வாழ்வதே சருதித் தொண்டர் மறுமைக்கொன் றீய கில்லார்'

என்னும் பொருண் மொழியால் விளக்கமாம். அவர், அடியார்க்கு அடியா ராதலின் பயனை,

'பண்டே நின்னடியேன் அடியா ரடியார்கட் கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடரமைத் துரிசறுத்தேன்'

என்பதனால், நம்மனோர் அறியக் கரி கூறுகின்றார். அடியார் திறத்து அவர் எவ்வளவு எளிமை யுடையார் என்பதற்குத் திருத் தொண்டத் தொகை யொன்றே சான்றுதல் அமையும். அடியார் ஒவ்வொருவரையும் எவ் வகை வேற்றுமையும் இன்றி, அவர்க்கு அடியேன் என்றும், அவர்

அடியார்க்கும் அடியேன் என்றும் கூறிப் பரவுகின்றாரல்லரோ? ஆரா அன்பினால் அவர் அடியார்களைப் பரவிய திருத் தொண்டத் தொகையே, அடியார்களின் அன்பின் திறத்தையும், இறைவனது பேரருட் டிறத்தையும் தெளியப்படுத்தி, உலகம் உய்தி பெறுதற்கு ஏதுவாயிற்று என்பதனை உளங்கொண்டு சேக்கிழார் பெருமான் கூறிய,

"நேச நிறைந்த உள்ளத்தால் நீல நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த [திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்'

என்னும் திருப் பாட்டின் அருமை பெருமைகளைப் புல்லறிவுடையேம் எங்ஙனம் சொல்லிப் பரவ வல்லோம்! மற்று, நாவரசிடத்தும், ஞானக் கன்றின்பாலும், அவர்கள் பாடிய தமிழ் மறை யகத்தும் நாவலூர் வித்தகர்க்கிருந்த பெரு மதிப்பு எத் தகைத் தென்பதனை,

'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற் [றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை'

என்னும் பொருளுரை யொன்றே இனிது புலப்படுத்தா நிற்கும்.

இனி, நம் சுந்தரர், இறைவனை, மறவா மனத்தால் இறுகப் பற்றியதனையும், அதனாற் பெற்ற பேற்றினையும்,

'மழைக்கரும்பும் மலர்க் கொன்றையினானை
வளைக்கலுற்றேன் மறவாமனம் பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப் பிறவாமைப்
பெருமை பெற்றேன் பெற்றதார் பெறுகிற்பார்'

என இறுமாந் துரைப்பது, வாடிய பயிரில் மழை பொழி

வதுபோல் சோர்ந்து கிடக்கும் நம் உள்ளத்தைத் தழையச் செய்கின்றது. திருவைந்தெழுத்தினை அவர் நெஞ்சமும் நாவும் எங்ஙனம் பற்றி நின்றன என்பது,

'வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நானறியேன் மறுமாற்றம்'

'நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே'

என்பவற்றால் விளக்கமாம்.

'பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்'

என்பது, இறைவன் திருவடிப் பிழைத்தல் ஒன்றுமே உய்தியில் குற்றமாம் என்பதனை அறிவுறுத்துகின்றது.

ஏனோர்க்கு இறைவன் புரிந்த இன்னருள்கள் பலவற்றையும் எடுத்தெடுத் தியம்பி, 'யானும் அவ் வருளைப் பெறுவான் ஆதரித்து நின் திருவடி யடைந்தேன்' என்று அவர் கூறுவன பலவும், திருவடியே தஞ்சமெனப் பற்றி நிற்கும் அவரது கனிந்த உள்ளத்தைக் கவினுறக் காட்டுவனவும், உய்தி பெறற் குரியார் யாவரும் கடைப்பிடிக்கும் உறுதியான சாதனம் இதனின் மிக்க தில்லை என்பதனை காட்டுவனவும் ஆகின்றன. 'சண்டீசனும், திருநாவுக்கரையனும், கண்ணப்பனும் பெற்ற காதல் இன்னருள் ஆதரித் தடைந்தேன்' என்றும், 'அடைக்கலம் புகுந்த அந்தணனைக் காக்க அவன்மேல் வந்த காலனுயிரை வவ்வியும், அஞ்சி யடைந்த அமரரைப் புரக்க நஞ்சினை உண்டும், இலங்கையர் கோனை விலங்கற் கீழ் அடர்த்து அவன் பாடிய இன்னிசை கேட்டுக் கோலவாளொடு நாளது கொடுத்தும், சம்பந்தன், நாவரையன், நாளைப் போவான், சூதன், சாக்கியன், சிலந்தி, கண்ணப்பன், கணம்புல்லன் என்றிவர்கள் குற்றஞ் செய்யினும் அவற்றைக் குணமெனக் கொண்டும், சிலந்தியின் செய் பணி

கண்டு அதனை அரச னுக்கித் திருவும், வண்மையும், திண்டிற லரசும் செங்கனேற் களித்தும், வந்து வழிபட்ட இந்திரற்கு வான நா டாட்சி வழங்கியும், சந்தி மூன்றிலும் தாபரம் நிறுவி இறைஞ்சிய அகத்தியருக்குச் செந் தமிழ்ப் பொதியிற் சேர்வு நல்கியும், இன்னவாறு பலர்க்கும் நீ புரிந்த சீரருள்கள் பலவற்றையும் கேட்டு நின்றிருவடி யடைந்தேன்' என்றும் அவர் இயம்புகின்றார்.

"இயக்கர் கின்னரர் யமனொடு வருணன் இயங்கு தீவளி ஞாயிறு
[திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம் வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பெய்ன் றின்றிநின் றிருவடி யதனை யர்ச்சித் தார்பெறு
[மாருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன் செழும்
[பொழிற் றிருப் புன்கூருளானே."

என்பதும் காண்மின். இன்னோர் பெற்ற சீ ரரு ளெல்லாம் கண்டு, 'எனக்கு நின் பேரருள் வழங்குதியோ, வழங்க கில்லாயோ என்னும் தடுமாற்றம் நீங்கிற்' றென்பார் 'திகைப்பு ஒன் றின்றி' என்றார். இங்ஙனமாகச் சுந்தரர் திருப் பாட்டுக்களால் அறிய லாகும் முப் பொரு ளியல்பும், திப்பிய நலங்களும் அளவில்லன. அவை யெல்லாம் இச் சுருங்கிய பொழுதில் ஒருங்கு கூறுதற்காகா. சுந்தரர் திரு வருள் தோற்றுவித்த துணையானே ஒரு சிலவற்றை கண்டுக் கூறலாயினேம்.

இனி, அவர் பாட்டுக்களில் அணி நலஞ் சான்ற இன் பகுதியும் சில கூறி அமையும் கருத்தினேம்: சோணுட்டு மருத வளஞ் சான்ற பதி யொன்றினைக் குறித்து,

'அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே' என்றும்,

'கரும்புனை வெண் முத்தரும்பிப் பொன் மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே'
[என்றும்,

'சோலைமலி குயில்கூவக் கோலமயி லாலச்
சுரும்பொடுவண் டிசைமுரலப் பசுங்கிளிசொற் றுதிக்கக்
காலையிலும் மாலையிலும் கடவுளடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர் காணே' என்றும்

பாடி யிருப்பவற்றில் எதுகை மோனைத் தொடை வளங்களும், உருவகம், முரண் முதலிய அணி நலங்களும், மருட்கை, உவகை என்னும் மெய்ப்பாடுகளும் தோன்ற, இயற்கை வனப்புக்கள் எத்துணை எழில் பெற எடுத்துக் காட்டப்பெற்றுள !

'திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே'

என்பதும், வியப்பும், உவகையும் பயப்பது காண்க. மாம் பொழிலில் உள்ள மரங்கள் தளிர் ஈனுவது குறித்து,

'சீதப் புனலுண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே'

என்றியம்புவது எத்துணை இன்சுவைத்தாக உள்ளது ! மற்றும், பெருமான்றன் திருச் சடையினையும், திருமார்பின் நூலினையும் குறித்து, முறையே,

'அழல்நீர் ஒழுகி யனைய சடையும்' எனவும்,
'பளிக்குத் தாரை பவள வெற்பிற்
குளிக்கும் போல்நூற் கோமான்' எனவும்

கூறிய உவமங்கள் கழி பே ரின்பம் பயவாநிற்கின்றன. பாவலர்க்கு நல் விருந்தாகும் இன்னோரன்னவை நாவலூர் மன்னரின் வித்தகக் கவித் திறத்தை விளக்கி நிற்பன வாதல் காண்க. மற்றும், நம்பி யாரூரர்

தம் தோழமைக்கேற்பத் தம்பிரானோடு அசதியாடிக் கூறு வனவும் இன்பம் பயப்பனவே.

'காடு நம்பதி ஓடு கையது காதல் செய்பவர் பெறுவதென்'
'சிலைத்து நோக்கும் வெள்ளேறு செந்தழல் வாய பாம்பது [மூசெனும்
பலிக்கு நீர்வரும் போது நங்கையிற் பாம்பு வேண்டா பிரானிரே'

என்பன அதற்குக் காட்டாதல் அமையும். ஒரேயொரு தோழர்; அவரோ நகையாடற் கேற்ற இணக்கண மெல் லாம் நன் கமைந்தவர்; அவரை விடுத்து வேறு யாருடன் விளையாடுவர்! இன்னும் கருத்துடை அடைகளாலே சமற்காரந் தோன்றக் கூறுவன சிலவும், அவரது தோழ மைக்குப் பொருத்தமாக உள்ளன: 'கோளிலிப்பெரு மானே, குண்டையூரில் சில நெல்லுப் பெற்றேன்; அவற் றைக் கொண்டுவர ஆள் இல்லை; பாவையின் பசி வருத் தத்தை நீயும் அறிதி யன்றே? அவ் வாட் கண் மடவாள் வாடி வருந்தாமே அந் நெல்லினை அட்டித் தரப் பணிப் பாய்' என வேண்டுகின்றனர்.

'பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கை வைத் [தாய்
மாதர்நல் லார்வ ருத்தம் நீயும் அறிதி யன்றே'

என் றியப்புகின்றார். திரு வொற்றியூரிலே சூளுறவு பிழைத்து முகக் கண் மறை வுற்றவழி, அவர் பாடுவன கன் னெஞ்சையும் கரைக்கும் பெற்றியன. அவற்றுள் ஒன்றில்,

'மூன்று கண்ணுடையாய்! அடியேன் கண் கொள்வதே!'

என முறையிட்டு மன்றாடுவது அவரது உரிமையின் பெருமையை இனிது புலப்படுத்துகின்றது.

இனி, ஆலால சுந்தரர் அன்பின் ஆராமையால் எழுந்த அருமைத் திருப் பாட்டுக்களில் அமைந்த தொடர்கள் சில, மலரினும் மென்மையவேனும், அவற்றின் பொருள் வரையினும் திண்மையன; கற்பார் கேட்பாரின் நெஞ்சினைத் திறை கொள்ளுந் திறத்தன. 'குறைவிலா நிறைவே, குணக் குன்றே, கூத்தனே, கோதிலா அமுதே, வான நாடனே, வழித் துணை மருந்தே, மாசிலா மணியே! நீ யன்றி எனக் குறவாவார் யாவர்? நின்னை மறந்து வேறு எதனை நினைப்பேன்?' என்று கூறி அங்கலாய்க்கின்றார். அவ் வரு மருந்திலே சிறிது புசித்து எம் பசித்துயர் ஒழிவதாக!

**'அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே?'**

**'அன்னம் வைகும் பழனத்தணி ஆரூரானை மறக்கலும்**
**[ஆமே?'**

**'திருவாவடுதுறையுள்,**
**அங்கணனை அஞ்சலென் றருளாய் யாரெனக்குற வமரர்கள்**
**[ஏறே?'**

**'நம்பனை நன்னாறனை அமுதை நாயினேன்மறந்து என்னினைக்**
**[கேனே?'**

**'வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே?'**

நம்பி யாரூரர் திருவொற்றியூரிலே, 'அன்புநாரா, அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுக்க அலர் தொடுக்கும்' திருப்பணி புரிந்திருந்த மின்கொடி போலும் சங்கிலியாரைக் காதன் மணத்தாற் கலந்து பேரின்பம் துய்த்து வரும் நாளில், செந் தமிழ்ப் பொதியிற் றென்றல் வந்து வீசலுற்றது. திருவாரூரிலே அணி வீதி அழகரின் வசந்த விழாவை நினைந்தார்; வீதி விடங்கப் பெருமான் ஒண்ணுதலார் புடை பரந்த ஓலக்கத்திடை திகழும், பண்ணமரும் மொழிப் பாவையார் பாடலும் ஆடலும் அவர்

செவியிலும் விழியிலும் திகழா நின்றன. 'ஆ! என் முத்தினை, மா மணியை, வயிரத்தை, ஆரூர் அண்ணலை எத்தனை நாள் பிரிந்திருப்பேன்' என்று வசறவால் இனைகின்றார். அப்பொழுது அவர் பாடிய விலையிலா மாணிக்கம் போலும் திருப் பாட்டு ஒன்றினையும், அதனை நினைந்து நினைந்து உருகி யுருகிக் கருவி கரண மெலாம் சுழன்று நின்ற பெரியா ரொருவரின் அரிய பாடல் ஒன்றினையும் கூறி, இவ் வுரையை முடிக்குதும்:

"ஏழிசையா யிசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் ! என்னாரூர் இறைவனையே !!"

—சுந்தரர்

"ஏழிசையா யிசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்' என்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைந் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்
தாழியிலொன் றாவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே."

—இராமலிங்கவடிகள்

# 4. அறிவுடை நம்பி

அறிவுடை நம்பி என்பவர், அமிழ்தினும் இனிய தமிழ் மொழியின்கண் அரும் பொருட் கருவூலமாக விளங்கும் சங்கச் செய்யுட்களை இயற்றிய சான்றோருள் ஒருவ ராவர். இவர் வழிவழியாகத் தமிழினை வளர்த்த தென்னர் குலத் தோன்றல் என்பது, இவர் பெயர் 'பாண்டியன் அறிவுடை நம்பி' என அடையொடு புணர்த்து வழங்கப்படு மாற்றால் அறிய லாகும். நம்பி என்பது ஆடவரிற் சிறந்தாரை யுணர்த்துவதொரு சொல். இச் சொல் முழு முதற் கடவுளையும், மற்றும் தேவரிற் சிறந்தாரையும், கடவு ளடியாரையும் குறிக்கவும் வழங்கும். சீவக சிந்தாமணி, இராமாயணம் என்னும் காப்பியங்களின் தலைவர்களாகிய சீவகனும், இராம பிரானும் நம்பி என்னும் சிறப்புப் பெயராற் பலவிடத்தும் வழங்கப்பட்டிருப்பதும், சுந்தர மூர்த்தி நாயனார், தாம் பாடியதோரொரு பதிகத்தின் திருப்பாட் டிறுதிதோறும் 'நாட்டியத்தான் குடி நம்பீ' என இறைவனை விளித்திருப்பதும், திருத்தொண்டத் தொகையில், 'கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்' என்றாற்போல, நாயன்மார் ஒன்பதின்மர்க்கு நம்பி என்னும் அடை கொடுத்திருப்பதும், அவர்தாமும் நம்பி ஆரூரர் எனப் பெயர் சிறந்திருப்பதும் ஈண்டு அறியற்பாலன. பிங்கல நிகண்டும் ஆடவர் சிறப்புப் பெயராக இதனைக் குறித்துளது. எனவே, அறிவுடை நம்பி என்பதி லுள்ள நம்பி என்பதும் சிறப்புப் பற்றி எழுந்ததொரு பெயரே யாதல் வேண்டும். இவ் வரசர் பெருந்தகை, சிறப்பிய கல்வி யறிவும், சான்றோர்களைத் தமராகக்

கொண்டு, அவர் சொற்படி யொழுகும் நற் பண்பும் வாய்ந் தவர் என்பது தோற்றம். விழுமிய குணங்களும், மெய் யுணர்வும் சான்ற பிசி ராந்தையார் என்னும் புலவர் பெருமானர் தமக்கு ஆண்டு பலவாகியும் நரை யில்லா மைக்குக் கூறிய காரணங்களில், 'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என் றியம்பியதற்கு இலக்காக நின்றவர் இவ் வறிவுடை நம்பி என்று கருதுதல் பொருத் தமே. பிசி ராந்தையார் ஒருகால் நம்பியுழைச் சென்ற பொழுது, பொருண்மொழிக் காஞ்சியாக ஓர் அழகிய செய்யுட் கூறினர்: 'காய்த்த நெல்லை அறுத்துக் கவள மாகக் கொடுக்கப் பெற்றால், ஒரு மாவிற் குறைந்த நிலத் தில் விளைந்த கதிரும் பல நாளைக்கு உணவாகும்; நூறு செய் யாயினும், யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின், அதன் வாயின்கட் புகுந்த நெல்லினும் காலாற் கெடுக்கப் படுவது மிகுதி யாகும்; அப் பெற்றியே, அறிவுடைய அரசன் இறை கொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின், அவனது நாடு கோடி பொருளைத் தேடிக் கொடுத்து, தானும் மிகவும் தழைக்கும்; அவன் அறிவால் மெல்லிய னகி, நாடோறும் தகுதி யறியாத ஆரவாரத்தை யுடைய சுற்றத்தோடு கூடி, அருளின்றி, குடிகட்கு அன்பு கெடு மாறு கொள்ளும் பொருளை விரும்பின், அந்த யானை புக்க விளை புலம் போலத் தானும் உண்ணப் பெறுன்; உலகமும் கெடும்' என்பது அதன்கண் அமைந்த பொரு ளாகும். 'அச் செய்யுளிற் போந்த அறிவுடை வேந்தன்' என்பதற்கு இலக்கியமாக விளங்கினமையே, இவர் அறி வுடை நம்பி என்று பெயர் கூறப்படுதற்கு ஏது வாயிற்றுப் போலும்! நச்சினர்க்கினியர் கருத்துப்படி இச் செய்யுள் வாயுறை வாழ்த்தாயினும், வேம்பும் கடுவும்போல வெய்

தாகக் கூறும் சான்றோரது அறிவுரையையும் இவ்வரசர் உவப்புடன் ஏற்கும் அறிவுடையார் என்பது பெறப் படும்.

இனி, இவ்வரச கவியாகிய நம்பி பாடியனவாக நற்றிணையில் (15) ஒன்றும், குறுந்தொகையில் (230) ஒன்றும், அகநானூற்றில் (28) ஒன்றும், புறநானூற்றில் (188) ஒன்றும் ஆக நான்கு செய்யுட்கள் கிடைத்துள்ளன. அவற்றுள், அகப்பொருட் பகுதியாகிய மூன்று செய்யுளும் தோழி கூற்றாகவும், வரைவு கடாவுங் குறிப்பினவாகவும் இருத்தலின், இவரது காதற் கிழமை பற்றிய வரலாறு இவற்றின் உட்கிடை யாகுங்கொல் எனக் கருதுதல் இழுக்கன்றாம் என்க. நல்லிசைப் புலவராயினோர், தமது மெய் வரலாற்றை இங்ஙனம் குறிப்பிற் புலப்படுத்துதல் வழக்கே யென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன.

மேலே குறித்த நற்றிணைச் செய்யுள், 'வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்குச் சொல்லி வரைவு கடாயது' என்னும் கருத்தினை யுடையது. 'முழங்குகின்ற அலை கொணர்ந்து கொழித்த பெரிய எக்கர் மணலை நுண்ணிய துகிலின் நுடக்கம்போலத் தோன்றுமாறு காற்று மிகுதியாகத் தூற்றாநிற்கும் கடற் கரையையுடைய தலைவனே, நீதான், பூப் போன்ற எமது தலைவியின் நலத்தைப் புதுவதாக நுகர்ந்துவைத்தும் அதனை மறந்தா யாகலின், அதனா லாய வருத்தம் அடாா நிற்க, எமது உள்ளத்தே தாங்கு மளவும் தாங்கி, மாசற்ற கற்பினை யுடையாளொருத்தி தன் குழவியைப் பலியிடுதற்குக் கணவன் வாங்குதலும் அதனைக் கைவிட்டாற்போல, முன்னாள் முதற்கொண்டு எம்முடன் வளர்ந்து வந்த நாணினையும் கைவிட்டோம்; இனி இவ்வூர் அலரெழுவதாக' என்பது அச் செய்யுளின் பொருள்.

இதில், காற்றினால் தூற்றப்படும் நுண் மணற் பரப்புக்கு நுடங்கும் துகிலை உவமை கூறியிருப்பது இயற்கையொடு பொருந்தி யுள்ளமை காண்க. 'கடல் கொழித்து ஒதுக்கிய எக்கர் மணலிற் சிலவற்றைக் காற்று அள்ளித் தூற்றுதல் போல, நின்னால் நீக்கப்பட்ட எம்மை ஊரார் அலர் தூற்றுநிற்பர்' என இவர் உள்ளுறை அமைத்திருக்கும் திறப்பாடு பாராட்டற் குரியது. காமமும், நாணும் ஒருங்கே தாங்குதற் கரியன என்பதும், காம வெள்ளத்தால் நாண் என்னும் சிறை அழித லுண்டென்பதும்,

> "காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
> யானோ பொறேனிவ் விரண்டு"

என்னுங் குறளாலும்;

> "அளிதோ தானே நாணே..........
> ..............................
> தாங்கு மளவைத் தாங்கிக்
> காம நெரிதரக் கைந்நில் லாதே"

என்னுங் குறுந் தொகைச் செய்யுளாலும் அறியப்படும் தலைவியானவள் உயிரினுஞ் சிறந்த நாணினை அதனினுஞ் சிறந்த கற்பினாற் கைவிடுதற்கு, மடவா ளொருத்தி தனக்கு இன்ப மூட்டும் உயிரினுஞ் சிறந்த குழவியைக் கணவன் சொற் பிழையாத கற்பினாற் கைவிட்டமையை உவமை கூறியிருப்பது, நினைந்து நினைந் தின்புறற்பாலது.

இவர் பாடிய அக நானூற்றுச் செய்யுளின் பொருளாவது: "தோழி, தலைவனைப் பிரிதலரிய காமத்தால் நீ செய்யற் பாலதனை அறியாயாயினும், யான் உரைப்பதனைக் கேள்; நமது புனத்தி லுள்ள தினைகளிற் பல, கதிர் வார்ந்து கொய்தற்கு முன்பே (கிளிகளாற் கவரப்

பட்டு) வெறுந் தட்டைகளாகக் காணப்படுகின்றன: நீ தான், பன்மலர்க் கண்ணி சூடி, வேட்ட நாயுடன் மலை தொறுஞ் செல்லும் வெற்பனைப் பெறும் முயற்சி யளவில் அமைந்தனை; இனி, நீ, நின் மாலை அசையுமாறு எழுந் தெழுந்து, கிளிகளை யோட்டும் ஓசையை அவற்றின் பேச் சுக் கிடையிடையே பலகாற் சொல்லி, அவ் விடத்து அவ் வாறு ஒழுகாயாயின், அன்னையானவள், 'இவள் கிளி யோட்டுதலை அறியாள்' என்று கருதி, தினையைக் காத்தற்குப் பிறரை கொடுவந்து நிறுத்துவளாயின், பின் அவனது மலர்ந்த மார்பு உறுதற் கரிதாகும்' என்பது.

இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது ஆம். இதனால், களவுக் கூட்டத்திற்கு உண்டாகும் இடையூறு, தலை வற்குக் குறிப்பினாற் புலப்படுத்தி வரைவு கடாவுமாறு காண்க. இச் செய்யுளில் வந்துள்ள,

> "கிள்ளைத் தெள்விளி இடையிடை பயிற்றி
> ஆங்காங் கொழுகா யாயின்"

என்னுஞ் சொற்றொடர், நுண் பொருளுடைத்தாய் இன் பஞ் செய்வ தாகின்றது. தெள்விளியாயது தெளிந்த இசைபோலும் ஓசை. கிளியை ஓட்டும் அவ் வோசையை அவற்றின் பேச்சுக்கிடையிடையே சொல்லுதல் என்பது, கிளியின் பேச்சும், அதனை யோட்டும் இவளது ஓசையும் ஒரு தன்மையன என்பதும், இவள் ஓட்டுங் குரலைக் கேட்ட கிளிகள் இவளைத் தம்மின மெனக் கருதி, மீட்டும் போந்து கதிர்களைக் கவரா நிற்கும் என்பதும் பெற வைத்த படியாம். 'கிளியோட்டும கொடிச்சியின் குரலைக் கிளியின் குரலெனக் கருதி ஏனைக் கிளிகளும் தினை யின்கட் போதரும் ஆதலின், தமர் காவலை விலக்குவர்

போலும்! ஆகலின், மால்வரை நாட, தாழ்க்காது இவளை வரைந்து கொள்வாயாக' என்னும் பொருளமைத்து ஐங்குறுநூற்றிற் கபிலர் பாடிய,

" கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மோ"

என்னுஞ் செய்யுள் ஈண்டு ஒப்பு நோக்கி இன்புறற்பாலது. 'ஆங்காங்கு ஒழுகா யாயின்' என்றது, நின்னாற் கிளிகள் கடியப்படா வாயினும், ஓட்டுதல் போன்று ஒழுகா யாயின் என்ற படியாம்.

இவர் பாடிய புறப்பாட்டு,

" படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே" என்பது.

இதில், படைக்கப்படுஞ் செல்வம் பலவற்றையும் படைத்தவுடன், பலரோடு கூட உண்டலையும், செல்வர்க்கு இலக்கணமாக இவர் கூறியது சிந்திக்கற்பாலது. 'உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா மடமை' என்று பொய்யில் புலவரும் கூறியுள்ளா ரன்றே? ஔவையாரும், 'சிறுசோற்றானும் நனி பல கலத்தன்; பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன்' என அதிய

மான் அஞ்சியைப் பாராட்டியுள்ளமை காண்க. 'இடைப்படக் குறுகுறு நடந்து......மயக்குறு மக்களை' என்னும் பகுதியில், சிறு மகார் இயல்பும், அதனால், அவர் பெற்றோரை இன்பத்தில் மயங்கச் செய்யுமாறும் கூறியிருப்பது கழிபேருவகை விளைப்பதாம். 'அமிழ்தினு மாற்ற' என்னுங் குறளுரையில் பரிமேலழகரும், 'சிறு கையான் அளாவலாவது" 'இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்' என்று இச் செய்யுட் பகுதியை எடுத்தாண்டு, இதன் சிறப்பைப் புலப்படுப்பாராயினர். 'மக்களை......வாழு நாளே' என்பதன் கருத்து, 'இல் வாழ்வார் எய்தும் இருமையின்பத்திற்கும், நன் மக்கட்பேறு இன்றியமையாததாம்,' என்பது. பலரோடுண்டலாகிய ஈகையாற் புகழுண்டாமாதலின், அஃதும் அகப்பட இப் பாட்டின் பொருளை மேற்கொண்டு,

> "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
> றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
> புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
> மக்களையிங் கில்லா தவர்" எனப்

புகழேந்தியார் பாடியிருக்குந் திறன் புகழ்ச்சிக் குரியது.

> "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
> மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
> செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
> சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
> பல்லோ ருரைத்த பழமொழி யெல்லாம்
> வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி" என்னும்

அகப் பாட்டின் பகுதியும் இதனுடன் அறிந்து மகிழ்தற் குரியது.

# 5. உக்கிரப் பெருவழுதி

இறையனார் களவிய லுரையின் பாயிரப் பகுதியில், முச்சங்க வரலாறு கூறிவருமிடத்தே, கடைச் சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருள்ளிட்டு, நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்றும், நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்னும் இத்தொடக்கத்தன அவர்களாற் பாடப்பட்டன என்றும், அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்றும், அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்றும், அவர்களைச் சங்கம் இரீஇயினார், கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக **உக்கிரப் பெருவழுதி** ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்றும், அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்றும் கூறப்பட்டுள்ளன. 'நாற்பத்தொன்பதின்மர் என்ப' என்றாற்போல, ஒவ்வொன்றும் 'என்ப' என்னும் வாய்பாட்டால் முடிக்கப்பெற்றுள்ளது.

இதன்கண், உக்கிரப் பெருவழுதி கடைச் சங்கத்திறுதியில் இருந்தானாக அறுதியிட்டுரைக்கப்படுதலின், தமிழிலக்கிய ஆராய்ச்சியில் இவன் பெயர் ஒருதலையாகக் குறிக்கற்பாலதொன்றாம். இவன் கடைச் சங்கத்தின் இறுதியில் இருந்தவன் எனவே, சங்கச் செய்யுட்களைப் பாடிய புலவருள்ளும், அவராற் பாடப்பட்ட அரசர்,

குறுநில மன்னர் முதலாயினுருள்ளும் பெரும்பாலார் இவ னுக்கு முற்காலத்திலும், சிலர் நிகழ் காலத்திலும் விளங் கினர் என்பது போதரும். ஈண்டு, இவ்வாறாய இவனது காலத்தின் பின்மையைக் குறித்தற்குப் பிற சான்றுகளும் உளவோ என ஆராய்தல் தக்கது. இவ் வேந்தன் எட்டுத் தொகையுள் ஒன்ருகிய அகநானூறு என்னும் நெடுந் தொகையைத் தொகுப்பித்தவன் என்று தெரிதலின், அதி லுள்ள பாட்டுக்கள் அனைத்தும் பாடப்பெற்ற பின்னர் இவன் வாழ்ந்திருந்தனன் என்பது ஒருதலை. எனவே, இவனும், இவ்னோடு ஒத்த காலத்தினரான **சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி** என்னும் அரசர்களும், **ஐயூர் மூலங் கிழார், உலோச்சனர், பாண்டரங் கண்ணனர்** முதலிய புலவர்களும் விளங்கிய காலம் கி. பி. இரண்டாம் நூற் ருண்டின் கடைப் பகுதி என்று கொள்ளுதல் பொருத்த மாகும். யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் முதலிய அரசர்களும், நக்கீரனர், மருத னிள நாகனர், கூடலூர் கிழார், மாங்குடி கிழார் முதலிய புலவர்களும் சிறிது முன்னுக, கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தன ராதல் வேண்டும். ஔவையார், உக்கிரப் பெரு வழுதியையும், அவனுடன் ஒருங் கிருந்த மாவெண்கோ, பெருநற் கிள்ளி என்னும் சேர சோழ மன்னர்களையும் பாடியுள்ளா ராகலின், அவரும் அவர்கள் காலத்திருந்தா ராவர். ஆயின், அவர் அதியமான் நெடு மான் அஞ்சியைப் பாடியிருப்பதுடன், தாம் பரணர் காலத் தில் இருந்தமையைக் குறிப்பிடுதலானும், அவர் நீண்ட

வாழ் நாள் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றுண்மை யானும், அவரது காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் கடைப் பகுதி தொடங்கி இரண்டாம் நூற்றாண்டின் கடைப் பகுதிகாறும் ஆகும் என்னலாம்.

இனி, அகநானூற்றைத் தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதியாக, அதனைத் தொகுத்தவர் உப்பூரி குடி கிழார் மகனார் உருத்திர சன்மர் எனப்படுதலானும், இறையனார் களவிய லுரையும் அவராற் கேட்கப்பட்ட தென்பது வரலாறு ஆகலானும், திருக்குறள் மாண்பையும், திருவள்ளுவர் பெருமையையும் கிளந்தெடுத் துரைக்கும் திருவள்ளுவ மாலைச் செய்யுட்களில் உக்கிரப் பெருவழுதி பாடியதும் ஒன்றாக விருத்தலானும், களவிய லுரையின் தோற்றத்தோடும், திருக்குறள் அரங்கேற்றத்தோடும், அவ் வேந்தற்கு இயைபுண்மை புலனாகின்றது. திருவள்ளுவமாலைச் செய்யுட்கள் பற்றிய கொள்கையில் இக் காலத்தே சிலர் மாறுபட்ட கருத்தினராகின்றனர். களவியலுரை உருத்திரசன்மராற் கேட்கப்பட்டது பற்றியும், திருக்குறள் அரங்கேறியது பற்றியும் வழங்கும் கதைகளை அவ்வாறே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. திருவள்ளுவ மாலையின் தொடக்கத்திலுள்ள இரு செய்யுட்களையும், அவை பற்றிய கதைகளையும் கழித்துவிட்டு, 'முப் பால்' பாண்டியன் அவைக் களத்தே அரங்கேற்றப் பெற்றதென்றும், அப்பொழுது உடனிருந்து கேட்ட புலவர் பலரும் அதனைப் பாராட்டினரென்றும் கொள்வதில் இழுக்கொன்று மில்லை. திருவள்ளுவ மாலையில் வரும் 'வைவைத்த கூர்வேல் வழுதி', 'தாதவிழ் தார் மாற', 'வாளார் நெடுமாற' என்னுந் தொடர்கள் அவை பாண்டியன் முன்னர்ப் பாடப்பட்டன என்ப

தற்குச் சான்றாகும். 'குலபதி நாயனார்' என்றாற் போலும் சில பெயர்கள் எழுதுவோரால் திரிபுற்றிருத்தல் கூடும். கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் சிறிது முற்பட்ட காலத்தே விளங்கினமை புலப்படினும், உக்கிரப் பெருவழுதி ஆட்சி செய்திய காலம் வரை அவர்கள் வாழ்ந்திருந்து, திருக்குறள் அரங்கேறிய ஞான்று அதனைப் புகழ்ந் துரைத்தனர் என்று கோடல் பொருத்தமே யாகும். மாறுபட்ட கருத்தினர் கூறும் வேறு சில ஏதுக்கள் இக் கொள்கையை மாற்றும் வலியுடையன வல்ல.

இனி, உக்கிரப் பெருவழுதி என்னும் பெயர் 'கானப் பேரெயில் கடந்த' என்னும் அடைமொழியுடன் சேர்த்தும் வழங்கப்படுகின்றது. கானப்பேர் என்பது தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினான்கனுள் ஒன்று; இப்பொழுது காளையார் கோயில் என வழங்கப் பெறுவது. கடைச் சங்க நாளில் இஃதொரு பெரிய அரணாகவும், வேங்கை மார்பன் என்பானுக் குரியதாகவும் இருந்தது. இவ் வரசன் அவ்வரணை வென்று அதனைக் கைப்பற்றிய சிறப்புப் பற்றியே 'கானப் பேரெயில் 'கடந்த உக்கிரப் பெருவழுதி' என வழங்கப் பெற்றனன். இவ் வேந்தனது அவ் வெற்றியை ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவர் ஒரு செய்யுளில் (புறம்-21) வியந்து பாராட்டி யுள்ளார். அதில், அவ் வரணானது மிக ஆழமாகிய அகழியையும், வானுற நிவந்த மதிலையும், மரங்கள் மிக அடர்ந்த காவற் காட்டினையும் உடையதாய், அணுகுதற் கரிய சிற் றரண்களாற் சூழப் பட்டிருந்தது என்றும், அதனைக் கொல்லன் தீயில் மாட்டிய இரும் புண்ட நீரினும் மீட்டற் கரி தென்று

கருதி, வேங்கை மார்பன் இரங்குமாறு, இவன் வென்று பற்றினன் என்றும் கூறப்பட்டுள்ளன. பாடுவார் அறிவின் எல்லையைக் கடந்த புக ழமைந்தவன் என்றும், புலவரால் பாடப்படும் போர்த் துறைகளை முடித்த வெற்றியையுடையவன் என்றும் இவன் புகழப்பட்டுளான்.

இனி, இவனுக்குமுன் விளங்கிய தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் முதலாயினர், சேர சோழ மன்னர்களோடு பகைமை பூண்டு போர் புரிந்தாராக, இவ் வரசனே அவர்களோடு நண்பு பூண்டிருந்தனன். இவனும், சேரமான் மாவெண் கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும் ஒருங் கிருந்தபொழுது, ஒளவையார் இவர்களை வாழ்த்திய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது. அதில் இம் மூவர்க்கும் அந்தண ரோம்பும் முத்தீ உவமையாகக் கூறப்பெற்றுளது; உலக முழு தாளும் செல்வமும் ஓரிடத்தே நிற்பதன் றாகலின், வரைந்த நா ளெல்லாம் இன்பந் துய்த்தும், அறம் புரிந்தும் வாழ வேண்டும் என்றும், 'வாழச் செய்த நல்வினை யல்லது ஆழுங் காலைத் துணை பிறி தில்லை' என்றும் அறிவுறுத்தலும், வானத்து மீனினும் மழைத் துளியினும் பல காலம் அவர்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்துதலும் அமைந்துள்ளன.

இங்ஙனம் புலவர் பாடும் புக ழுடைய னாய இவ் வேந்தன் புலமையிலும் சிறந்தா னுவன் என்பது முற் கூறிய வரலாறுகளானே போதரும். இவன் பாடிய செய்யுட்கள் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் உள்ளன. அகப் பாட்டில், முள்ளியின் பூவைக் குறிப்பதற்கு,

'கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்'

என்று கூறியிருப்பது, ஏனைய நல்லிசைப் புலவர்களைப் போன்றே இவ் வரசன் இயற்கைப் பொருள்களை நுனித்தறிந்துளான் என்பதற்குச் சான்றாகும். இப் பாட்டிலே, தலைவி, ஊடல் நீங்கித் தலைவனைக் கூடிய திறத்தினைத் தோழிக் குரைக்கும் பெற்றி, இன்பம் பயப்பதாகும்.

நற்றிணைச் செய்யுளில், 'பன்றியானது புனத்தில் தினையை உண்ணுதற் பொருட்டு, எந்திர மமைந்த புழை வழியிலே சென்று புகும்பொழுது, பக்கத்தே பல்லியடித்தலை அறிந்து, ஆங்குச் சென்றால் ஊறு நிகழுமென் றஞ்சி, மெல்ல மெல்லப் பின்னே மீண்டு வந்து, முழையிலுள்ள பள்ளியில் தங்கும் நாடனே' என்னும் பொருளமைத்து,

'எய்ம்முள் ளன்ன பரூஉமயி ரெருத்திற்
செய்ய்ம்ம் மேவற் சிறுகட் பன்றி
௯௮ ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதிற் றாழ்ந்து
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் நாடன்!'

என்று பாடியிருப்பது, கற்றோர்க்குக் கழி பேருவகை பயப்பதாகும். இதில் அமைந்துள்ள உள்ளுறையும் அறிந்து மகிழ்தற் குரிய தொன்றாம். இவ் வரசன், பன்றியானது பல்லி நிமித்தம் பார்த்தலைக் கூறி யிருப்பது போன்றே, ஈழத்துப் பூதன்றேவனார் பாடிய அகப் பாட்டிலும்,

'முழைச்சுவற் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி'

எனக் கூறப்பட்டிருப்பது ஒப்பு நோக்கி மகிழ்தற்குரியது.

> 'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்
> [தோன்
> தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன் முறையை
> வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
> சிந்திக்க கேட்க செவி'

என்னும் திருவள்ளுவ மாலைச் செய்யுள், தெய்வப் புலமைத் திருவள்ளுவர்பாலும், திருக்குறள்மேலும் இவ்வாசர் பெருந்தகைக் குள்ள எல்லையில்லா மதிப்பைத் தெள்ளிதிற் புலப்படுத்தாநிற்கும்.

# 6. பசிப்பிணி மருத்துவன்

*'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி.'*

உலகில் மக்களை உடற்றும் பிணி பலவற்றுள்ளும் பசிப்பிணி கொடியதாகும். அஃது ஓர் உடம்பினின்று, குடிப்பிறப் பழித்து, விழுப்பங் கொன்று, பிடித்த கல்விப் பெரும் புணை அகற்றி, மற்றும் இன்ன பல தீமை செய்து, அதனால், மேல் வரும் உடம்பு கட்கும் துன்பம் செய்வ தாகலின், 'பசியென்னுந் தீப்பிணி' எனத் தெய்வப் புலவராற் கூறப் பட்டது. அப் பிணிக்கு மருந்தாவது, சோறும் நீரு மாகிய உண்டியே யாகும். ஆகலின், அவ் வுண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே யாவர்.

பண்டை நாள் தொட்டுத் தமி ழகத்தே செங்கோ லோச்சி வந்த முடியுடை வேந்தருள்ளும், குறு நில மன்னருள்ளும், பிறருள்ளும், மன்பதைகளின் பசியை வீட்டி, இசையை நாட்டிய உரவோர் பல்லாயிரவ ராவர். அவருள், இப்பொழுது எம் உள்ளத்தைக் கவர்ந்து நிற் பான் ஒருவனது வரலாற்றை ஈண் டியம்ப விழைகின்றாம். 'ஒருபிடி படியும் சீறிடம் எழுகளிறு புரக்கும் நாடு' எனச் சிறப்பிக்கப் பெறுஞ் சோணாட்டின் கண்ணே, வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியின் மருங்கு, சிறுகுடி என்னும் பதி யொன்று உளது. அப் பதியின் கண், ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளின்முன், பண்ணன் என்னும் நன்னாளன் ஒருவன், மிக்கபடை யாண்மையும்,

மேம்படு கொடை யாண்மையும் உடையனாய் வாழ்ந்திருந் தனன். வீரம், வண்மை என்னும் இரு பெருங் குணங் களும் ஒன்றோடொன்று தொடர்புடையன வாகும். தொல் காப்பியர் பெருமிதம் தோன்றுதற் குரிய தறுகண் முத லியவற்றோடு கொடையையும் சேர்த்துக் கூறியிருப் பதும், 'கொடை மடம் படுதல் அல்லது, பாரி படை மடம் படான்' என வருவது போல்வனவும் இவ் வுண்மையை விளக்கா நிற்கும். 'ஈபென விரக்குவ ராயின் சீருடை, முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம், இன்னுயி ராயினும் கொடுக்குவென், என் உள்ளம் எள்ளிய மடவோன், துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல, உய்ந்தனன் பெயர் தலோ அரிதே' எனச் சோழன் நலங்கிள்ளி கூறிய வஞ்சினக் காஞ்சியில், அவனுடைய வண்மையும், தறுகண்மையும் எவ்வளவு சிறந்து காணப்படுகின்றன! இவ் வாற்றால், 'கொடையுளு மொருவன், கொல்லுங் கூற்றினுங் கொடிய வாட் போர்ப் படையுளு மொருவன்' என்னுஞ் சிந்தாமணித் தொடர்கட்கு, 'இனி, நிலையாமையை யுணர்ந்து கொடைக்கு நிகரில்லாதவன் அதனாற் படைக்கு நிகரில னவன் என்று சொல்லிற்றுமாம்' என நச்சினார்க் கினியர் கூறிய இரண்டாம் பொருளே சாலச் சிறப் புடைத்தாதல் பெறும்.

இனி, பண்ணனது படை வீரத்தை 'வென் வேல், இலை நிறம் பெயர ஓச்சி மாற்றார், மலைம்ருள் யானை மண் டமர் ஒழித்த, கழற்காற் பண்ணன்' என வரும் அகப் பாட் டடிகளால் அறிய லாகும். அவனுடைய ஒப்புரவும், ஈகையும் ஆகிய செப்பருங் குணத்தினை இனிச் சிந்தை செய்வோமாக. காவிரியின் வட வயின் உள்ள சிறுகுடிக் கண், பூஞ் சோலையும், மாந் தோப்பும், நெல்லிக் காவும் அவ்

னுக் கிருந்தன. அவற்றிடை வாவிகுளங்களும் வயங்கின. அவனுக்கு எத்துணை விளைபுலங்களும், படப்பை முதலியவும் அமைந்திருந்தன என அறுதியிட்டுரைத்தல் சாலாதெனினும், வள்ளன்மை செலுத்திய ஒண்ணிதிச் செல்வனாகிய அன்னான், அவை நனி மிக வுடையன் என எண்ணுதல் தவறாகாது. ஆனால், அப் பெருந்தகை, அவையனைத்தையும் தனக்கெனப் பேணுந் தன்மையன் அல்லன். அச் சிறுகுடிக்கட் போதரும் பாணராயினும், புலவராயினும், மற்றியாவராயினும், அவனது பூப்பொய்கையிற் சென்று குளிப்பர்; பூங்காவினுட் புக்கு மலர் பறித்து மிலைவர்; காவினுள்ளும், தோப்பினுள்ளும் எய்தி, இனிய தீவிய நெல்லிக் கனிகளையும் மாங் கனிகளையும் பறித்து உண்பர். அவனது மனையின்கண்ணே இரவலர் எண்ணில்லாதவர் இடையறாது வந் தீண்டி அடிசில் ஆர்வர். 'கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப் பாதிரி கமழும் ஓதி,' 'கழற்காற் பண்ணன் காவிரி வடவயின், நிழற்கயந் தழீஇய நெடுங்கான் மாவின், தளிரோர் ஆகம்', 'பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப் புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர், நீர்குடி சுவையின்' என அகத்திலும், புறத்திலும் நல்லிசைப் புலவர்கள் பாடியிருப்பன காண்க. இவனது அளிநிலை பெற்ற உள்ளத்தின் உயர்வையும், ஒப்பற்ற வாழ்வையும் குறித்தற்கு, 'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன், பண்ணன்' எனச் சான்றோரொருவர் வாயாரப் புகன்ற அகப்பாட்டடியே அமைவதொன்றாகும். ஆ! 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்!!' இதனினும் எய்தற் கரிய புகழ்ச்சி யாது? இப் புகழ் தனக்கே யாகத் தனியுரிமை படைத்த இவனது பெருமை

தான் என்னே! இனி, இப் பெருந் தக்காரனைக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னுஞ் சோழர் பெருமான் பாடிய பாட்டொன்று புறநானூற்றில் உளது. கிள்ளி வளவன் எவ்வளவு பேரரசன்! எத்துணை வீரமும் வண்மையும் உடையவன்! நல்லிசைப் புலவர்கள் எத்துணையோரால் புகழ்ந்து பாடப்பெற்றவன்! 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும், வெண்டிங்களுள் வெயில் வேண்டினும், வேண்டியது விளைக்கும் ஆற்றலை' எனவும், 'மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப் புலவ ரெல்லாம் நின்னோக் கினரே' எனவும் பாராட்டப்பெற்ற வளவர்தோன்றல், பண்ணனுடைய ஈகையின் சிறப்பை உள்ளம் உருக உயர்த்துரைத்தனன் என்றால், அவ்வள்ளலுடைய ஈகையும், தூய்மையும், அவ்வரசனுக்கு அவனோ டிருந்த நட்பின் சீர்மையும் எத்தகைய வென்று யாரால் இயம்பலாகும்? புலவர் பாடும் புகழுடைப் பெருநில வேந்தனாகிய வளவன், தன்னை ஒரு பாணனாக வைத்துப் பண்ணனது ஈகையைப் பாராட்டிப் பாடியிருப்பதனை நினைத்தால், யாருடைய நெஞ்சுதான் உருகா திருக்கும்? அப் பாட்டிலே, 'யான்வாழு நாளும் பண்ணன் வாழிய' என்பது முதலடியாகும். யான் உயிர்வாழு நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக என்பது அதன் பொருள். அஃதோர் பாணன் கூற்றில் அமைந்திருப்பினும், கிள்ளி வளவன் உள்ளக் கிடையன்றோ அது? நாட்டில் வாழும் உயிர்கட் கெல்லாம் உயிராக விளங்கும் இறைவன், தான் வாழ்வதற் குரிய நாளையும் பண்ணன் பெற்று வாழவேண்டும் எனக் கருதினான் என்னில், பண்ணன்பால் அவனுக் கிருந்த அன்பின் றிறத்தை என்னென் றியம்புவது? பழுத்த

மரத்தின்கட் புள்ளினம் ஒலித்தாற்போலப் பண்ணனுடைய இல்லத்தில் ஊண் உண்டலாலாகிய ஆரவாரம் கேட்கும் என்றும், மழை பெய்யுங் காலத்தைப் பார்த்துத் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்திலே அடையுஞ் சிற்றெறும்பின் ஒழுக்கினை யொப்பப் பெரிய சுற்றத்துடன் கூடிய பாண் சிறுவர்கள், சோற்றுத் திரளைபொருந்திய கையினராய், வேறு வேறு வரிசையாக அவன் இல்லில் நின்றும் செல்வரென்றும் அப் பாட்டிலே கூறப்பட்டுள்ளன. அம் மட்டோ! 'பசிப்பிணி மருத்துவன்' என்னும் அருமருந் தன்ன பெயரால் பண்ணன் கூறப்பெற்றுள்ளான். ஆகலின், யாமும் அப் பெயரையே அவன் பெயராகக் கொள்ளலாயினம். இனி, அச் செய்யுள் யாவரும் படித்து இன்புறற் பால தாகலின் அதனை ஈண்டுத் தருதும்:

யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி அரவந் தானுங் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேருஞ்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.

——:o:——

# 7. தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் இசைப் பகுதிகள்

---

இசை என்பது மிக்க மென்மையும், நுண்மையும் வாய்ந்து, செவிப் புலனைக் குளிர்வித்து, உள்ளத்தைக் கனிவிக்கும் இனிய ஓசையே யாகும். தும்பி, வண்டு, குயில், கிளி, பூவை முதலிய உயிர்களிடத்து இவ் வின்னோசை இயற்கையாகவே அமைந்து இன்பஞ் செய்கின்றது. மக்கள், தம் நுண்ணறிவு மாட்சியால், பற்பல வகையாகிய இன்னிசைகளைத் தம் மிடற்றிலிருந்தும், கருவிகளிலிருந்தும் எழுப்புகின்றனர். இசை இயல்புகளையும், வேறுபாடுகளையும் சிறப்பாக அறியாவிடினும், பொது வகையில் இசையை விரும்பாதவர் யாரும் இல்லை. பச்சிளங் குழவியும் இசையை விழைகின்றது. ஆனினங்கள், இசையைக் கேட்டு அசையிடா திருக்கின்றன. யானை முதலிய வன விலங்குகளும், பாம்பு முதலியனவும் இசைக்கு வச மாகின்றன. அறிவே உருவாகிய ஆண்டவனும் இசையை விரும்புகின்றான். அவன் இசை வடிவமாக இருக்கின்றான் என்றும், இசையின் பயனாக உள்ளான் என்றும், இசை பாடுகின்றான் என்றும் ஆன்றோர் கூறுவர். 'ஏழிசையாய் இசைப் பயனாய்' என்று சுந்தரரும், 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' என்று அப்பரும் கூறுதல் காண்க. கலைகட் கெல்லாம் தெய்வமாகிய நாமகள் கையில் வீணையை அமைத்துள்ள நம் முன்னோர்கள் இசைக் கலையை எவ்வளவு சிறந்ததாகப் போற்றியிருத்தல் வேண்டும்?

இனி, தமிழ் மக்கள் பண்டு தொட்டு இசையை எவ்வாறு போற்றி வந்தனர் என்பதனைத் தமிழ் நூல்களின் ஆதாரவுகொண்டு நோக்குவோம். தமிழ் மொழியானது மிகப் பழைய காலத்தில் இயற் றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூன்று பெரும் பிரிவுடையதாக இருந்தது. அதனால், முத் தமிழ் என்ற வழக்கு உண்டாயிற்று. பழைய சங்க காலங்களில், முத் தமிழ்க்கும் இலக்கண இலக்கியங்கள் பற்பல இருந்தன. ஆசிரியர் அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்பது, முத் தமிழ் இலக்கணமே. தலைச் சங்கப் புலவர்கள் இயற்றிய பெருநாரை, பெருங் குருகு என்பனவும், நாரதர் இயற்றிய பஞ்ச பாரதீயம், அகத்தியர் மாணுக்கராகிய சிகண்டி என்பவர் இயற்றிய இசை நுணுக்கம் முதலாயினவும் பழைய இசைத் தமிழ் நூல்க ளாம்.

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளின் முன் தோன்றிய பே ரிலக்கண மாகிய தொல்காப்பியத்தில், இசையைப் பற்றிய குறிப்புக்களும், இசை பாடுதலையே தொழிலாகவுடைய பாணர் முதலானவர்களைப் பற்றிய குறிப்புக்களும் காணப் படுகின்றன. அந் நூலிலே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்கட்கும் வெவ்வேறு வகையான யாழ் அல்லது பண் உண்டு என்று குறிப்பிடப் படுவதால், அக் காலத்தே தமிழகம் முழுதும் இசைக் கலை பரவி யிருந்த தென்பதும், எவ் வகைக் குடி மக்களும் இசை யுணர்ச்சி உடையராய் இருந்தனர் என்பதும் பெறப்படும். இரண்டாயிரம் ஆண்டுகளின்முன் விளங்கிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர்—குழல், யாழ் என்னும் இசைக் கருவிகளைப் பற்றியும், பண்ணைப் பற்றியும் திருக்குறளில் கூறியுள்ளார். மற்றும், சங்க இலக்

கியங்கள் பலவற்றிலும் அவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சிலப்பதிகாரக் காப்பியத்தில், இசைக் கருவி களின் பெயர்களும், இலக்கணங்களும், கருவிகளிலும் கண்டத்திலும் இசைகள் பிறக்கும் முறையையும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அக் காலத்திலே, பேரி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என நால் வகை யாழ்கள் இருந்தன. பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை, தடாரி முதலிய முப்பத்தொரு வகைத் தோற் கருவிகள் வாசிக்கப் பட்டன. ஆயிரம் நரம் புடைய ஆதி யாழ் என்ப தொன்று இருந்த தென்றும், ஆதி யிசை பதினோ ராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்று (11,991) என்றும் கூறினல், பெரும்பாலார் வியப்படை யக்கூடும். ஆனல், பழந்தமிழ் நூல்கள் அவற்றின் உண் மையைத் தெரிவிக்கின்றன.

ஷட்ஜம் முதலிய ஏழிசைகளுக்கும்—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் தமிழ்ப் பெயர்கள் வழங்கின. இப்பொழுது ஆலாபனம் என்பது, ஆளத்தி என்னும் பெயரால் வழங்கிற்று. த, ந, ம, என்னும் மூன்று மெய் யினங்களோடு, குற்றெழுத்து ஐந்தும், நெட்டெழுத்து ஐந்தும், தென்ன தென என் னும் அசைகளும் ஆளத்தி செய்தற்கு உரியவா யிருந்தன. மூலாதாரம் தொடங்கி, எழுத்தின் நாதம் ஆளத்தி யாய், பின்பு இசை யென்றும், பண் என்றும் பெயர் பெற லாயின. ஜநக ராகங்கள் பண் என்றும், ஜந்ய ராகங்கள் திறம் என்றும் கூறப்பட்டன. இசைப் பாட்டுக்கள் எல்லாம் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. வரி, உரு முதலியவற்றில்

எத்தனையோ பல வகைகள் உண்டு. இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப்படுவன உருக்களில் அடங்குவனவாகும். பல வகையான கூத்துக்களோடும் வரிப் பாடல்கள் பாடப்பட்டன. **கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம்** முதலிய எண்ணிறந்த கூத்து வகைகளும், அவற்றிற் குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. மற்றும், மகளிர் கிளி யோட்டுவதும் பாட்டு; சாந் திடிப்பதும் பாட்டு. உழத்தியர் நாற்று நடுவதும் பாட்டு; களை பறிப்பதும் பாட்டு; இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக்களோடு நிகழ்ந்தன. இவ்வாற்றால் முற் காலத்தில் தமி ழகத் திருந்த ஆடவரும், மகளிரும், இசையும், கூத்தும் ஆகிய இன்ப விளையாட்டுக்களால் களி சிறந்து, உடம்பும் உள்ளமும் தளிர்த்திருந்தனர் என்னும் உண்மை புல னாகும் என்க. **அம்மனை, பந்து, ஊசல், வள்ளை** என்னும் வரிப் பாட்டுக்களைச் சிலப் பதிகாரத்தில் காண லாகும். அன்பே வடிவாகிய மாணிக்கவாசகப் பெருமான் ஓதுவார் உள்ளத்தை உருக்கும் திரு வாசகத்திலே, **தெள்ளேணம், சாழல், தோணோக்கம், உந்தி** முதலாகிய வரிப் பாடல்களை அமைத்துள்ளார் என்றால், அப் பாடல்களும், கூத்துக்களும் அந் நாளில் எவ்வளவாகக் கொண்டாடப்பட் டிருத்தல் வேண்டும்!

இனி, தமிழிலே, ஒப் பற்ற இசைப் பாக்களாக இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பன யாவை என நோக்குதும்: சிலப் பதிகாரத்தில் உள்ள **கானல் வரி, வேட்டுவ**

வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர் சூழ் வரி, குன்றக் குரவை, வாழ்த்துக் காதை என்னும் ஆறு காதைகளும் இசைப் பாக்களின் தொகுதியே யாகும்.

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய;

பொன்னி லங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணுந்
தென்னன் வாழ்க வாழ்க வென்று சென்றுபந் தடித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க வென்றுபந் தடித்துமே

என்பன, முறையே கானல் வரியிலும், வாழ்த்துக் காதையிலும் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய்மொழி முதலியனவோ, வரனொரும் அளவிடற் கரிய சிறப்புடைய இசைப் பெருஞ் செல்வக் களஞ்சியங்க ளாகும். அவற்றிற் குரிய பண்களின் இயல் பறிந்து முறைப்படி பாடுவார் தொகை அருகி வருவது பெரிதும் இரங்கத் தக்க தாகும்.

இதுகாறும் முத் தமிழில் ஒரு பகுதியான இசையைப் பற்றியே சிறிது ஆராய்ந்தோம். மற் றொரு பகுதியான இயற் றமிழை நோக்கின், அதுவும் இசையுடன் விரவியே நடைபெறுதல் புல னாகும். தொல்காப்பியனார் சொற் றொடர்களின் ஓசை யமைதிக்கு வண்ணம் என்று பெயர் கொடுத்து, அதை இருபது வகைப்படுத்தி யுள்ளனர். வல்லெழுத்துப் பயின்று வருவது வல்லிசை வண்ணம், மெல்லெழுத்துப் பயின்று வருவது மெல்லிசை வண்ணம், நெட்டெழுத்துப் பயில்வது நெடுஞ்சீர் வண்ணம், குற்

றெழுத்துப் பயில்வது குறுஞ்சீர் வண்ணம் என்று இவ்வாறு வண்ணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனாலும், செய்யுட்களெல்லாம் எதுகை, மோனை முதலிய தொடை விகற்பங்களோடு பாடப் படுதலாலும், இயற்றமிழ்ப் பாக்களும் இசை யமைதி பெற்றிருப்பது நன்கு புலனாகும். வெண்பா முதலிய பாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான இசையுடனேயே பண்டுதொட்டு ஓதப்படுகின்றன. அவற்றுள்ளும், கலிப்பா, பரிபாட்டு என்பனவற்றை இசைப் பாக்கள் என்றே பேராசிரியர் முதலிய பேருரையாளர்கள் கூறுவா ராயினர். எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடற் செய்யுட்கள் ஒவ்வொன்றுக்கும் பண் வகுத்திருப்பதும் நோக்கற் பாலது. பாலையாழ், நோதிரம், காந்தாரம் என்ற பண்கள் அதிற் குறிக்கப்பட்டுள்ளன. இசை வகுத்தோராக ஒரு பதின்மர் பெயர் அதிற் காணப்படுதலின், அப்பொழுது இசைவாணர்கள் எவ்வளவு மிகுதியாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருத லாகும். மற்றும், வெண்பா முதலிய பாக்களுக்கு இனமாக வகுக்கப்பெற்ற தாழிசை, துறை முதலாயினவும் இசைப் பாக்களே யாதல் வேண்டும்.

மற்றும், மக்களுடைய உள்ளக் கிளர்ச்சியாகிய வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பவற்றை மெய்ப்படத் தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசை யமைதி யுடையனவே என்னலாம். தொல்காப்பிய மெய்ப்பாட் டியலில், உள்ள உணர்ச்சியாகிய சுவைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டிருத்தலின், அக் காலத்திலேயே அத் தகைய செய்யுட்கள் மிக்கிருந்தன வாதல் வேண்டும். நமக்குக் கிடைத்துள்ள

இடைக் காலத்து நூல்களிலும், சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம், பெரிய புராணம் முதலியன சுவை புணர்ச்சிகள் ததும்பப் பெற்ற பாடல்களால் அமைந்தன வாகும்.

இராமன் வனம் புகுவான் என்ற சொல்லைக் கேட்ட அளவில் அயோத்தி மாநகரம் எய்திய துயரத்தைக் கம்பர் வருணித்திருக்கும் பாடலில் இரண்டை நோக்குவோம் :

*ஆவும் அழுத ; அதன் கன்றழுத ; அன்றலர்ந்த*
*பூவும் அழுத ; புனற் புள்ளழுத ; கள்ளொழுகும்*
*காவும் அழுத ; களிறு அழுத ; கால் வயப்போர்*
*மாவும் அழுதன ; அம் மன்னவனை மானவே.*

*கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார் ;*
*உய்யான்பொற் கோசலையென் றோயாது வெய்துயிர்ப்பார்;*
*ஐயா இளங்கோவே ஆற்றுதியோ நீயென்பார் ;*
*நெய்யூர் அழலுற்றது உற்றார் அந் நீணகரார்.*

அவலச் சுவை என்னும் சோக ரசம் இவற்றில் எவ்வளவு ததும்புகின்றது பாருங்கள்!

**செல்லுஞ்சொல் வல்லானெதிர் தம்பியும், தெவ்வர் சொல்லும்**
**சொல்லுஞ் சுமந்தேன் ; இருதோள் எனச்சும்பி யோங்கும்**
**கல்லுஞ் சுமந்தேன் ; கணைப்புட் டிலும்கட் டமைந்த**
**வில்லும் சுமக்கப் பிறந்தேன் ; வெகுண்டுஎன்னை யென்றான்.**

சீற்றம் தணியுமாறு கூறிய இராமருக்கு எதிராக எனது சீற்றத்தால் என்ன பயன் என்று இலக்குமணன் கூறும் மாற்றத்திலும், அவனது கோப உணர்ச்சி பொங்கித் ததும்புதலை அங்கை நெல்லியெனக் காட்டும் இச் செய்யுளின் அருமையை நோக்குங்கள். இனி, சுந்தர மூர்த்திகள்

பாவை நாச்சியாரைக் கண்டதனைத் தெரிவிக்கும்,

*கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்றன் பெருவாழ்வோ,*
*பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ, புயல் சுமந்து*
*விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ,*
*அற்புதமோ, சிவனருளோ, அறியேனென் றதிசயித்தார்*

என்னும் அருமைத் தெய்வப் பாடலில் விளங்கும் உவகை, வியப்பு என்னும் சிருங்கார, அற்புத ரச உணர்ச்சிகளை எங்ஙனம் அளவிட்டு உரைக்க வல்லேம்!

இங்ஙனம் இவ் விசை மயமாக இருக்கும் செந் தமிழ்ப் பாடல்கள் பாற் கடல்போற் பரந் துள்ளன. அவற்றை யெல்லாம் படித் தறிந்து இன்புற வேண்டுவது தமிழ் மக்கள் கடனே யாகும்.

# 8. முடங்கல்

**ப**ல்லாயிர ஆண்டுகளாகப் பனுவல்களும், ஆவணங்களும், பிறவும் இந் நாட்டிலே பனை யோலையிற் றீட்டப் பெற்று வந்தன. ஓரிடத்திலிருந்து பிறி தோரிடத்திற்குச் செய்தி தெரிவிக்க வேண்டின், அதனைப் பனை யோலையில் எழுதிச் சுருள் செய்து, காப்பிட்டு, ஏவலாளர் முதலாயினர் கைக்கொடுத்துச் செல்லவிடுவது வழக்கம். அதனை ஓலை யென்றும், முடங்க லென்றும் கூறுவர். ஓலையில் எழுதப்படுதலின் ஓலை யென்பது பெய ராயிற்று; இலை என்னும் பொருளுடைய பத்திரத்தில் வரையப்படுதலின் பத்திர மென்பது பெயராயினாற்போல. பிற் காலத்தே ஓலை யென்பது மங்கல மல்லாத செய்தி வரைந்ததாகப் பொருள் படுவ தாயிற்று. செய்தி வரைந்த ஓலையை வளைத்துச் சுருள் செய்தலின், அது முடங்கல் எனவும் பெயர் பெறும். முடங்கல்-வளைதல். முடங்கல் வரைதலைப்பற்றிய வேறு சில செய்திகளும் பின் காட்டுவனவற்றால் அறிய லாகும்:

சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதையில், மாதவி தீட்டிய முடங்க லொன்றைக் கோவலன் பெற்ற வரலாறு காணப்படுகிறது. கோவலன் மாதவி வயத்தனா யொழுகித் தன் முன்னோர் ஈட்டிய பெரும் பொரு ளனைத்தையும் இழந்து, கானல் விளையாட்டில் அவள்பால் வெறுப்புற்றுக் கண்ணகியை யடைந்து, கண்ணகி யளித்த காற்சிலம் பிரண்டனையும் வாணிக முதலாகக் கொண்டு மதுரை யெய்தி உலந்த பொரு ளீட்டுவதெனத் துணிந்து, பத்தினியாகிய கண்ணகி நல்லாளொடும் வழிக்கொண்டு,

கவுந்தி யடிகள் என்னும் சமண் சமயத் தவ மூதாட்டியாரின் சார்பு பெற்றுச் சென்று, சோணாடு கடந்து, பாண்டி நாட்டு மதுரைக் கேகு மிடையே, ஒரு நாள் இரவு நிலவில் நடந்து செல்லுங்கால், வைகறைப் பொழுதில், 'வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூல் மார்பர் உறைபதி' ஒன்றின் புறத்தை யடைந்து, மாதவத்தாட்டியொடு காதலி தன்னையும் ஓர் ஓதுக்கிடத்தே யிருக்கச்செய்து, தான் காலைக் கடன் கழித்தற்கு ஒரு நீர் நிலையை அடைவா னாயினான். அப்பொழுது, மாதவி கொடுத்த முடங்கலுடன் கோவலனைத் தேடிப் பல விடமும் சுற்றித் திரிந்து வந்த கோசிக னென்னும் வேதியன், கோவலனைக் கண்டும், துயர் மிகுதியால் அவன் உருவம் வேறுபட் டிருத்தலானும், நிறம் மயங்கித் தோன்றும் பொழு தாகலானும், ஐயுற்றவனாய், அது தெளிதற்கு, ஆங்கிருந்த ஒரு குருக்கத்திப் பந்தரை யடைந்து, 'கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய, மாமலர் நெடுங்கண் மாதவிபோன்று இவ், அருந்திறல் வேனிற்கு அலர்களைந் துடனே, வருந்தினை போலும் நீமாதவி' என்று கூறி, அதனைச் செவி யுற்று, 'நீ இங்கே கூறிய கூற்றின் பொருள் யாது?' எனக் கோவலன் வினவினமையால், ஐயத்தி னீங்கித் தெளிந்து, அவனைச் சார்ந்து, இரு நிதிக் கிழவனும் பெரு மனைக் கிழத்தியும் அரு மணி யிழந்த நாகம் போன்று வருந்தியதும், துன்னிய சுற்ற மெல்லாம் இன்னுயி ரிழந்த யாக்கை போலத் துயரக் கடலில் வீழ்ந்ததும், ஏவலாளர்கள் எத் திசையிலும் தேடச் சென்றதும், இராமன் பிரிந்த அயோத்தி போலப் புகாரி லுள்ள ளனைவரும் அறிவு கலங்கியதும்,

முன்பு வசந்த மாலையால் தனது திரு முகத்தைக் கோவலன் மறுத்தது கேட்டு மாதவி பள்ளியில் மயங்கி வீழ்ந்ததும், அவ ளுற்ற துயரங் கேட்டுத் தான் அங்கே சென்றிருந்ததும், மாதவி தன் கையால் ஒரு முடங்கல் வரைந்து, 'இதனை என் கண்மணி யனையாற்குக் காட்டுக' என்று சொல்லித் தன்னிடங் கொடுத்ததும், அதனைப் பெற்றுத் தான் பல தேயங்களும் தேடித் திரிந்ததும் ஆகிய செய்தி யெல்லாம் கூறி, மாதவியின் ஓலையைக் கோவலன் கையிற் கொடுத்தான்.

கோவலன் அதனைப் பெற்றவுடன், அதன்மீது இடப்பட்டிருந்த இலச்சினையைக் கண்டான். அவ் விலச்சினை ஓலை மடியின் புறத்து மண்மேல் மாதவியின் குறுநெறிக் கூந்தலால் ஒற்றிய தாகும். அது, மாதவி தன் னுடன் கூடி யுறைகின்ற காலத்து, அவள் கூந்தலின் வாச நெய் பூசிய தன்மையைத் தனக்கு உணர்த்திற் றாகலின், கோவலன் அதனைத் தன் கையால் விரைவில் விடு வியாதவனாய்த் தாழ்த்திருந்து, பின்பு விடுவித்து, ஏட்டினை விரித்து, அதனுட் கிடந்த உரையின் பொருளை உணர்வா னாயினான்.

'உடனுறை காலத் துரைத்தநெய் வாசங்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி யுணர்த்திக்
காட்டிய தாதலிற் கைவிட லீயான்
ஏட்டகம் விரித்தாங் கெய்திய துணர்வோன்.'

இதிலிருந்து ஓலையை முத்திரித்துக் காப்புச் செய்யும் வழக்கம் பண்டிருந்த தென்பது புலனாகின்றது! மாதவி கூந்தலைப் பொறித்து இலச்சினை யிட்டதும், அதனால கோவல னெய்திய உணர்ச்சித் தன்மையும், அவர்கள்

காதலையும், கலக்கத்தையும் வெளிப்படுத்தி, உள்ளத்தை யுருக்குகின்றன. இனி, முடங்கலின் வாசகம் வருமாறு:

'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தென்
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி :'

இதி லுள்ள முதலடிக்கு, 'தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கித் தண்டம் பண்ணினேன்; இதனைத் திருவுளத்திலே கண்டருள்க' என்று பொருள்கூறி, 'இஃது ஓலை முகப் பாசுரம்; இனி அக் காரிகை பாசுரம்' என அடியார்க்கு நல்லார் உரைத்திருப்பது சிந்திக்கற்பாலது. இஃது, ஓலை எழுதுவோர் தமது தகுதிக்கும், எழுதப் படுவோரின் தகுதிக்கும் இயைய, ஓலை முகத்தே முக மனுரை தீட்டுவோர் வழக்குண்டென்பதனைக் காட்டுகின்றது. வாசகத்தின் பொருளை, 'இரவிடைக் கழிதற்கு யான் செய்த குற்றம் ஈதென்றறியாது நெஞ்சங் கையறு நின்றது; அதனைப் பொறுக்கவேண்டும்' என அரும்பத வுரைகாரர் சுருங்கக் கூறினர். அடியார்க்கு நல்லார் ஆற்றல் பற்றி விரித்துக் கூறுகின்றார். அதனையும் சோரவுணர்ந்துகோடல் நலமெனக் கருதி ஈண்டெடுத்துக் கின்றேம்: 'வடிமொழி யுணர்ந்து குற்றந் தீர்ந்த அறிவு காட்சியை யுடைய உயர்ந்தோனே, இரு முது குரவர் பணிவிடை யொழிந்ததன் மேலும், குலத்திற் பிறந்து கற்பை யாளுத லுடையவளுடனே இரவின்கண் நகரிடையைக் கழிந்து போதற்கு வந்த பிழைப் பென்னை? அஃது அறியாது, என் பிழைப்போ வென்று அவலித்து

அாற்றிக் கவலித்துக் கையாற்றின்கண் நெஞ் சழுங்கா நின்றது; என் பிழைப் பெனினும், மகளிர்சொல் குற்ற மறுத சொல்லென்று திருவுளம் பற்றல் வேண்டும்; இதுவே யன்றி, எனக்கு இப்பொழுது நடக்கின்ற இச் செய லறவு நன் றன்று; அதனைக் கடியல்வேண்டும்; ஆத லால், இவ் வாற்றான் நினக்கு ஓர் புகழ்க் குறைபா டின்றாகப் போற்றுவாயாக!' இதன்கண், ஆற்றலால் வருவித் தெழுதியிருக்கும் பொருள்களை வாசகத்துடன் பொருத் திக் காண்க. அடியார்க்கு நல்லார் இங்ஙனம் பொருள் கூறின ராயினும், கொண்டுகூட் டின்றி வாசக ஒழுங்கின் படியே பொருள் உரைப்பது, அஃதோ ரோலை (திருமுகம்) ஆதற்கும், முறைமைக்கும் ஒத்ததாய், இன்னும் சிறப் புடைத்தா யிருக்குமெனத் தோன்றுகிறது. வாசகத்தின் ஒவ்வொரு மொழியும் பல்காற் சுவைத் தின்புறற் பால தாய திட்ப நுட்பங்கொண்டு திகழ்கின்றது. இளங் கோ வடிகள் என்னும் புலவர் பெருமான் ஏறக் குறைய ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளின் முன்னரே திருமுகம் எழுதும் பெருமித முறையினை நமக்குக் காட்டி வைத் திருக்கின்றனர்!

அடிகள் தமது சதுரப்பாட்டைப் பிறி தொரு வகை யாலும் இங்கே காட்டியிருப்பது பெரிய தோர் இறும் பூது விளைப்ப தாகும். மாதவி விடுத்த ஓலையின் வாசகத்தை யுணர்ந்ததும், கோவலன், 'அவள்பால் தீதொன்று மின்று; என் றீதே' எனத் தெளிந்து, தளர்ச்சி நீங்கி, தன் தந்தைக்குக் கோசிகன் வாயி லாகவே ஒரு முடங்கல் விடுப்பா னுயினன். அதுதான், மாதவி தனக்கு விடுத்ததே யன்றி வேறன்று. மாதவி

நீட்டிய வாசகத்தையும் பொருளையும் கோவலன் கூர்ந்துணர்ந்த போது, அவையே தன் தந்தைக்குத் தான் விடுத்தற்கும் அழகுறப் பொருந்தினமை கண்டு, அம் முடங்கலைக் கோசிகன் கையிற் கொடுத்து, 'மாசில் குரவர் மலரடியைத் திசை நோக்கித் தொழுதேன் எனச் சொல்லி, இவ் வோலையைக் காட்டுக' எனக் கூறி, 'என் பொருட்டாக அவர் எய்தியுள்ள துன்பத்தைப் போக்குதற்கு விரைந்து செல்' என அனுப்பினன். காட்டு வழியே நடந்து கொண்டிருக்கும் கோவலன், தன் தந்தைக்குத் தீட்டுமாறு வேறு ஓலையும் கருவியும் எங்ஙன் பெறுகிற்பான் எனக் கருதி, அடிகள் தமது பதி வன்மையால், இங்ஙனம் பெண் ணோலையை ஆ ணோலை யாக்கி யளித்தனர் போலும்! இதிலிருந்து, தன் ஊரிலுள்ளார்க்குத் திருமுகம் போக்குமொருவன், அங் குள்ளார் பலரில் யாருக் கெழுதவேண்டுமென்னும் முறைமையும் வெளியாகிறது. மாதவி தீதிலளெனத் தெளிந்த கோவலன், அவளை மதிப்பதற்கு, இதைப் பார்க்கிலும் இப்போது செய்யத் தக்கது பிறிதில்லையு மாகும். அன்றி, அதனைத் தன்பால் வைத்துக் கொண்டிருத்தலும் இப்பொழுது முறைமை யன் றென்பது சிந்திப்பார்க்குப் புல னாகாநிற்கும்.

இனி, கோவலற்குக் கோசிகன் கூறியனவாக முன் எழுதிய செய்திகளில், மாதவி முன் பொருமுறை கோவலற்குத் திருமுகம் போக்கின ளென்பதும் ஒன் றாகும். ஆண்டுத் திருமுக வாசகம் இம் முறையான் அமைக்கப் பெற் றிலதாயினும், அதனாலும் சில செய்திகள் உணர்ந்து கொள்ளப்படுதல் நோக்கி, அதன் வரலாற்றை இங்கே குறித்திடுகின் றாம்:

கோவலன் மாதவியுடன் கூடி இன்பந் துய்த்து வருகின்ற காலத்தில், காவிரிப்பூம் பட்டினத்து இந்திர விழா நடைபெற்றது. அவ் விழாவின் முடிவில், உவா நாளிலே நகரத்துள்ள ஆடவரும், பெண்டிரும் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும், மாதவியும் அங்ஙனமே ஊர்திகளிற் சென்று, கடற் கரையை யெய்தி, தாழை வேலியின் உள்ளிடத்தே, புன்னை நீழலி லுள்ள புது மணற் பரப்பில், சித்திரத் திரையைச் சுற்றிலும் வளைத்து மேல் விதானிக்கப்பெற்ற தந்தக் கட்டிலில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது, மாதவியானவள், தோழியாகிய வசந்தமாலையின் கையி லிருந்த யாழை வாங்கி, பண்ணல், பரிவட்டணை முதலிய எண் வகையால் இசையை எழுப்பி, மெல்லிய விரல்கள் நரம்பின் மேற் படர, வார்தல் முதலிய எண் வகைக் கரணத்தானும் பொருந்திய இசைக் கூறுகளைத் தன் செவியான் ஓர்த்து, 'பணி யாது?' எனக் கூறி, கோவலன் கையில் யாழை நீட்டினள். அவனும், அதனை வாங்கி, காவிரியை நோக்கிய ஆற்று வரியும், கானல் வரியும் முதலிய இசைப் பாட்டுக்களை மாதவியின் மன மகிழப் பாடுவா ராயினன். அங்ஙனம் பாடியவற்றைக் கேட்ட மாதவியானவள், அப் பாடல்கள் அகப் பொருட் சுவையுடன் கூடியிருந்தமையின், கோவலன் வேறு மகளிர்பால் மனம் வைத்துளா னெனத் திரிய வுணர்ந்து, யாழினைத் தான் வாங்கி, தான் வேறு குறிப்பில ளாயினும், வேறு குறிப் புடையாள் போன்று, அகப் பொருட் சுவை தழுவிய வரிப் பாட்டுக்களைப் பாடினள். அங்ஙனம் பாடியது கேட்ட கோவலன், யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந் துருத்த தாகலின், 'யான் கானல் வரி பாடத் தான் அப்படிப் பாடாது, என்னை யொழிய

வேறொன்றின்மேல் மனம் வைத்து மாய முடையாளாகிப் பாடினள்' என்றெண்ணி, அவளைத் தழுவிய கை நெகிழ்ந்தனனாய் விட்டுப் பிரிந்து, மாலைப் பொழுதிலே ஏவலாளர் சூழ்தரப் போயினன். மாதவியும், கையற்ற நெஞ்சினளாய் வண்டியிலேறிச் சென்று, தன் மனையை அடைந்தாள். அடைந்தவள், வேனிற் காலமாகலின், அதற்குரிய யாழைக் கையிலெடுத்து, கண்டத்தாற் பாடி, அது மயங்கி, யாழாற் பாட லுற்று, அதுவும் மயங்கி, பின்பு, காம ராச னுணையாலே உலக மெல்லாம் தொழு திறைஞ்சப்படும் அவனது திரு முகத்தைக் கோவலற்கு விடுப்பேமென்னும் எண்ண முடைய ளாயினள். திருமுக மெழுத அவள் கொண்ட கருவிகள்: சண்பகம், மாதவி, பச்சிலை, பித்திகை, மல்லிகை, செங்கழுநீர் என்பவைற்றால் நெருங்கத் தொடுத்த மாலையின் இடையே கட்டிய, முதிர்ந்த தாழம் பூவின் வெள்ளிய தோடு, அதற்கு அயல தாகிய பித்திகையின் முகையும், செம்பஞ்சிக் குழம்பும் ஆகும். பித்திகையரும்பை எழுது கோலாகக் கொண்டு, செம்பஞ்சிக் குழம்பிலே தோய்த்துத் தாழையின் வெண் டோட்டில் எழுதினளென்க. எழுதின வாசகம்!

'மன்னுயி ரெல்லா மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தீந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்று இஃதறி நீமின்'

என்பது. இதனைத் தன் முற்றுத மழலைச் சொல்லான்

பல காற் பேசிப் பேசி எழுதி, வசந்த மாலையைக் கூவி, "இம் மாலையி லெழுதிய பொருளை யெல்லாம் கோவலற் கேற்பச் சொல்லி, அவனை இப்பொழுதே இங்கே கொண்டு வருவாயாக' என விடுத்தாள். அவ் வோலையைக் கொண்டு சென்று அவளும் கோவலற்குக் கொடுப்ப, அவன், "மாதவி, நாடக மக ளாகலின் பலவாறாக நடிப்பது அவட்கு இயல் பன்றோ?' என்று கூறி மறுப்ப, அவள் இரக்க முற்றுச் சென்று மாதவிக்கு அதனை யுரைத் தனள். மாதவியும், 'மாலை வாரா ராயினும் காலை காண்குவம்' என மலரமளிமிசைத் துயி லின்றி யிருந் தனள். திருமுக வாசகத்தி லுள்ள நயங்களை ஓர்ந்துணர்க. வாசகமே யன்றி, அதனை வரைந்த தாழை வெண் டோட்டு முடங்கலும், பித்திகைக் கொழு முகையும், அலத்தகக் குழம்பும், மலர் மாலிகையும் காத லுணர்ச்சி யைப் புலப்படுப்பனவாதல் காண்க. இனி, இப்பொழுதை யிற்போல, எழுதுங் காகிதம் அக் காலத் திருந்திலதேனும், வெண்ணிற இதழில் செந் நிறக் குழம்பு தோய்த்துக் கூரிய முகையால் எழுதப்பெற்ற தென்னுஞ் செய்தியானது, இப்பொழுது வளர்ச்சி யடைந்திருக்கும் காகித எழுத்து முறை இரண்டாயிர ஆண்டுகளின் முன்பே கருக்கொண் டிருந்த தென்பதைக் காட்டுகின்றது.

இனித் திருமுக மெழுதுவது குறித்த பிறி தொரு செய்தி சீவக சிந்தாமணியிற் காணப்படுகின்றது. அதனை யும் ஈண்டுத் தருகின்றோம்:

தன்னை யாழில் வெல்வோரையே மணஞ் செய்து கொள்வ தென்றிருக்கும் காந்தருவதத்தை என்னும் விஞ் சையர் நங்கையை யாழில் வென்று, தன் கல்வியைத்

தோற்றுவிக்கக் கருதிய சீவகன், அச் செய்தியைத் தன் றோழனாகிய புத்திசேனனால் கந்துக்கடனுக்கு அறிவிக்க, அதனைக் கேட் டுணர்ந்த கந்துக்கடன், சீவகன் அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்தவ னாதலைப் புத்திசேனனுக்குக் கூறி, அன்ன னாயினும் கட்டியங்காரனது பகைமை அவனுக் குளது எனக் கூறும் அப்பொழுது, கோயிலிலிருந்து நாகமாலை என்பவளால் அனுப்பப்பட்ட தூதி யொருத்தி வந்து, தன் கூந்தலாகிய உறையிற் பொதிந்த, நீலமணி போலும் குவளையை எடுத்து நீட்டினள். அதனை அவன், மயிரில் முடித்த மலரென் றிகழாது, நாகமாலையின் குறிப்பால், ஒரு காரிய முள தென்று கருதி, அதனை யேற்று, அக விதழி னுள்ளிருந்த தோர் ஓலையை யெடுத்து வாசிக்கின்றான். அதனைக் கூறும் பாட்டு :

**நல்லவ ளேக்க நாய்கன் றேர்ந்துபூங் குவளைப் போதின்**
**அல்லியுட் கிடந்த வோலை தாளது சலாகை யாதல்**
**செல்லுமென் றாய்ந்து கொண்டு துகிலிகைக் கணக்கு நோக்கி**
**வல்லிதிற் சலாகை சுற்றி யோலையை வாசிக் கின்றான்**

என்பது. மறை பொருளாகத் திருமுகம் எழுத இம் முறை கையாளப் பட்டிருக்கின்றது. ஒரு சலாகையில் ஓலையை வரிசையாக நீளச் சுற்றி, அதன் மீது வாசகத்தை வரைந்து, பின் தரித் தெடுத்துச் சுருள் செய்து அனுப்புவது. இதனை நீட் டோலையாக வாசிக்க லுறின், எழுத்துக்கள் வெவ்வே றிடங்களிற் பிரிந்து கிடக்குமாகலின், வாசக வுருவினைக் காணுதல் அருமையா தாகும். ஆக, எழுதப் பட்டார்க்கு அச் சலாகை (கம்பி) யையோ, அதனை யொத்த பிறி தொன்றையோ உடன் அனுப்பியாதல், அதன் அளவினையும் வடிவினையும் தெரிவித்தாதல், அம் முறையானே அதனை வாசிக்குமாறு குறிப்பிடுதல்

வேண்டும். நாகமாலை விடுத்த ஓலையோ மிகவும் வியப்பினை விளைப்ப தொன்று. அவள், தான் எழுதிய ஓலையைக் குவளை மலரி னுள்ளே வைத்துக் கொடுக்க, தூதியானவள் அதனைக் கூந்தலினுள்ளே பொதிந்து வைத்துக் கொணர்ந்தளித்தாள். இஃது இடையே எவ் வகையானும் எத் துணையும் வெளிப்படாது போற்றுதற்குச் செய்த தொரு சூழ்ச்சித் திற னாகும். குவளை மலரோ தாளுடன் கூடியதா யிருந்தது. அத் தாள் தான் ஓலையைத் துகிலிகைக் கணக்குப்படி சுற்றி வாசித்தற் கமைந்த சலாகையாகக் காணப்பட்டது. அம் முறையானே அவனும் அதனை வாசித் துணர்ந்தான். நாமும் இவ்வளவில் இதனை நிறுத்துதும்.

---

# 9. வீரச்சுவை

சுவை என்னும் தமிழ்ச் சொல்லும், 'ரஸம்' என்னும் வட சொல்லும் ஒரே பொருள் உடையன. நாவினல் நுகரப்படும் சுவை ஆறு வகைப்படும் என்பர். செவியால் நுகரப்படுவன குண அலங்காரங்க ளாகிய சொற் சுவைகளும், ஒன்பது வகையான பொருட் சுவைகளும் ஆம். நாவாற் சுவைத்து உண்டவை அப்பொழுதே அற்றுவிடும். செவியாற் சுவைத்து உண்டவை உள்ளத்தே எப்பொழுதும் நிலை பெற்று இன்பம் பயக்கும்.

கேள்வியின் சிறப்பைக் கூற வந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

> **செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
> **வயிற்றுக்கும் ஈயப் படும்**

என்றார். இதில் பல அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. மற்றும், அவர் செவியால் நுகரும் சுவையையுணராது, வாயால் நுகரும் சுவையை மட்டும் உணர்வாரைக் குறித்து,

> **செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
> **அவியினும் வாழினும் என்?**

என மிகக் கடுமையாக இடித் துரைத்தமை கருதத் தக்கது.

இனி, பொருட் சுவை ஒன்பதாவன: நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமநிலை என்பன. இச் சுவை யுணர்வுகள், மேற் குறித்த

7

செவி வாயிலாக அன்றிக் கண் வாயிலாகவும் நிகழா நிற்கும்.

பித்தன் ஒருவன், உடல் முழுதும் சாம்பல் பூசி, கிழிந்த துணிகளையும் சுள்ளிகளையும் தொடுத்து இடையில் உடுத்தி, அலரிப் பூவும் எருக்கம் பூவும் கோத்து மார்பில் அணிந்து, அழுதலும் தொழுதலும் விழுதலும் எழுதலும் முதலியன செய்து வருதலைக் காணுமிடத்தும், அவன் ஒன்றோடொன்று இயையாத சொற்கள் பலவற்றைப் பேசுதலைக் கேட்குமிடத்தும் நகை நிகழ்கின்றது. நாடக வரங்கில் ஒருவன் பித்தனாக நடிக்குங்கால், அவனது கோலத்தையும் செய்கையையும் காண்டலாலும், அவன் சொற்களைக் கேட்டலாலும் நகை என்னும் சுவை நிகழும். மற்றும் அவன் இயல்புகளை அமைத்து நல்லிசைப் புலவர் ஒருவர் பாடிய பாட்டினைக் கேட்டலாலும் அச் சுவை நிகழும். ஏனைச் சுவைகளும் இவ்வாறே விழியானும் செவியானும் நுகரப்படுவனவாகும். இவ் விரு பொறிகளாலும் திட்ப முற உணரும் நுட்ப வுணர்வுடையார்க் கன்றி, ஏனையோர்க்கு இச் சுவைகள் உணர்தற் கரியன என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

மேற் குறித்த ஒன்பது சுவையுள், சம னிலை யாவது சாந்தம்; அஃதாவது, ஐம் பொறியும் அடங்கப் பெற்று, பிறர் வையினும், வாழ்த்தினும், வாளாற் போழினும், தாளில் வணங்கினும் மனந் திரியாது அவற்றைச் சமமாகக் கொண்டு நிற்கும் நிலைமை. அஃது உலகியலின் நீங்கினோர் பெற்றியாகலின், ஏனைய எட்டுமே காப்பியங்களிற் பயின்று வருவன வாகும்.

சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும். மெய்ப்பாடாவது, 'உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றல் வெளிப்படுதல்' என்பர் பேராசிரியர். 'புறத்து வெளிப் படுவது அகத் துணர்வே ஆகலின், சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயர் பொருந்தியதே. ஏறக்குறைய நாலா யிரம் ஆண்டுகளின் முற்பட்ட தொல்காப்பியத்திலே, மெய்ப்பாடு செய்யு ளுறுப்புக்களுள் ஒன்றாகக் குறிக்கப் படுவதோடு, தனியாக ஓர் இயலில் விரித்துரைக்கப் பெற் றும் உள்ளது. வட மொழி வாணர்கள் பிற் காலத்தில் இத னைப் பின்னும் விரித் துரைக்க லாயினர்.

தொல்காப்பியர் ஒவ்வொரு சுவையும் தோன்று தற்கு மூலமான பொருள்கள் நந் நான்கு கூறுகின்றனர். அவர், வீரம் என்பதனைப் பெருமிதம் என்னுஞ் சொல் லாற் குறிக்கின்றனர். யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின், பெருமிதம் என்னும் சொல்லால் வீரம் குறிக்கப்படுகின்றது. கல்வி, தறுகண், இசை, கொடை என்ற நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும் என அவர் கூறியுள்ளார். எனவே, போர்ச் செயலிற் காட் டும் ஆண்மையை மட்டுமே அவர் வீரம் எனக் கொண் டிலர் என்பது பெறப்படும். இந் நான்கினுள்ளும், படை வீரமும், கொடை வீரமும் பழைய இலக்கியங்களிற் பல விடத்து ஒருங்கு கூறப்பட்டுள்ளன.

நலங்கிள்ளி என்ற சோழ மன்னன், பகைவருடன் போர் தொடங்குமுன் கூறுகின்ற வஞ்சினத்தில்,

> 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
> ஈயென இரக்குவ ராயின் சீருடை'

முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்;
இன்னுயி ராயினும் கொடுக்குவென்; இந்நிலத்து
ஆற்ற லுடையோர் ஆற்றல் போற்றாது என்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே'

என்று இயம்புகின்றனன். இதில், 'பகைவராயினும் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று 'ஈ' என இரப்பாராயின், இந்த அரசாட்சியைக் கொடுப்பது பெரிதன்று; என் உயிரையே வேண்டினும் கொடுப்பேன்' என்பது அவனது கொடை வீரத்தையும், 'என் ஆற்றலையும் துணிவையும் மதியாது இகழ்ந்த அறிவிலியானவன், தூங்கும் புலியை இடறிய குருடன் போலப் பிழைத்து மீளுதல் அரிது' என்பது அவனது படை வீரத்தையும் நன்கு புலப்படுத்துதல் காண்க.

ஒரு காலத்தில், தமிழ் நாட்டு மூவேந்தரும் பாரி என்னும் வள்ளலின் பறம்பு அரணை முற்றுகையிடத் தொடங்கினர். அப்பொழுது, பாரியின் ஆருயிர் நண்பராகிய கபிலர் என்னும் புலவர் பெருமான் அங்கே போந்து, அவ் வரசர்களை நோக்கிப் பின் வருமாறு கூறுகின்றார்: 'வேந்தர்கள்! நீவிர் மூவிரும் நும் சேனையுடன் ஒருங்கு திரண்டு போர் செய்தீராயினும், பறம்பு நும்மாற் பற்றுதற்கரியது; பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடையது; அம் முந்நூறு ஊரினையும் பரிசிலர் பெற்றுவிட்டனர். நீவிர் கூத்தரும் பாணருமாகி ஆடிப் பாடி வரின், எஞ்சியுள்ள பறம்பு மலை நுமக்குப் பரிசிலாதற்குரியது. அஃதன்றி, எம்மையும் பாரியையுமே பரிசிலாக வேண்டினும் மறாது வழங்குவன் அவ் வள்ளல்.'

இதன்கண் பாரியின் படைவீரமும், கொடைவீரமும் ஒன்றின் ஒன்று சிறந்து விளங்குதல் அறியற்பாற்று.

இனி, கொடையேயன்றி, இதனைக் கொள்க வென்று ஒருவன் வலிதிற் கொடுக்கவும், அதனைக் கொள்ளேன் என்று மறுப்பின், அஃதும் வீரத்தின்பாற் படுவதே யாகும். பழைய சங்கப் புலவர்கள்பால் இத் தகைய பெருமித உணர்ச்சி ததும்பி யிருந்தமை அன்னோர் பாட்டுக்களால் அறியக் கிடக்கின்றது.

இனி, படை வீரமாகிய தறுகண்மையை மட்டும் தனித்து நோக்குவோமாக: உலகத்து வேறு எம் மொழியினும் காணப்படாத பொருளிலக்கணம் என்ப தொன்று தமிழில் இருத்தலைக் கற்றோர் அறிவர். அவ் விலக்கணம், அகப் பொருள், புறப் பொருள் என இரு பிரிவினை யுடையது. பழைய தமிழ்ச் செய்யுட்களெல்லாம் அவற்றிற்கு இலக்கியமே யாகும். அவ் விரு வகை இலக்கிய இலக்கணங்களாலும் உணர்த்தப்படுவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களுக்கு ஏதுவாகிய காத லொழுக்கமும், வீர வொழுக்கமும் ஆம். எனவே, பெரும்பான்மை பற்றிக் காதலும் வீரமும் தமிழரின் தலை சிறந்த பண்பு என முடிபு கட்டுதல் பொருந்தும்.

தமிழருடைய படைமாட்சியைக் கூறவந்த திருவள்ளுவர்,

> **கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கும்**
> **ஆற்ற லதுவே படை**

என்கின்றனர். பகைவரை வெகுண்டு நோக்கிய கண்,

அவர் வேல் கொண்டு எறியுமிடத்து இமைத்துவிடு மாயினும், வீரர்க்கு அதுவே தோல்வி யாகுமாம்!

தன்னைத் தாக்க வருகின்ற களிற்றின்மீது தன் கை வேலை எறிந்து அதன் உயிரைப் போக்கி, மேலும் தன் மீது வரும் களிற்றினை எறிதற்கு வேல் நாடித் திரியும் வீர னொருவன், தன் மார்பிலே தைத்துக் கிடந்த வேலினைக் கண்டு, அதனைப் பறித்துக்கொண்டு மகிழுகின்றானாம்! என்னே தமிழருடைய ஆண்மை!

தமிழ் மறவர் போரிற் புறங் காட்டுவது என்பது எக் காலத்தும் இல்லை. வெண்ணிற் பறந்தலை என்னும் போர்க் களத்தில், சோழன் கரிகாலனோடு போர் புரிந்த பெருஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன், தன் மார் பிலே தைத்து உருவின புண்ணும் புறப் புண்ணாகும் என நாணி, வாளோடு வடக்கிருந்து உயிர் நீத்தான் என்றால், அவனுடைய வீரத்தையும், மானத்தையும் எவ்வாறு அள விட லாகும்?

முது குடிப் பிறந்த மகளிரும் நிகரற்ற வீர வாழ்க்கையின ராவர். நரம்புகள் மேலெழுந்து தோல் திரைந்த முதியவள் ஒருத்தி, தன் மகன் போரிலே புறங்கொடுத்தனன் என்று சிலர் கூறக் கேட்டாள்; அவளுக்கு உண்டாகிய சினத்திற்கு அள வில்லை; 'என் மகன் போரிற் புறங் காட்டியது உண்மை யாயின், அவன் பாலுண்ட என் அங்கத்தைச் சிதைத்திடுவேன்' என்று போர்க் களம் அடைந்தாள்; தான் கைக்கொண்ட வாளினால் அக் களத்தே கிடந்த பிணங்களைப் புரட்டிப் பார்த்து வந்தாள்; தன் மகன், பகைவன் வேலினால் இரு கூறாகச் சிதைந்து கிடத்தலைக் கண்டாள்; ஆ! அவனைப் பெற்ற நாளினும் பேருவகை கொண்டாள்!

மற்றொரு வீர மகள், முதனாட் போரினும், அதற்கு முன்னாட் போரினும் தன் கணவனையும் தமையன்மாரையும் இழந்தவள், அன்றும் போர் முரசின் முழக்கங் கேட்டு, தன் குடிக்கு ஒருவன் போர் செய்யவேண்டு மென விரும்பி, தன் ஒரே மகனை அழைத்து, குடுமியில் எண்ணெய் நீவி, வெள்ளாடை உடுத்தி, வேலினைக் கையிற் கொடுத்து, செருமுகம் நோக்கிச் செல்க என விடுத்தாள்!

புறநானூற்றி லுள்ள இரண்டு செய்யுட்கள் இங்ஙனம் கூறுகின்றன. தமிழ் மக்களின் இணையற்ற வீர வுணர்ச்சிக்கு இதனினும் வேறென்ன சான்று வேண்டும் ?

தமிழர் இத் தகைய மறத் திறன் உடையராயினும், அறத் துறை வழுவிப் போர் செய்பவ ரல்லர். இரு பெரு வேந்தர் போர் செய்வது கருதினால், ஒருவர், ஒருவர் நாட்டு வாழும் குருக்கண்மா ராகிய அந்தணரும், பெண்டிரும், பிணி யுழந்தோரும், மணம் புரிந்து மகப் பெறா தோரும் என்னும் இவர்கட்கும், ஆனினங்கட்கும் ஏத முண்டாகாவாறு, 'யாம் போர் தொடங்குதும்; ஆகலின் நீவிர் நுமக்குப் பாதுகாவ லாகிய இடத்தை அடைவீராக' என்று முதற்கண் தெரிவிக்கும் இயல்பின ராவர். மற்றும், பொரு களத்திலும் அடி பிறக்கிட்டோரும், படையிழந்தோரும் முதலாயினாரை அவர் பொருது கொல்வா ரல்லர். எனவே, 'மன்னுயிர் காக்கும் அன்புடை' வேந்தர்க்கு மறத் துறையினும் அறமே நிகழும்' என்க.

'பகைவற் மேற் செய்யும் வன்கண்மையைப் பேராண்மை என்று சொல்வர்; அவர்க்கு ஒரு தாழ்வு

வந்ததாயின், அது தீர்த்துக்கொள்ளுதற் பொருட்டுக் கண்ணோட்டமுடன் உதவி செல்தலே, அவ் வாண்மைக்குக் கூர்மை என்று சொல்வர்' என்னும் பொருளமைத்து வள்ளுவர் கூறிய,

"பேராண்மை யென்ப தறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்னும் செய்யுள் ஈண்டு அறியற் பாலது.

சென்ற சென்ற போர்தோறும் வென்றியே புனைந்த அரக்கர் கோமானாகிய இராவணன், இராமனுடன் புரிந்த முதற் போரிலே, படைகள் யாவும் பட்டொழிய, குடையும், கொடியும் இற் றொழிய, தேர் அழிந்து, முடியொழிந்து, வில்லும் அம்பும் இன்றி வெறுங் கையனாய், நாணத்தால் முகம் கவிழ்த்து, கால் விரலால் நிலத்தினைக் கீறி நின்றானாக, அப்பொழுது அவனது நிலையைக் கண் டிரங்கிய பெருந்தகை யாகிய இராமன், அவனை நோக்கி, 'அறத்தினால் அன்றி, அதற்கு மாறாகிய மறத்தினால் அமர் வெல்லுதல் அமரர்க்கும் அரிது என்பதனை மனத்தில் உறுதியாகக் கொள்வாய்; உன் ஊரி லுள்ள கிளைஞருடன் சேருமாறு பறந்து செல்வாய்; பாவி! இப்பொழுதே என் கையால் இறந்திருப்பாய்; நின் தனிமையைக் கண்டு இரங்கி, யான் அச் செயலை நினைந்திலேன். உனக்குத் துணையாக அமைந்த சேனைகளும், பிறவும் பெருங் காற்றினால் மோதுண்ட பூளைபோல் ஆயினமை கண்டாயன்றே? இன்று போய், போர் செய்தற்கு நாளை வருவாய்' என அருள் புரிந்தனன் என்னுஞ் செய்தியைக் கம்பநாடர் தெரிவிக்கும்,

அறத்தி னாலன்றி அமரர்க்கும் அரும்பகை கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வலித்தி;
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும்; பாவி!
இறத்தி; யானது நினைக்கிலென் றனிமைகண் டிரங்கி;

ஆளை யா உனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை; இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

என்னும் செய்யுட்கள் அறிந்து இன்புறற்பாலன.

இனி, வீரச் சுவை ததும்பும் சில செய்யுட்களையும், தொடர்களையும் கூறி இவ் வுரையை முடிப்போம்: சேரன் செங்குட்டுவ னானவன், கண்ணகிக்குச் சிலை கொணர்தற் பொருட்டு, வஞ்சி சூடி வடதிசைக்குப் புறப்படத் துணிந்த பொழுது, அவன் அமைச்சனாகிய வில்லவன்கோதை கூறுவது,

'கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞாற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை'

என்பது.

தூணினின்றும் வெளிப்பட்ட நரசிங்கப் பெருமான், அவுணர் கூட்டத்தையெல்லாம் இமைப்பளவிற் கொன்று குவித்து நின்று ஆர்த்த நிலைகண்ட பிரகலாதன், 'இன்னும் உன் உள்ளத்தின் ஒன்றும் உணர்ந்திலை போலும்;

ஆழி வேந்தை வணங்குதியாயின் உன் புன்றொழில் பொறுப்பன்' என்று கூறுநிற்ப, இரணியன் அவனை நோக்கி,

> கேளிது நீயுங் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேழில்
> தோளொடு தாளும் நீக்கி நின்னையுந் துணித்துப் பின்னென்
> வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்
> நாளினும் உளதோ என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்.

கம்பர் வாயால் வெளிப்பட்ட இவ் வீரமொழிகள் தமிழருடைய ஆண்மையின் விளைவு என்பதில் ஐய மில்லை.

மனோன்மணீய நாடகத்தில், ஜீவக வழுதியானவன், தன் படை வீரர்களை நோக்கிப் போரிலே ஊக்குஞ் சொற்கள் பின் வருவன :

> 'அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னினும்
> நாட்டு அபிமானம் உள் மூட்டிய சினத்தீ
> அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு!
> வந்த இக் கயவர் நம் சிந்தையிற் கொளுத்திய
> வெந்தழற்கு அவரே இந்தனம் ஆகுக!
> இன்று நீர் சிந்தும் இரத்தம் ஓர் துளியும்
> நின்று உகம் பலவும் நிகழ்த்துமே
>
> ..................................
>
> இத்தனி போரில் நீர் எற்றிடுஞ் சயம்
> சித்ரஞ் சளித்துச் செயமாது உமக்கு
> முத்தமிட் டளித்த முத்திரை யாகி
> எத்தனை தலைமுறைக்கு இலக்காய் நிற்கும்!'

இத் தகைய செய்யுட்களைப் பயின்று, வீரச் சுவையை நுகர்ந்து, பெருமித மெய்துதல் தமிழ் மக்கள் கடனும்.

# 10. அவலச் சுவை

அவலச் சுவை என்பது வடமொழியில் 'சோகரஸம்' என்று கூறப்படும். அவலம் எனினும், அழுகை எனினும் ஒக்கும். சுவைகளைப் பற்றிப் பொதுவாகத் தெரிவிக்க வேண்டும் சில செய்திகளை முன்பு வீரச் சுவையைப் பற்றிப் பேசிய பொழுது கூறியுள்ளாம். எண் வகைச் சுவைகளில் அழுகைச் சுவையானது, இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கும் பற்றிப் பிறக்கு மெனத் தொல்காப்பியனார் கூறியுள்ளார். இளிவு என்பது பிறரால் இகழப்படும் சிறுமை. இழவு என்பது நெருங்கிய சுற்றத்தார் முதலானோரையும், இன்ப நுகர்ச்சிக்கு ஏதுவானவற்றையும் இழத்தல். அசைவு என்பது மூதுமை முதலியவற்றால் தளர்ச்சியுற்று வருந்துதல். வறுமை என்பது பொருளின்மையால் போகம் துய்க்கப் பெறாத நிலைமை. எனவே பெருமை, பொருள், இளமை, யாக்கை என்பவற்றின் கேட்டினால் உண்டாவது அழுகை என்பது பெறப்படும்.

உலகிலே தோற்றமுடையன யாவும் நிலையில்லாதன என்பது என்றும் மாறாத ஓர் வாய்மையாகும்.

> ' இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
> வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா '

என்று கூறின், அன்றென மறுப்பார் யாவருளர்? காணப்படும் யாவும் நிலை யற்றன என்று அறிந்தும், மக்கள் அவற்றின்மேல் பற்று வைப்பதற்குக் காரணம் பாச சம்பந்தமே யாகும். ஒன்றின்மீது பற்று வைத்தவர்,

அதனைப் பிரியவோ, இழக்கவோ நேர்ந்தபொழுது அதனால் துன்புறுவதும் இயல்பே. உலக முழுதும் நாம் கண்கூடாகக் காணும் காட்சி இதுவே.

ஆசிரியர் தொல்காப்பியனார் காஞ்சி என்னும் புறத்திணையால் அறிவிப்பது இந்நிலையாமையே. அத் திணையில் வரும்,

'காதலி யிழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்'

முதலாய துறைகளெல்லாம் நிலையாமையையும், அதனால் எய்தும் இன்னலையும் பலபடியாக எடுத்துக்காட்டுகின்றன. அவ் விலக்கணத்திற்கு உதாரணமாகும் எத்தனையோ பல வரலாறுகள் இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற சேர மன்னனும், பெருவிறற் கிள்ளி என்ற சோழ மன்னனும் எதிர்ந்து புரிந்த போரில் இருவரும் இறந்தனராக, அதனைக் கண்ணுற்ற பரணர் என்னும் புலவர்பெருமான், 'மிகப் பலவாக வந்த யானைகளெல்லாம் படைக்கலங்களால் இறந்துபட்டன; வெற்றி மிக்க குதிரையெல்லாம் வீரர்களோடு மாண்டு ஒழிந்தன; தேரேறி வந்த வீரரெல்லாம் ஒருங்கு மாய்ந்தார்கள்; வீர முரசெல்லாம் தாங்குவாரின்றிக் கிடந்து அழிந்தன; சாந்து பூசிய தம்முடைய மார்பிலே நெடிய வேல் பாய்ந்தமையால் அரச ரிருவரும் மடிந்தனர். ஐயோ! அவர்களுடைய வளம் பொருந்திய நாடுகள் இனி என்ன துன்பமுறுகிற்குமோ!' என்று இரங்கிப் பாடிய புறப் பாட்டு அவலத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவுள்ளது.

'ஏனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே;
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொடு ஆண்டுப்பட் டனவே;
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே;
விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குநர் இன்மையின் இருந்துவிளிந் தனவே;
சார்ந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்; இனியே
என்னா வதுகொல் தானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனற் பாயும்
யாணர் அறாஅ வைப்பிற்
காமர் கிடக்கை அவர் அகன்றலை நாடே.'

காட்டிலே ஒரு முல்லைக் கொடி படர்தற்குத் தான் ஏறி வந்த தேரை நல்கி, தன் இணையடி சிவக்க நடந்து சென்றவனும், 'கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பா ரிலை' என்று சைவ சமய குரவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளால் வள்ளன்மைக்கே எல்லையாக வைத்துப் பாராட்டப் பெற்றவனும் ஆகிய வேள் பாரி யானவன், மூவேந்தரும் புரிந்த வஞ்சப் போரிலே அஞ்சுத லுற்றான். அவனுக்கு ஆருயிர்த் தோழராயிருந்த கபிலர் என்னும் நல் லிசைப் புலவர், அவன் இறந்ததற்கு மிக வருந்திப் பலவாறு புலம்பினராய், பாரியின் மகளிர் இருவரையும் தக்கோர்க்கு வாழ்க்கைப் படுத்தித் தமது நட்புக் கடன் கழிக்க எண்ணி, அன்னாரை உடன் அழைத்துச் சென்றனர். சென்றவர், ஒரு நாள் ஓரிடத்தில் தங்கியபொழுது, மாலைப்பொழுது வர,

நிறை மதி உதய மாயிற்று. அதனைக் கண்டபொழுது, அதற்கு முந்திய நிறை மதியில் தாம் இருந்த நிலைமையும், அன்று எய்திய நிலைமையும் பாரி மகளிர் உள்ளத்துட் புகுந்து வாட்டின. அப்பொழுது அவர்கள் கூறிய,

‘அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றங் கொண்டார் யாம் எந்தையும் இலமே’

என்னும் அருமைச் செய்யுள் நம் நெஞ்சினை உருக்கு கின்றது.

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளல், தான் ஒரு மலை யுச்சியிலே அருமையாகப் பெற்ற அமிழ்த மய மான நெல்லிக் கனியை, நல்லிசைப் புலமை வாய்ந்த ஔவையார் உண்டு நெடு நாள் உயிர் வாழவேண்டு மெனக் கருதி அவருக் களித்தவன்; பலகாலும் அருமை பாராட்டி அவரைப் பேணியவன்; அவன், மாற்றா னுடைய வேல் பாய்ந்து உயிர் துறந்தபோது, ஔவை யார் மனம் நைந்து, அவன் பண்புகள் பலவற்றையும் சொல்லிச் சொல்லி அரற்றுகின்றவர், ‘அவன் மார்பில் தைத்த வேல், பாணருடைய உண்கலத்தைத் துளைத்து, இரப்போர் கையிலும் தைத் தூருவி, அழகிய சொல்லையும், நுண்ணிய ஆராய்ச்சியையு முடைய புலவர் நாவிலே போய் வீழ்ந்தது. எமக்குப் பற்றுக்கோ டாகிய எம் இறைவன் எவ்விடத் துள்ளான் கொல்லோ? இனிப் பாடுவாரும் இல்லை; பாடுவார்க்கு ஒன்று ஈவாரு மில்லை.

பகன்றையின் பெரிய மலர் பிறரால் சூடப்படாது கழிந் தாற் போல, பிறர்க்கு ஒன்று ஈயாது கழியும் உயிர்கள் மிகப் பல உள்ளனவே!' என்று கூறி இரங்குவா ராயினர்.

இன்னும் வறுமைத் துன்பின் செறிவை உரைப் பனவும், தம்மைப் புரந்தோர் தாமாய்ந்திடவே புலவர் கள் புலம்பி அலமரலை அறிவிப்பனவும், கணவனை யிழந்த துணைவாக் காதலி தீப் பாய் செய்தி தெரிவிப்பனவும், கைம்மை நோன்பின் வெம்மை விரிப்பனவும் ஆகி, கற் போர் உள்ளத்தைக் கலங்கச் செய்யும் எத்தனையோ பாட் டுக்கள் புற நானூற்றில் உள்ளன.

தன் பெற்றோர் அளித்த பெரும் பொருட் குவியலை இழந்த கோவலன், கண்ணகியின் காற் சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு பொரு ளீட்டக் கருதி, அந் நங்கை யுடன் மதுரையை யடைந்து ஆயர் சேரியில் இருந்த பொழுது, மா பெரும் பத்தினியாகிய கண்ணகி, திரு முகம் வியர்க்கவும், செங்கண் சேப்பவும் தன் கையால் அட்ட அறுசுவை யுண்டியைக் கோவலற் களித்து, வெற் றிலைச் சுருளும் பாக்கும் விருப்புடன் நல்கி நின்றாள். அப் பொழுது, கோவலன் அவளை அருகே அழைத்து அணைத்து, 'நின் மெல்லிய அடிகள் கல் லதர்க் கானம் கடத்தற்கும் வல்ல வாயினவோ? இது மாயம் கொல்லோ? வல் வினை கொல்லோ? யான் உளங் கலங்கி யாவதும் அறியேன்;

**'குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்**
**அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி**

நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்து ஈங்கு என் றுயர் களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்,
நாணின் பாவாய், நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி.'

யான் இனது சீறடிச் சிலம்பின் ஒன்றினைக் கொண்டு போய் மாறி வருவேன்; மயங்காதிருப்பாய்' என்று கூறி, அவள் தனித்திருக்கப் பிரிய லாற்றாது, உள்ளம் வெதும்பி, தன் கண்ணீரை மறைத்துச் செல்லா நிற்பதும், சென்றவன் அன்றே கொலையுண்ட தீச் செய்தியைக் கேட்ட கண்ணகி,

'பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன்கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்'

ஆகி, அரற்றி, 'காவி யுகு நீரும், கையிற் றனிச் சிலம்பும், ஆவி குடிபோன அவ் வடிவு'மாய், அரசவை யெய்தி, வழக்குரைத்து, 'கீழ்த் திசை வாயிற் கணவனொடு புகுந்தேன், மேற் றிசை வாயில் வறியேன் பெயர்வேன்' என்று கூறி, இரவும் பகலும் மயங்கிக் கையற்று, வையைக் கரை வழியே ஏகாநிற்பதும் ஆகிய செய்திகள் எவ்வளவு வெவ்விய துயர் விளைக்கின்றன!

சீவக சிந்தாமணி என்ற செந் தமிழ்க் காப்பியத்திலே, சச்சந்த மன்னன், கட்டியங்காரன் என்னும் தீ யமைச்சன்பால் அரசினை ஒப்புவித்து, அவனாற் கொலையுண்டு இறந்தானாக, அவன் தேவியாகிய விசயை, மயிற்பொறி ஊர்ந்து சென்று, நகரின் புறத்தே யுள்ள புறங்

காட்டிலே நள்ளிருளில் புதல்வனை யீன்று, அப் பாலனை நோக்கி, 'அரசே! நின் தந்தையானவர், சோதிடர்கள் பலருங் கூடிச் சாதகஞ்செய்ய, வேந்தர்கட்கெல்லாம் திருமுகம் விடுத்து, 'பன்னீ ராண்டு வரியை ஒழிமின்; கோயில்களும், அறச் சாலைகளும் புதுக்குமின்; பகைவர்களைச் சிறைவிடுத்துச் சிறைக் கோட்டத்தைத் தூய்மையாக்குமின்; பண்டாரத்தைத் திறந்துவிட்டு ஏழுநாள் காறும் வேண்டுவார் வேண்டுமாறு ஆடை அணிகலன்களும், செம்பொன்னும் கவர்ந்துகொள்ள விடுமின்; புலவர்களுக்குத் தேரும், யானையும், பட்டும், பொன்னும் வரைவின்றி வீசுமின் என்று கூறிக் கொண்டாடப் பிறக்கும் நீ, தீவினையேன் காண இவ்வாறு பிறப்பதோ?

"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டியாங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே.

பற்றா மன்னன் நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்றா ரில்லாத் தமியேனால் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய் நீ வளரு மாறும் அறியேனால்
எற்றே இதுகண் டேகாதே இருத்தி யாலென் இன்னுயிரே"

என்று அவலித்து அரற்றுவது கருங்கல் நெஞ்சையும் கலங்கச் செய்வது காண்மின்!

பாரதப் போரிலே, அருச்சுனன் மைந்தனாகிய அபிமன் இறந்த செய்தியைக் கூறும் வில்லிபுத்தூரார், தாம் முன்பு நிகழ்ந்ததொரு வரலாற்றைப் பாடும் கவிஞர் என்பதை மறந்தவராகி, புத்திர சோகம் மேலிட்ட தந்தையே போன்று,

மாயனும் திருமாமன் தனஞ்சயனும் திருத்தாதை
வானோர்க் கெல்லாம்
நாயனும் பிரமக் கமற் றெருகோடி நாரதிபாரம்
நண்பாய் வந்தோர்
சேயனும் அபிமனுவாம் செயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வேறு
ஆயநாள் அவனிதலத் தவ்விதியை வெல்லும்வகை
யார்வல் லாரே;

கன்னனையுந் தோழி தான் கந்தனிலும் வலியனே அந்தோ! அந்தோ!
மன்னவர்ஐ வருமிருக்க மைந்தனுயிர் அழிவதோ அந்தோ! அந்தோ!
பொன்னுலகோர் வியர்தருகிப் புத்தியினல் மலர்சொரிந்தார்
அந்தோ! அந்தோ!
அன்னநெடுந் துவசன் இவற் காயுமிகக் கொடுத்திலனே
அந்தோ! அந்தோ!

என்று புலம்புவாராயினர். கவிக் கூற்றிலேயே இவ்வளவு சோகம் ததும்பக் கூறிய அவர், தருமன், வீமன், அருச்சுனன் முதலானவர்கள் எய்திய துயரத்தை எவ்வாறு கூறியிருப்பர் என்பது யாவரும் அநுமித்தற் குரியதே. தருமன் அரற்றுதலைத் தெரிவிக்கும் செய்யுட்களில் ஒன்றை நோக்குவோம்:

பிறந்த தினம் முதலாசப் பெற்றெடுத்த விடலையினும் பீடும் தேசும்
சிறந்தனையென் றுனைக்கொண்டே தெவ்வரைவென் றுலகாளச்
சிந்தித் தேனே
மறந்தனையோ எங்களையும் மாலையினல் வளைப்புண்டு மருவார்
போரில்
இறந்தனையோ என் கண்ணே என்னுயிரே அபிமாஇன் றென்செய்
தாயே!

இவ்வாறே இராமசரிதை, நளசரிதை, அரிச்சந்திர

சரிதை முதலியவற்றைக் கூறும் காப்பியங்கள் பலவற்றிலும், சோகம் மிகுந்த பகுதிகள் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன. சோகம் என்பது அகத்தில் எழும் ஓர் துன்ப உணர்ச்சியே யாயினும், நல்லிசைப் புலவர்கள் அதனை மேலும் மேலும் விரும்பி நுகரும் சுவையாகச் செய்துவிடுகின்றனர். இங்ஙனம் அவலச் சுவையைக் கவிகள் மூலமாக அநுபவிக்கும் நாம், அதினின்றும் தெளியவேண்டுவன சில உள்ளன. உலகில் இன்ப துன்பங்கள் மாறிமாறி நிகழ்ந்துகொண்டேயிருக்கும். யாதேனும் ஒரு துன்பம் வந்துற்றபொழுது, 'ஐயகோ என் செய்வோம்!' என்று அதில் அமிழ்ந்துவிடாது, 'இஃது உலகியற்கையே' எனவும், 'எத்தனையோ பெரியோர்கள் எல்லை யில்லாத் துன்பங்களை அடைந்திருக்கையில் யாம் எவ்வளவு?' எனவும் எண்ணி நம்மைத் தேற்றிக்கொள்ளுதல் வேண்டும். ஏனையோர் துன்புறுதலைக் காணுமிடத்து, அதனை நமக்கு வந்த துன்பம் போல் நினைந்து நினைந்து உருகுதல் வேண்டும். இவ் வக உணர்ச்சியானது கருணை யெனப்படும். மற்றும், துன்பத்தின் காரணத்தை அறிந்து நீக்கி, நிலையான இன்பத்தைப் பெறுவதற்கு முயலுதலும் வேண்டும்.

# 11. இன்பச் சுவை

இன்பச் சுவை என்பது வடமொழியில் 'சிருங்கார ரஸம்' என்று கூறப்படும். சுவைகள் பலவற்றுள்ளும் இதுவே சிறந்ததெனக் கொள்ளப்படுகின்றது. திருக்குறள், காமத்துப்பால் அவதாரிகையில், 'ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளால் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம வின்பத்தினை. இச் சிறப்புப் பற்றி வடநூலுட் போச ராசனும், 'சுவை பல வென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச் சுவை யொன்றனையுமே' என இதனையே மிகுத்துக் கூறினான்.' எனப் **பரிமேலழகர்** பகர்ந்தனர். காம வின்ப மானது ஒருகாலத் தொருபொருளால் ஐம்புலனும் நுகரும் பான்மையது என்னும் ஒள்ளிய கருத்தினை,

> **கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
> **ஒண்டொடி கண்ணே யுள**

என்னும் வள்ளுவர் வாய்மொழி தெள்ளிதின் விளக்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனார், இச் சுவைக்கு உவகை என்று பெயர் கூறி,

> **செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று**
> **அல்லல் நீத்த உவகை நான்கே**

என்னும் சூத்திரத்தால், உவகைச் சுவைக்குப் பற்றுக் கோடானவை செல்வமும், அறிவும், புணர்ச்சியும், விளையாட்டும் ஆகு மென விளம்பினர். அவர், ஏனைய நகை முதலிய சுவைகளைப் போன்றே, இதனையும், அகத்திற்கும்

புறத்திற்கும் பொதுவாக ஓதியுள்ளார். அகப் பொருளாகிய இன்பத்திற்கு, இச் சூத்திரத் துள்ள புணர்வு என்பதனாற் குறிக்கப்படும் காதலே ஆதார மாகும். செல்வம் முதலாயின வெல்லாம் அதற்குத் துணை யாகும் இயல்பினவே.

அகப் பொருளாவது, 'ஒத்த அன்பால், ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக் கூட்டத்தின் பின்னர், அவ் விருவரும், ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வா றிருந்தது எனக் கூறப் படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்ப முறுவ தோர் பொருள்' என்பர் நச்சினார்க்கினியர். அங்ஙனம் ஒத்த அன்புடைய இருவரும் கூடி யொழுகும் ஒழுக்கத்தை, கள வொழுக்கம் எனவும், கற் பொழுக்கம் எனவும் இரண்டாகப் பகுத் துரைப்பது தமிழ் நூன் முறை. அவற்றுட் களவாவது, உருவும், திருவும், பருவ மும், குலனும், குணனும், அன்பும் முதலியவற்றால் ஒத்த தலைமகனும், தலைமகளும் அடுப்பாரும், கொடுப்பாரும் இன்றி, பால் வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடி யொழுகுவது. கற்பானது, அவ்விருவரும் முறைப்படி வரைந்துகொண்டு, இல்லிலிருந்து அறம் புரிந்து ஒழுகுவது.

புணர்வு என்பது, மெய்யுறு புணர்ச்சியை யன்றி, உள்ளப் புணர்ச்சியையும் குறிக்கும். உள்ளப் புணர்ச்சி யாவது, அன்பால் இருவர் உள்ளமும் கலத்தல். எனவே, இவ் வொழுக்கத்திற்கு அடிப்படையானது அன்பு அல்லது காதல் என்பது பெறப்படும். இப் பிறப்பிலே,

யாதொரு முற்றொடர்பும் இன்றி, கண்ட மாத்திரத்தே அவர்களுக்குள் உண்டாகும் இக் காதலுக்குக் காரணம், முற்பிறப்பின் தொடர்ச்சியே ஆதல் வேண்டுமன்றோ? எனவே, தலைவன் தலைவியர்க்குள் தோன்றி வளரும் இவ் வன்பானது, எழுமையும் தொடரும் உழுவலன்பாம் என்பது பெறப்படும். இவ்வுண்மை,

> ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

என்று தொல்காப்பியராற் கூறப்பட்டுள்ளது. எல்லாப் பிறப்பிலும் உயிரொன்றி, ஒருகாலைக் கொருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே, ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படுவர் என்பது அதன் பொருளாகும். இத் தகைய அன்பின் மென்மையும், மேன்மையும், தூய்மையும், சீர்மையும் தமிழ் நூல்களில், பலபடியாகப் பாராட்டப்படுகின்றன.

> மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
> செவ்வி தலைப்படு வார்

என்றார் திருவள்ளுவர். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் புறப்பொருளைக் காட்டிலும், அகப் பொருளே விரித்தும், மிகுத்தும் கூறப்பட்டுளது. அவை யாவும் அன்பின் சிறப்பை விளக்குவனவே யாகும். மெய்ப்பாட்டிய லுள்ளும், அகப் பொருள் பற்றிய நிகழ்ச்சிகளே விரித் துரைக்கப்பட் டுள்ளன. மற்றும், ஆலவாய்ப் பெருமான் அருளால் அகப் பொரு ணூல் ஒன்று வெளியாயதும், அன்பே வடிவாகி இன்ப வெள்ளத்திற் றிளைத்த மாணிக்கவாசகப் பெருமான் அகப் பொருட் கோவை யொன்று அருளியதும், அகப் பொருளின் விழுப்பத்திற்கு உறு சான்றாகும். அன்பு என்பது, மக்கள் வாழ்க்கையின்

எல்லா நிலைகளிலும் ஊடுருவிச்சென்று பயன் விளைப்ப தாகலின், அதனை விளக்குவதாகிய அகப் பொருளைச் சான்றோர் பலரும் இங்ஙனம் விரித் துரைத்தாராவர்.

இனி, காதலால் இருவர் நெஞ்சமும் கலத்தலைப் புலப்படுத்தி, இன்பச் சுவையை நன்கு தோற்றுவிக்கும் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றை நோக்குதும்:

> யாயும் ஞாயும் யாரா கியரோ?
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
> யானும் நீயும் எவ்வழி அறிதும்?
> செம்புலப் பெயனீர் போல
> அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.

தெய்வத்தால் நிகழ்ந்த கூட்டத்தின் பின்பு, தலைவி யானவள், தலைவன் தன்னைப் பிரிவானோ என ஐயுற்ற தனைக் குறிப்பா லறிந்து, 'என் தாயும் நின் தாயும் முன்பு எத் தகைத் தொடர்பினர்? என் தந்தையும் நின் தந்தையும் எம் முறையில் உறவினர்? யானும் நீயும் முன்பு எவ் விடத்தில் அறிந்துள்ளோம்? இம் மூன்றும் இல்லையாகவும், செந் நிலத்தில் பெய்த நீர்போல, தெய் வத்தின் தூண்டுதலால் நம் இருவர் நெஞ்சமும் கலந்து ஒன்றுபட்ட வாகலின், இனிப் பிரிவு என்பதும் உளதோ?' எனத் தலைவன் கூறினான் என்க.

> 'தேவரிற் பெற்றநம் செல்வக் கடிவடி வார்திருவே
> யாவரிற் பெற்றினி யார்சிதைப் பார்'

என்னும் மணிவாசகர் திருவாக்கும் இக் கருத்தினதே.

மிதிலையிலே, திருவீதியிற் சென்றுகொண் டிருந்த இராமனும், கன்னிமாடத் தும்பரில் நின்ற சீதையும்

ஒருவரை யொருவர் கண்டு, காதல் கொண்டதனைத் தெரி விக்கும் கம்பநாடர் கவிதைகள் பெரிதும் இன்பம் பயப் பன வாகும்.

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்.

திருமண நிகழ்ச்சியின் முன்பு அவ் விருவரும் ஒருவரை யொருவர் கண்டனராக வான்மீகி கூறா திருப்பவும், தமிழ் மரபு கருதியே, கம்பர் இங்ஙனம் சித்திரிப்பா ராயினர். இவருடைய காட்சியின் இயல்பையும், அத னொடு ஒருங்கு நிகழ்ந்த உள்ளக் கலப்பையும் தெரிவிக்கும் அவரது வித்தகக் கவித் திறமை எங்ஙனம் விளம்ப வல்லேம்?

இனி, அன்பால் உள்ளங் கலந்த தலைவன் தலைவியர்க் குள் நிகழும் கூட்டம், பிரிவு, ஆற்றியிருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐவகை யொழுக்கங்களில், இரங்கலும், ஊடலும் முறையே அழுகையும், வெகுளியுமாகத் தோன் றினும், அவை காதலைச் சிறப்பிப்பனவே யாதலின், அவற்றையும் இன்பச் சுவை யென்றே கோடல்வேண்டும். ஆனால், பழைய உரையாசிரியர்கள் வெவ்வேறு மெய்ப் பாடுகளாகவும் அவற்றைக் குறித்திருப்பது சிந்திக்கற் பாலது. ஒரோவழி அவை ஒருங்கியைந்து வருதலும்,

இன்னது இதுவெனத் துணிய லாகாவாறு மயங்கி வருதலும், வியப்பு முதலிய ஏனைச் சுவைகளோடு விரவி வருதலும் உண்டு. கணையாழியைப் பெற்ற கற்பினுக் கணியாய சீதை எய்திய நிலைமையைத் தாசரதிக்கு உரைக்கும் மாருதியின் கூற்றில் அமைந்த,

> **ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிமணி யாழி ஆன்ற**
> **திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்**
> **விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னால்வெந்து**
> **உருகியது உடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளூற**

என்னும் அருமைச் செய்யுளின் சுவை, பல்கால் நுகர்ந்து இன்புறற் பாலது. பிராட்டி தன் மார்பில் அணைத்த ஆழியானது, விரகத்தால் உண்டாய வெப்பத்தால் உருகியதும், உவகையால் ஆய தட்பத்தால் ஆறி இறுகியதும் ஒருங்கு நிகழ்ந்தனவாகக் கூறப்படுதலின், இதன்கண் அழுகை, உவகை என்னும் சுவைகள் இயைந்துள்ளமை பெறப்படும். ஒருகணத்து இரண்டும் நிகழ்ந்தன என்றமையால் வியப்பும் தோன்றுநிற்கும். இவற்றுள் வியப்பும், அழுகையும் உவகையைச் சார்ந்து, அதனைச் சிறப்பிப்பனவாகக் கொள்ளுதல் தகுதியாம்.

கண்ணகியின் காற் சிலம்பை முதலாகக்கொண்டு வாணிகஞ் செய்தல் கருதி, மதுரைக் கேகும் **கோவலன்,** செல்லும் நெறியில், மாதவி விடுத்த ஓலையைக் **கோசிகன்** என்னும் மறையோனாற் பெற்று, அதன் மடிப்புறத்து மண்ணின்மீது, **மாதவி** குறுநெறிக் கூந்தலால் ஒற்றிய இலச்சினையைக் கண்டு, அது, தன்னுடன் கூடி யுறையும் காலத்தே வாச நெய் பூசிய தன்மையை உணர்த்திற்று

ஆகலான், அதனை விரைவில் விடுவியாதிருந்தனன் என்பதில் மெய்ப்பாடு இன்னதெனத் துணிதற்கரிதாகின்றது.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

என்னும் தலைவி கூற்றில் வியப்பும், இன்பமும் விரவியுள்ளன. இனி, தலைவன் கூற்றிலும், தலைவி கூற்றிலும் வரும், சுவைமிக்க பாட்டுக்களில் ஒவ்வொன்று காட்டுதும்: திருக்கோவையாரில் உள்ள,

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பார் அறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில் வெற்பில்
கற்பா வியவரைவாய்க் கடிதோட்ட களவகத்தே

என்னும் அருமைச் செய்யுளும், தலைவனானவன், 'நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கண் கூட்ட அமுதமும் அதன்கட் கலந்து நின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள்கண்ணே யொடுங்க, யான் என்பதோர் தன்மை காணா தொழிய, இருவர் உள்ளங்களும் ஒருவேம் ஆமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கண் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரான் அறியப்படும்' என்று மகிழ்ந்துரைத்தான்; உரைப்பக் கேட்ட தலைமகளும், எப்பெருமான் என்கண் வைத்த அருளினாலன்றோ இவ்வகை அருளியதென்று இறப்பவும் மகிழ்வாளாம்' எனப் பேராசிரியர் விளக்கிய அதன் கருத்தும் இன்பச் சுவையை இனிது புலப்படுத்தா நிற்கின்றன.

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே.

இந் நற்றிணைச் செய்யுளில், தலைவியானவள், தான் வருந்தும்படி தலைவர் தன்னைப் பிரியார் என்று தோழிக்குக் கூறுபவள், அதற்கு ஏதுவாக, தலைவர் நிலைபெற்ற வாய்மையை உடையர் என்றும், நெடிது தோன்றும் இனிய குணங்களுடையர் என்றும் உரைப்பதும், அவருடைய நட்பானது தாமரையின் தாதினையும், சந்தனத்தின் தாதினையும் ஊதிச் சந்தன மரத்தில் வைக்கப்பெற்ற தேன்போல மேன்மையுடைய தென்று விளம்புவதும் இன்பம் பயக்கின்றன. இதி லுள்ள உவமையானது, இருவர் உள்ளத்தின் தூய்மையையும், ஒத்த அன்பின் சீர்மையையும் இனிது விளக்குதல் காண்க.

இனி, அன்பு என்பதன் இயல்பும், அதனால் விளையும் நலங்களும் மனோன்மணீய நாடகத்தில், வாணியின் கூற்றில் வைத்துக் கூறப்பட்டிருப்பன அறிந்து மகிழற்பாலன:

'நேயமும்
ஆக்கப் படும்பொருள் ஆமோ? நோக்கில்
அன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியும் கானல் விரியும் பாலையில்

திரியும் மனிதர் நெஞ்சம் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்றா யிருந்து அவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாய்அவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாய்அவ ளூக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்திற்கு அளவு கோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றும் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொருள் ஆமோ?'

இதுகாறும் கூறியவாற்றால், 'பிறப்பே குடிமை' என்னும் சூத்திரத்தில் தொல்காப்பியர் கூறிய ஒற்றுமை பலவு முடைய தலைவனும் தலைவியும் அன்பாற் கலந்து வாழும் ஒழுக்கத்தைத் தெரிவிக்கும், பாவாணரின் செய்யுட்களில் அமைந்த சுவையே இன்பச் சுவை அல்லது சிருங்கார ரஸம் ஆகும் என்பது பெறப்படும்.

57279

—✠—